வீதி சரியில்லை,
மின்சாரமும் இல்லை
குடிசையிலேயே
பிறந்தது குழந்தை
பலாலி வடக்கில்
மீளக்குடிய மர்ந்த
பகுதியின் அவலம்
பக். 02

விலை
ரூபா 20

பக்கங்கள்
28

# உதயன்

34c - 27c
தெளிவான
காலநிலை

சுடர் 31 கதிர் 219 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 18, சனிக்கிழமை 02.07.2016

# காணாமற்போனோர் அலுவலகத்திலும் பன்னாட்டுப் பங்களிப்பு மிக அவசியம்

## பாதிக்கப்பட்ட மக்கள் வலியுறுத்து

## முல்லைத்தீவில் அதை அமைக்கவும் கோரிக்கை



முல்லைத்தீவு, ஜூலை 2
காணாமற்போனோர் அலுவலகம் கிளிநொச்சி அல்லது முல்லைத்தீவு மாவட்டத்திலேயே அமையப் பெற வேண்டும். இந்த அலுவலகத்துக்குப் பொறுப்பானவர்களாக பன்னாட்டு அங்கீகாரம் பெற்ற விசாரணையாளர்களையே நியமிக்கவேண்டும்.

இவ்வாறு அழுத்திக் கேட்டுள்ளனர் காணாமற்போனோரின் உறவினர்கள்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த காணாமற்போனோரின் உறவினர்களுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது. முல்லைத்தீவு - கரைச்சிக்குடியிருப்பு பிள்ளையார் கோவில் மண்டபத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. அங்கு கூடிய காணாமற்போனோரின் உறவினர்கள் காணாமற்போனோர் அலுவலகத்தில் பன்னாட்டுப் பங்களிப்பை வலியுறுத்தினர்.

"கிளிநொச்சி, முல்லைத்தீவிலேயே அதிகளவிலானோர் காணாமற்போயுள்ளனர். எனவே அமையவுள்ள காணாமற்போனோர் அலுவலகம், இந்த மாவட்டங்களிலேயே நிறுவப்படவேண்டும். இந்த அலுவலகத்தில் விசாரணைகளை பக்.23

# சித்திரைப் புத்தாண்டுக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

## அரசின் எதிர்பார்ப்பு இது

கொழும்பு, ஜூலை 2
அடுத்த வருடம் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னதாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு அரசு எதிர்பார்த்துள்ளது என்று தெரிவித்தார் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது. அதில் அமைச்சர் தெரிவித்ததாவது:

தற்போதுள்ள எல்லை நிர்ணயத் தரவுகளுடன் தேர்தலை நடத்த முடியாது. இதனை அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொள்கின்றன. எனினும் அந்தக் கட்சிகள் விரைவாகத் தேர்தலை நடத்துமாறும் கோருகின்றன. பக்.23




தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் பாருங்கோ...

# ஹூசேனின் அறிக்கைக்கு கூட்டமைப்பு வரவேற்பு

## அரசின் போக்குக் குறித்தும் சாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 2
இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை, இதனால் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ள மக்கள் மீள்வதற்கான பணியும், நல்லிணக்கச் செயற்பாடுகளும் பெரிதும் தடைப்பட்டுள்ளன'. இவ்வாறானதொரு நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையை நாம் வரவேற்கின்றோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. ஆணையாளர் சையிட் அல் ஹூசேனின் அறிக்கை தொடர்பில் கூட்டமைப்பு நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது. அந்த நீண்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரது வாய் மூல அறிக்கையிலே இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் பக்.23

# வடக்கின் அபிவிருத்திக்கு ரூ. 11000 மில்லியன் செலவு

## அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2
வடக்கு மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நல்லாட்சி அரசு 11 ஆயிரம் மில்லியன் ரூபாவைச் செலவு செய்துள்ளது. இந்தப் பெருந்தொகை நிதியில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



இவ்வாறு தெரிவித்தார் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன். மீள்குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுக்கத்தில், வடமராட்சி கிழக்கு, தாளையடிப் பகுதியில் படகுத் தொழிற்சாலை நிர்மாணிக் கப்பட்டது. பக்.23

# கரையை ஒட்டிய கடலில் இனி பொலிஸார் காவல்

## கஞ்சாக் கடத்தலைத் தடுக்க புதிய உத்தி

யாழ்ப்பாணம், ஜூலை 2
கரையோரத்தை அண்டிய கடலில் இனிமேல் பொலிஸாரும் படகில் காவல் பணியில் ஈடுபடவுள்ளனர். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஹெரோயின், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்கள் கடற்கரையோரங்களூடாக நாட்டுக்குள் கடத்தப்படுவதனைத் தடுக்கும் நோக்கில் இந்தக் காவல் பணி இடம்பெறவுள்ளது. இவ்வாறு யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண தெரிவித்தார்.

பொலிஸ் நிலையங்களில் பொலிஸாரின் ஒழுங்கு விதிகளைச் சோதித்து உறுதிப்படுத்தும் வகையில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நேற்று முற்பகல் வடமராட்சிக்குச் சென்றிருந்தார். அங்கு பருத்தித்துறை, நெல்லியடி, அச்சுவேலி ஆகிய பொலிஸ் நிலையங்களின் பக்.23

## 3 படையினரை அடையாளம் காட்டினர் சாட்சிகள்

அநுராதபுரம், ஜூலை 2
திருகோணமலை - கிளிவெட்டி குமாரபுரம் பகுதியில் 1996ஆம் ஆண்டு 26 பேர் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் 3 படைச்சிப்பாய்கள் சாட்சிகளினால் அடையாளம் காட்டப்பட்டனர்.

ஜூரிகள் முன்னிலையில் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் இந்தப் படுகொலை வழக்கு விசாரணைகள் ஐந்தாவது நாளாகவும் நேற்று நடைபெற்றது. பக்.23

# கடத்தப்பட்ட குடும்பஸ்தர் எரிகாயங்களுடன் மீட்பு

மன்னார், ஜூலை 2
மன்னார் - உயிலங்குளத்தில் வைத்துக் கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட குடும்பஸ்தர் கண்கள் மற்றும் கைகள் கட்டப்பட்டவாறு நொச்சிக்குளம் பகுதியில் கைவிடப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினமிரவு எரிகாயங்களுடன் மீட்கப்பட்டார் என்று மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.



மன்னார்-பள்ளிமுனை தெற்கைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான எஸ்.அன்ரன் டெனி (வயது-38) என்ற குடும்பஸ்தரே கடத்தப்பட்டு மீட்கப்பட்டார். அவர் உயிலங்குளம் பக்.23

# இலங்கையின் நீதிக் கட்டமைப்பினால் சுயாதீன விசாரணையை நடத்த முடியும்

## இப்படிக் கூறுகிறார் விக்கிரமபாகு கருணாரட்ண

கொழும்பு, ஜூலை 2
போர்க் குற்றங்கள் தொடர்பில் சுயாதீன விசாரணையை முன்னெடுப்பதற்கு இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பினால் முடியும். எமது நீதிமன்றக் கட்டமைப்பு மிகவும் பலம் மிக்கதாகவே உள்ளது. இவ்வாறு தெரிவித்தார் நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண.



ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், போர்க் குற்றங்கள் தொடர்பிலான .விசாரணைக்கு பன்னாட்டு நீதிபதிகளை நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். இந்த விடயம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பக்.23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இறுவட்டு வெளியீடு

கரணவாய், ஜூலை 2
புதுத்தோட்டம் ஸ்ரீ விநாயகப் பெருமான் புகழ்பாடும் புதுத்தோட்ட நாயகனே என்ற இசை இறுவட்டு வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் வே.கமலநாதன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சமூகவியற் துறைசிரேஷ்ட விரிவுரையாளர் இ. இராஜேஸ்கண்ணன் கலந்துகொள்ளவுள்ளார்.நிகழ்வில் ஆசியுரையை நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ சா.சோமதேவக்குருக்களும் இறுவட்டின் வெளியீட்டுரையை புற்றளை மகா வித்தியால அதிபர் ஆ.சிவநாதன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

(வ-108)

# 32 ஆயிரம் பேருக்கு வேலையில்லை
# புதிய தொழிற்பேட்டைகள் வேண்டும்

## யாழ். மாவட்டச் செயலர் இடித்துரைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2
"யாழ். மாவட்டத்தில் தற்போது 32 ஆயிரம் இளைஞர்கள், இளம் பெண்கள் வேலை வாய்ப்பின்றி உள்ளனர். போர் காரணமாகபலதொழிற்சாலைகள் இங்கு சிதைவடைந்துள்ளன. வேலை வாய்ப்பு என்பது மிகப் பெரும் பிரச்சினையாகவுள்ளது. இதைத் தீர்க்கப் புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட வேண்டும்" இவ்வாறு யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.



யாழ். மாவட்ட செயலக மனித வலு வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் கீழான மாவட்டப் பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலைய ஆரம்ப நிகழ்வில் தலைமையுரையாற்றினார்.

"யாழ். மாவட்டச் செயலக மனித வலு வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் கீழான மாவட்ட பொது மக்கள் தொழில் சேவை மத்திய நிலையமானது பல்வேறு பௌதீக வளங்களுடன் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதனூடாகப் பிரதேச ரீதியிலே எமது சேவையை விரிவுபடுத்துவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

அதேபோன்று அழிவடைந்துள்ள தொழிற்சாலைகளை மீளமைப்பதுடன் புதிய தொழிற்பேட்டைகளை அமைக்கவேண்டும். இதனூடாகவே எமது மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர், இளம்பெண்கள் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். யாழ். மாவட்டத்தில் 32 ஆயிரம் இளைஞர்கள், இளம் பெண்கள் தமக்குத் தொழில் தேவை என்று பதிவு செய்துள்ளனர். ஒவ்வொரு பிரதேச செயலகங்களின் ஊடாகவும் திரட்டப்பட்ட தகவலிலேயே இந்த விடயம் தெரிய வந்துள்ளது" என்றார். (உ-5,ரி2)

# வீதி சரியில்லை, மின்சாரமும் இல்லை
# குடிசையிலேயே பிறந்தது குழந்தை

## பலாலி வடக்கில் மீளக்குடியமர்ந்த பகுதியின் அவலம்

யாழ்ப்பாணம், ஜூலை 2
அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பலாலி வடக்கில் வீதிகள் சீரின்மையாலும், அந்தப் பகுதிக்கு இன்னமும் மின்சார வசதி வழங்கப்படாமையினாலும் அந்தப் பகுதியில் வாழ்ந்த கர்ப்பிணிப் பெண்ணொருவர் தனது குடிசை வீட்டிலேயே குழந்தையைப் பிரசவித்த அவலம் நடந்தது. இரவு நேரத்தில் அந்தப் பகுதியிலிருந்து போக்குவரத்து வசதிகள் ஏதும் இல்லாதமையால் இந்தத் துயரம் இடம் பெற்றது. எனினும் தெய்வாதீனமாக தாயும் சேயும் நலமாக உள்ளனர்.

பலாலி வடக்கின் அந்தோனியார்புரம் பகுதி கடந்த ஆண்டு இறுதியில் விடுவிக்கப்பட்டது. இந்தப் பகுதி மக்களுக்கு அரை நிரந்தர வீடுகளும் வழங்கப்பட்டன. சில குடும்பங்கள் தற்காலிகக் கொட்டில்களை அமைத்துத் தங்கியுள்ளனர். இந்தக் கிராமத்துக்கான போக்குவரத்து வீதி மிக மோசமாகவே உள்ளது. சுமார் மூன்று கிலோ மீற்றர் நீளமான வீதி எந்தவொரு வாகனமும் பயணிக்க முடியாதவாறு முழுமையாகச் சேதமடைந்துள்ளது. இந்தப் பகுதிக்கு 6 மாதங்களாகியும் மின்சாரமும் வழங்கப்படவில்லை.

"இரவு வேளைப் பயணம் என்பது எமக்குச் சிம்மசொப்பனமாகஉள்ளது. வியாழக்கிழமை இரவு எமது பகுதியைச் சேர்ந்த கர்ப்பிணி ஒருவருக்கு பிரசவ வலி ஏற்பட்டது. உடனடியாக வைத்தியசாலைக்குக்கொண்டு செல்ல வாகன வசதி கிடைக்கவில்லை. ஓட்டோக்கள் கூட அந்தப் பகுதிக்கு வர மறுத்துவிட்டன. இறுதியில், அந்தத் தாயின் குடிசை வீட்டிலேயே குழந்தையைப் பெற்றுக் கொள்ள வேண்டியதாகி விட்டது. தெய்வாதீனமாகத் தாயும், சேயும் நலமாக இருக்கின்றனர்" என்று அந்தப் பிரதேச மக்கள் தெரிவித்தனர். மறுநாளே தாயும் பிள்ளையும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

தமக்கான வீதியைப் புனரமைத்துத் தருமாறும், தமது பகுதிக்கும் மின்சாரத்தை வழங்குமாறும் அவர்கள் வலியுறுத்தினர். தமது பகுதியினூடாகப் பலாலிப் பகுதிக்கு மின்சாரம் செல்லும்போது ஏன் தமது பகுதிக்கு அதனைத் தர முடியாமல் இருக்கிறது என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

(உ-5,101)

# காணாமற்போனோர் குறித்துப் பேச டக்ளஸ்'க்கு அருகதை இல்லை

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி காட்டம்

முல்லைத்தீவு, ஜூலை 2
"காணாமற்போனோர் தொடர்பில் பேசுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எந்த அருகதையுமில்லை. உங்களால் எத்தனை பேர் காணாமற்போயிருக்கின்றார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவிடம் நாடாளுமன்றத்தில் வைத்துக் கேட்டேன். போர் நடந்து கொண்டிருந்த போது, இராணுவத்தினருடன் சேர்ந்து இருந்து எங்கள் மக்களுக்கு துன்பம் விளைவித்தவர்கள் அவர்கள்"- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்.



காணாமற்போனோரின் உறவுகளுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு, முல்லைத்தீவில் நேற்று இடம்பெற்றது. இதன் போதே, சாள்ஸ் நிர்மலநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்ததாவது:
"காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிய வேண்டும். சிறையில் இருக்கின்ற எங்களுடைய நண்பர்கள், அவர்களுடைய குடும்பங்களுடன் இணைக்கப்பட வேண்டும். வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவ முகாம்கள் குறைக்கப்பட வேண்டும். இந்த மூன்று விடயங்களும் தற்போது ஆட்சியில் உள்ள அரசு கட்டாயமாகச் செய்ய வேண்டியவை.

காணாமற்போனவர்கள் விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றத்தில் பேசினார். இதன் போது நான் எழும்பிக் கேட்டேன், காணாமற்போனவர்கள் தொடர்பாக நீங்கள் பேசுவதற்கு என்ன அருகதை இருக்கிறது. இங்கேயும் அதையே கூறுகின்றேன்.

உண்மையில் போர் நடக்கும் போது, இராணுவத்தினரோடு இருந்து எங்களுடைய மக்களுக்குத் துன்பம் விளைவித்தவர்கள் அவர்கள். இன்று துன்பம் விளைவித்த மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று போராடுகிறார்கள். வியப்பாக இருக்கின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவிடம் நான் உடனேயே கேட்டேன், நீங்கள் ஏன் இதைப் பற்றிக் கதைக்கின்றீர்கள், உங்களால் எத்தனை பேர் காணாமற் போயிருக்கிறார்கள்.

நான் அடிக்கடி சொல்லிக் கொள்வது, மாவீரர்களுடைய சிந்தனையை மனதில் சுமந்தவன் நான். எந்தக் கால கட்டத்திலும் அவர்களுக்குத் துரோகம் செய்ய மாட்டேன். காணாமற்போனவர்கள் விவகாரம் தொடர்பாக நான் தொடர்ந்து உழைப்பேன்" - என்றார்.

(வ-5-21-ரி7)

## மக்கள் வங்கியின் குருதிக் கொடை

யாழ்ப்பாணம், ஜூலை 2
மக்கள் வங்கியின் இரத்தான முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பி.ப. 2 மணி வரை ஸ்ரான்லி வீதிக் கிளையில் நடைபெறவுள்ளது.

மக்கள் வங்கியின் 55 ஆம் ஆண்டு நிறைவு முன்னிட்டே இந்த நிகழ்வு நடைபெறுகின்றது. மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வை யாழ். போதனா வைத்தியாசலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி ஆரம்பித்துவைக்கவுள்ளார். (வ-ரி)

## மத்திய வங்கி ஆளுநர் குறித்த

# கோப் குழுவின் அறிக்கை விரைவில் வரவேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

கொழும்பு, ஜூலை 2
மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராகக் கோப் குழு முன்னெடுத்த விசாரணைகளின் அறிக்கையை விரைவில் வெளியிட வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது. அதில், கட்சியின் பேச்சாளர் நிசாந்த சிறிவர்ணசிங்க இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினார்.

மத்திய வங்கி ஆளுநருக்கு எதிரான விசாரணை அறிக்கையைபொதுமக்களும்அறிந்து கொள்ளக் கூடிய வகையில் வெளியிடவேண்டும். மத்திய வங்கிக்கு புதிய ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டால் மாத்திரம் அதில் இடம்பெற்ற ஊழல்களுக்குத் தீர்வு கிடைக்காது எனவும் அவர் குறிப்பிட்டார். (உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவுகளில்

## முதலாம் ஆண்டு

அந்தோனிக்கம்மா
மரியாம்பிள்ளை

எம்முடன்
09.06.1946

இறைவனுடன்
02.07.2015

## 13 ஆம் ஆண்டு



மரியாம்பிள்ளை
டெகாமிற் அமலராஜன்

எம்முடன்
11.02.1971

இறைவனுடன்
27.12.2003

## 6 ஆம் ஆண்டு

E.L.S. மரியாம்பிள்ளை

எம்முடன்
14 .05. 1937

இறைவனுடன்
11.07.2010





தாயே எம் அன்புருவே - எம்
தூய்மையான அன்புறவே
எமைப் பிரிந்து சென்று ஓராண்டு ஆகியதே

நேசிக்க நீர் இல்லாத போது
யோசிக்க வைக்கிறது வாழ்க்கை - எம்
எல்லா அசைவுகளுக்கும் அர்த்தம் பொதிந்த அகராதியே
இன்று நீ எம்முடன் இல்லையம்மா

அன்பு கிடைத்தவர்களுக்குத் தெரியாது
கிடைக்காதவர்களுக்குப் புரியாது - ஆனால்
தொலைத்தவர்களுக்குத்தான் தெரியும் அதன் அருமையம்மா

அருமைத்தாயே ஏன் இவ்வளவு அவசரம்
உறக்கம் கலையும் நேரம் - எம்
நினைவில் வரும் முகம் நீதானம்மா
உறங்கும் போதும் எம் கனவில்  வருவதும் நீயம்மா
செல்லமாய் உங்கள் தோள் சாயும் நிமிடம் - எம்
மனதின் பாரங்கள் உங்கள் மனதோடு சங்கமம்

ஆறுதலாய் ஓர் உணர்வு ஆழ்மனதில் உதயம்
அன்புக்கு மட்டும் இங்கே இத்தனை வலிமை
அதை நான் உணர்ந்தது உன்னிடத்தில் அம்மா
இன்று அந்த அன்புருவைத் தேடுகின்றோம் கதறுகின்றோம்
இன்று நீர் இல்லையே
காலம் சென்றாலும் கனவுகள் மறைந்தாலும் - உங்கள்
நினைவுகளுடன் நிழலாய்த் தொடர்வோம்

மூவரையும் இழந்து மூவரும் கதறுகிறோம்
நீங்களோ வருவதாய்த் தெரியவில்லை
பதில் தருவதாயும் தெரியவில்லை
வரமாட்டீர்கள் என்று தெரிந்தும்
ஏங்கி ஏங்கித் தேடுதே மனது

அன்பான அப்பாவே! ஆசையான அம்மாவே!
பாசமான சகோதரனே! உங்கள் ஆன்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*உங்கள் பிரிவினால் என்றும் துயருடன்*

**பிள்ளைகள், மருமகன், மருமகள்மார், பேரப்பிள்ளைகள்.**

**இல.01, 2ஆம் குறுக்குத்தெரு,**
**குருநகர், யாழ்ப்பாணம்.**
**தொ.பே. 00 4478 2388 6784**
**077 9922 481**

(Cet.2561)
(13.18.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி கோவில் - சப்பரத் திருவிழாச் சிறப்பிதழ் - 02.07.2016



## திருவிழாக்களும் சப்பரத்தின் சிறப்பும்.

அச்சுவேலி நாவலம்பதியில் கோவில் கொண்டு அருளாட்சி புரியும் காட்டுமலைக் கந்தப்பெருமான் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் முச்சிறப்புடன் பக்திமார்க்கப் பூசை தனில் தமிழ்வேதம் ஒலிக்க தரணியெங்கும் அருள் ஒளி வீசுகின்றான். சித்தமுடன் சீனியர்க்கு அருள்செய்து கோவில்கொண்ட எம்பெருமான் அழகெழில் ஆலயத்தில் ஆனிமாதத்து அமாவாசை தினத்தைத் தீர்த்தத் திருவிழாவாகக் கொண்டு இருபத்தைந்து தினங்கள் மகோற்சவம் நடைபெறுகின்றது.

மகோற்சவ காலத்தில் சிறப்பு உற்சவங்களாக கொடியேற்றம், உருத்திரநாயகி உற்சவம், திருமஞ்சத் திருவிழா, மாம்பழத் திருவிழா, திருக்கார்த்திகைத் திருவிழா, சப்பரத் திருவிழா, தேர்த் திருவிழா, தீர்த்தத் திருவிழா, பூங்காவனத் திருவிழா என்பன மிகச் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றது. முத்துச் சப்பரத்தில் அடியவரின் தோள்களில் வலம்வரும் எம்பெருமானுக்கு அழகிய பெரும் சப்பரம் அமைக்கவேண்டும் என்ற எண்ணம் என் மனதிலும் அடியவர்கள் மனங்களிலும் தோன்றியது. காட்டுமலைக் கந்தன் திருவருளோடு குருவருளும் சேர்ந்து அடியார்களும் செயல்வடிவம் கொடுக்க 2013 ஆம் ஆண்டு சித்திரை பூரண தினத்தன்று அச்சு ஏற்றப்பட்டு 2015 ஆம் ஆண்டு வருடாந்த மகோற்சவ காலத்தில் 12.06.2015 திருக்கார்த்திகைத் திருவிழா நன் நாளில் வள்ளி தெய்வயானை சமேதராக எம்பெருமான் புதிய பெரும் சப்பரத்தில் எழுந்தருளி அருட்காட்சி கொடுத்த அற்புதம் சிறப்பானது.

நாற்பத்தொன்பது அடி உயரமும் இருபத்தொரு அடி அகலமும் கொண்ட சப்பரம் எழில்கொஞ்சும் சிற்ப வேலைப்பாடுகளோடு காட்சிதர, இருமருங்கும் அன்னப்பட்சி வாகனத்தில் வள்ளி தெய்வயானை அமர்ந்திருக்க அமைத்தில் மயில்மேல் அழகுக் குமரன் பெரும் சப்பரத்தில் காட்சிதந்து வரமளிக்கும் நன்னாள் இன்றாகும். பெரும் சப்பரம் என்னும் பெருமையுடன் வலம்வரும் காட்டுமலைக் கந்தப்பெருமானின் சப்பரத் திருவிழாவில் கலந்து முருகன் திருவருள் பெற்று உய்வோமாக.

சீ.சி.சி.சிவானந்தம் ஐயர்
பிரதம குரு.
காட்டுமலைக் கந்தசுவாமி கோவில்.

### சப்பரத் திருவிழா

கோபுரங்கள் அசைவது போல்
கொலுவொடு கொலு விருக்கும்
அன்பு மக்கள் இதயமாக
வண்ணமாக வலம் வரும்
எண்ணமாக ஏற்றும் பெற்ற
எம் இனிய சப்பரமாம்
ஆறுமுக வேலன் அவன்
அருள் வழிவாய்க் காட்சிதரும்.

வானத்தைத் தொடும் நிலவாய்
நாற்பத்தொன்பது அடி உயர்ந்து
கருத்து மிக்க வரலாற்றைக்
காவியமாய்க் கதை சொல்லும்
நேசமுடன் நிம்மதிகள்
நேசக்கரம் நீட்டிதந்து
அருள் உள்ள முருகனவன்
அலங்காரமாய் அமர்ந்திருப்பான்.

### சப்பரத்தில் வந்து எம் சந்ததிகள் காத்திடப்பா...

வேல் கொண்டு வினைதீர்க்கும் முருகா
பல்லுயிர்கள் போற்றும் காட்டுமலையானே
கதிர்காமப் பொருளான கலியுகக் கந்தனே
எதிர்கான வேலான நாவலம்பதி நாயகனே

கோடிமுறை கைகூப்பி பாடியுனை பணிவோர்க்கு
நாடிவந்து அருள்சுரக்கும் சண்முகனே
சித்திரத் தேரினிலே சிங்காரமாய் எழுந்து
பக்தியுடன் வேண்டுவோர் சித்தத்தில் உறைபவனே
மஞ்சத்தில் வலம்வந்து பஞ்சமதை பறக்கவைப்பாய்
தஞ்சமெனும் அடியார் நெஞ்சத்தில் உறையும் குகா
மூலவனே வேலவனாய் உறையும் காட்டுமலைப் பெருமானே
மூவாயிற் சப்பரத்தில் மணாளனாய் எழுந்தருள்வாய்.

சங்கடமே தீர்த்தருளும் சத்தியுமை பாலகனே
சப்பரத்தில் வலம் வந்து சந்ததிகள் காத்திடப்பா.

## விழாச் சிறப்புற வாழ்த்துவோர்.

SIHARAM KIDS WORLD
சிகரம் கிட்ஸ் வேல்ட்
Chankanai Road, Atchuvely. சங்கானை வீதி, அச்சுவேலி.
குழந்தைகளுக்கான உடுப்பு வகைகள், விளையாட்டுப் பொருட்கள், பரிசுப் பொருட்கள், மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்குரிய அனைத்துப் பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தங்காஸ் ரேடிங்
T.P : 077 3222871 வல்லை றோட், அச்சுவேலி.
கட்டிட பொருட்கள், மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள், பெயின்ற் வகைகள் என்பவற்றை நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

மதுசாஜினி ரவல்ஸ்
அச்சுவேலி.

ரதனி மோட்டோஸ் அன்ட் சேவிஸ் ஸ்ரேசன்
அச்சுவேலி.

கல்பனா ஸ்ரோர்ஸ்
அச்சுவேலி.
பேக்கரி , பேக்கிங் பொருட்களுடன் பலசரக்கு பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

வீடியோ கலாமினி
இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்
அச்சுவேலி.

சயன் மொபைல்
அச்சுவேலி.

ரூபன் சைவ உணவகம் அன்ட் கூட்சைட்
வைத்தியசாலை முன்பாக, அச்சுவேலி.

சிவராசா ரவல்ஸ்
அச்சுவேலி.

சியான் ரேடர்ஸ்
அச்சுவேலி.
அழகுசாதனப் பொருட்கள், பாடசாலை உபகரணங்களை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

[illegible]
சங்கானை வீதி, அச்சுவேலி.

வைசால்ஜன் ரவல்ஸ்
அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்வாழ்வு பெற்றவர்களின் திடீர் சாவுகள் குறித்து சுகாதார அமைச்சிடம் கேளுங்கள்

## அமைச்சர் சுவாமிநாதனின் நழுவல் பதில்

யாழ்ப்பாணம், ஜூலை 2

"புனர்வாழ்வின் பின்னர் விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் உயிரிழப்புக்கான சந்தேகங்களுக்கு என்னால் பதிலளிக்க முடியாது. இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சிடமே நீங்கள் கேள்வியை எழுப்ப வேண்டும்."

இவ்வாறு நழுவலாகப் பதிலளித்தார் மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன்.

போரின் இறுதியில் இராணுவத்தினரிடம் சரணடைந்த, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் புனர்வாழ்வின் பின்னர் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டனர். விடுவிக்கப்பட்டவர்களில் 103 பேர் வரையில் புற்றுநோய் மற்றும் திடீர் சுகவீனங்கள் காரணமாக உயிரிழந்தனர் எனத் தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர்களின் ஒன்றியம் அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தது. இந்த விடயம் தொடர்பில், யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்த அமைச்சர் சுவாமிநாதனிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதில் வழங்கிய சுவாமிநாதன், "முன்னாள் போராளிகளின் உயிரிழப்பில் உள்ள சந்தேகங்கள் தொடர்பில் நான் பதிலளிக்க முடியாது. வாழ்க்கை என்பதே சந்தேகத்தில்தான் இருக்கின்றது. இந்த உயிரிழப்புக்கான சந்தேகங்கள் தொடர்பில் சுகாதார அமைச்சரிடம் கேளுங்கள். இந்த விடயம் சுகாதாரத்துடன் தொடர்புடையது" - என்றார்.

இதேவேளை காணி விடுவிப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் சுவாமிநாதன், "ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்ததன் பின்னர், வடக்கில் 3 ஆயிரத்து 800 ஏக்கர் நிலப் பரப்பு விடுவிக்கப்பட்டது. கிளிநொச்சியில் விரைவில் 500 ஏக்கர் விடுவிக்கப்பட இருக்கின்றது. எஞ்சிய நிலங்களின் விடுவிப்புக்கள் தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினருடன் பேச்சுக்கள் நடக்கின்றன"- என்றார்.

(வ-5-101)

## யாழ்.கலையகம் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ். கலையகம் இன்று சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு மானிப்பாய் வீதி, ஆறுகால் மடத்தில் திறக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். கலையகப் பணிப்பாளர் இருதயநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக தமிழ் சித்த மருத்துவ ஆராய்ச்சி ஆணையாளர் திருமதி குமரன்ஜி தங்கராஜா கலந்து கொள்வார். (வ-ரி)

ATSகால்நடை விவசாயப்பண்ணை கீரிமலைவீதி, பன்னாலை பின்வரும் பதவிகளுக்கு ஆண், பெண் இருபாலாருக்குமான வேலைவாய்ப்பு

முகாமையாளர் - 02
வேலை மேற்பார்வையாளர் - 01
வேலையாள்கள் - 07

077 899 5431 / 075 043 4277
குறிப்பு : உணவு தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

### தேவை

சாவகச்சேரியில் இயங்கும் ஹாட்வெயார் நிறுவனத்திற்கு கணக்காளர் மற்றும் வேலையாள்கள் தேவை. தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. (c 22167) (14,17,18)

077 225 0149

### வீடு வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம், பிரதான வீதியில் (மடத்தடியில்) சகல வசதியும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 365 5824

### பிரத்தியேக வகுப்பு

2016 O/L கணிதம், வர்த்தகம் ஆகிய பாடங்கள் தெல்லிப்பழைப் பிரதேசத்தில் தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.

077 160 4059

### உதவியாளர் தேவை

அதிபரான பெண்ணின் 3மாதக் குழந்தையைப் பகலில் பராமரிக்க பெண் உதவியாளர் தேவை. (7 2562) (14,17,18)

077 217 9443

### கணினி திருத்தம்

உங்களது வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம். Computer Repair
GUNA BEST PC 077 9086737
லப்டொப் கணினிகள் திருத்தம் விற்பனை பாவித்த கணினிகள் வாங்குதல்
50/12, Hospital Road Jaffna. 522, Manipay Road Jaffna.

மேல் மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் யாழ்ப்பாணம்.

### பொதுச் சபைக் கூட்டம்

காலம்: இன்று (02.07.2016) ஆம் திகதி சனிக்கிழமை
நேரம்: பிற்பகல் 2.30 மணி
இடம்: திவ்விய ஜீவன சங்க மண்டபம் - நல்லூர், யாழ்ப்பாணம்.

மேற்படி பொதுச் சபைக் கூட்டமும் நிர்வாகத்தெரிவும் இடம்பெற இருப்பதால் மன்றத்தில் வழிபாடு செய்யும் சக்திகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர். (j 2560)(10.17.18) செயலாளர்.

### மணமக்கள் தேவை

டாக்டர்கள், எஞ்ஜினியர்கள், பட்டதாரிகள், லிகிதர்கள், வர்த்தகர்கள், வெளிநாட்டு பிரஜாவுரிமை பெற்ற மணமக்களும் உள்நாட்டு விவாகரத்துப் பெற்ற மணமக்களும் பாவம் கூடிய, குறைந்த மணமக்களும் சைவபோசன மணமக்களும் சூரியன், செவ்வாய் குற்றமுள்ள, குற்றமில்லாத மணமக்களும் எம்மிடம் உள்ளனர்.

தொடர்பு : கமலக்கண்ணன் திருமண சேவை
இல.62, இராமலிங்கம் வீதி, பூங்கனிச்சோலையடி, முடமாவடி.
077 607 0862



### பருத்தித்துறை தூய தோமையார் ஆலய வருடாந்த திருவிழா சிறப்பிதழ்

இடம் :- பருத்தித்துறை
காலம் :- 03.07.2016
நேரம் :- காலை 6.15 மணி - ஆயரை வரவேற்றல்
காலை 6.30 மணி - திருநாள் திருப்பலி

இன்று (02.07.2016) சனிக்கிழமை பிற்பகல் 5மணிக்கு திருச்செபமாலையும், அதனைத் தொடர்ந்து யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் நற்கருணை திருவிழாத் திருப்பலியும், நாளை(03.07.2016) ஞாயிற்றுக்கிழமை யாழ்.ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் திருநாள் கூட்டுத்திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும். திருப்பலியைத் தொடர்ந்து திருச்சுருப பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெறும்.

### தூய தோமையாரின் வாழ்க்கைச் சுருக்கம்

தூய தோமையார் இயேசுவின் சீடர்களில் ஒருவர் ஆவார். இயேசுவினால் இவர் அழைக்கப்பட்ட பொழுது இவருக்கு வயது இருபத்தொன்பது. திருமணமாகி இவருக்கு நான்கு பிள்ளைகள் இருந்தார்கள். ஆரம்பத்தில் இவர் தச்சனாகவும், மேசனாகவும் தொழிலாற்றினார். பின்னர் தரிசேயாவில் குடியேறியபொழுது மீன்பிடித் தொழிலை மேற்கொண்டார். இவர் தனது சிறிய கிராமத்தில் பெயர் பெற்று விளங்கினார். நுண்ணறிவு கூடியவராய் அப்போஸ்தலர் குழுவின் விஞ்ஞானியாய் தோமா திகழ்ந்தார். இவரது பெற்றோர் தங்களது திருமண வாழ்வில் மகிழ்வின்றிக் காணப்பட்டார்கள். இது இவரது வாழ்விலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இவர் முரட்டுத்தனத்தில் வளர்ந்தார். இவர் அப்போஸ்தலர் குழுவில் இணைந்ததையிட்டு தனக்குத் தொல்லை குறைந்துவிட்டது என்று எண்ணி, இவரது மனைவி மிகவும் சந்தோசப்பட்டார். பேதுருவும் ஏனைய அப்போஸ்தலர்களும் ஆரம்பத்தில் இவரது முரண்பட்ட நடத்தையையிட்டு கலவரமடைந்தார்கள். ஆனால் பின்னர் இவரது நேர்மையை முன்னிட்டு இவரைக் கூடுதலாக அன்பு செய்தார்கள். இயேசுவோடு இவர் கூடுதலாக சேர ஆரம்பித்ததும் இவரது ஆளுமையில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. மிகுந்த அன்பும் நீதியுமுடைய தனது எசமான் இயேசுவை தோமா மிகவும் பாராட்டினார். இயேசுவின் ஆளுமையினாலும் கொள்கைகளாலும் தோமா கூடுதலாகக் கவரப்பட்டார். இயற்கையை நேசித்தார். இயேசுவினதும் அப்போஸ்தலர் குழுவினதும் தீர்மானங்களை உடனுக்குடன் நிறைவேற்றுவதில் துணிச்சலுடன் ஆர்வம் காட்டினார். இந்தியாவுக்கு நற்செய்திப் பணியாற்ற தோமா அழைக்கப்பட்டார். புதிய சவால்களை எதிர்கொள்ளத் தடுமாறியவராய் இவர் ஆரம்பத்தில் பின்வாங்கினார். எனினும் இறை ஏவுதலால் கி.பி.52இல் நற்செய்திப் பணியாற்ற இந்தியாவுக்கு வருகை தந்தார். மயிலாப்பூரில் திரளான மக்களுக்குத் தூய தோமையார் போதித்தார். இவரது போதனையால் பலர் கத்தோலிக்க மறையைத் தழுவியதைக் கண்டு ஆத்திரமடைந்த ஒரு பூசாரியார், தோமா தியானத்தில் மூழ்கியிருந்த போது 72ஆடி மாதம் 3ஆம் திகதி அவரை ஈட்டியால் குத்திக் கொன்றார். மயிலாப்பூரிலுள்ள இவரது கல்லறையைப் பல நூற்றாண்டுகளாக ஆயிரக்கணக்கான பக்தர்கள் அடிக்கடி தரிசித்து வருகின்றார்கள்.

பருத்தித்துறையின் அழகிய கடற்கரையோரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள்மாரி பொழியும் தூய தோமையாரின் திருவிழாவுக்கு வருடம் தோறும் பல்லாயிரம் பக்தர்கள் கலந்து சிறப்பிக்கின்றனர்.

இம்முறை வருடாந்த திருவிழாவானது யாழ். ஆயர் தலைமையில் வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது. திருநாள் திருப்பலியில் கலந்து தோமையாரின் பரிந்துரையையும் இறையாசீரையும் பெற பல்லாயிரம் பக்தர்கள் ஒன்று கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இறையாசீர் பெற அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்

பங்குத் தந்தையர்களும் பங்கு மக்களும் - தூய தோமையார் ஆலயம், பருத்தித்துறை

4/2188) (11,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்சார் பாதுகாப்பு ஆற்றலை முன்னேற்ற ஜப்பான் நிதி உதவி

## 2.4 பில்லியன் ரூபாவை வழங்கியது

கொழும்பு, ஜூலை 2
இலங்கையின் கடல்சார் பாதுகாப்பு ஆற்றலை முன்னேற்றும் திட்டத்துக்காக 2.4 பில்லியன் ரூபாவை கொழும்புக்குக் கொடை யாக வழங்கியது ஜப்பான். கடலோரப் பொலிஸாரின் கடல்பாது காப்பு ஆற்றலை முன்னேற்றுவதே இந்த உத வியின் நோக்கம்.
கப்பல்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது, கடற்கொள்ளையை முறியடிப்பது, கடல்கடந்த குற்றங்களைத் தடுப்பது, கடல் வளங்கள் அழிக்கப்படுவதைத் தடுப்பது போன்ற நடவடிக்கைகளுக்காக இந்த நிதி பயன்படுத்தப்படும்.
இதற்காக கடலோரப் பொலிஸாருக்கு இரண்டு ரோந்துக் கப்பல்கள் வாங்கப்படவுள்ளன. இந்த இரு கப்பல்களும் 30 எம் ரகத்தைச் சேர்ந்தவை. ஜப்பானில் கட்டப்படும் இந்தக் கப்பல்கள் இலங்கையிடம் ஒப்படைக்கப்படும். அத்துடன் கடலோர பொலிஸாருக்கு ஜப்பான் பயிற்சிகளையும் வழங்கவுள்ளது. இந்தக் கொடையை வழங்குவது தொடர்பான உடன்பாட்டில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் கெனிச்சி சுக நுமாவும், நிதி அமைச்சின் செயலாளர் சமரதுங்கவும் கையெழுத்திட்டனர். (ஜ-5)

# சங்கக் கடை முகாமையாளர் தெரிவில் தகைமை குறைப்பு

## பரிசீலிக்கப்படும் என்கிறார் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் செயலர்

யாழ்ப்பாணம், ஜூலை 2
கூட்டுறவுச் சங்கக் கிளை முகாமையாளராவதற்குத் தேவையான தகுதி, தகைமையைத் தற்காலிகமாகக் குறைப்பது குறித்துப் பரிசீலிக்கப்படவுள்ளது. "சங்கங்களில் உள்வாரி மற்றும் வெளிவாரி கிளை முகாமையாளர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். முகாமையாளர்களுக்கான தகைமைகளை தற்காலிகமாகக் குறைப்பது குறித்து வடமாகாணக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு மீளாய்வு செய்யும்'' என்று ஆணைக்குழுவின் செயலாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.
கூட்டுறவுப் பணியாளர்களுக்கான ஆளணி தொடர்பான கூட்டம் கடந்த திங்கட்கிழமை யாழ். நகரில் உள்ள வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. சங்கங்களின் தலைவர்கள் மற்றும் பொதுமுகாமையாளர்கள் இதில் கலந்துகொண்டனர்.
குடாநாட்டில் உள்ள அனேகமான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளை, சீராக நடத்துவதற்குப் போதியளவு முகாமையாளர்கள் இல்லை என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. முகாமையாளர்கள் இல்லாததன் காரணமாகவே பல கிளைகள் மூடப்படுகின்றன என்றும் பொது முகாமையாளர்கள் தெரிவித்தனர்.
"சங்க முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பிக்க மிகக் குறைந்தளவானோரே ஆர்வம் காட்டுகின்றனர். அப்படி ஆர்வம் காட்டுவோருக்கும் போதிய தகைமை இல்லாதிருக்கின்றது'' என்று அவர்கள் தெளிவுபடுத்தினர். தற்போதிருக்கும் நிலையில் முகாமையாளர் நியமனத்துக்குக் கோரப்படும் தகைமையைக் குறைத்தால் ஒழிய ஆள்களைச் சேர்த்துக்கொள்ள முடியாது என்கிற பரிந்துரையையும் முன்வைத்தனர்.
அவர்களின் முன்மொழிவை ஆணைக்குழுவின் செயலாளர் பொ.வாகீசன் ஏற்றுக்கொண்டார். சங்கங்களின் கிளை முகாமையாளர்களைத் தெரிவு செய்வதற்குரிய தகைமைகளை தற்காலிக ஏற்பாடாகவேனும் குறைப்பது குறித்து ஆணைக்குழுக் கூட்டத்தில் பரிசீலித்து முடிவெடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.
"ஏற்கனவே உள்ள தகைமை சுற்றறிக்கையை உடனடியாகக் குறைத்து மதிப்பிடமுடியாது. தற்போது அந்தச் சுற்றறிக்கையின் பிரகாரம், தற்காலிக ஏற்பாடாகத் தகைமையைக் குறைப்பது குறித்து ஆராய்ந்து முடிவெடுக்கப்படும்" என்றார்- அவர்.
இதேவேளை-கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் அதிகளவு வியாபாரம் செய்யும் பணியாளர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை வழங்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். 2015 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட புதிய சம்பள அதிகரிப்பு சுற்றறிக்கையின்படி இதனை வழங்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.
"2015ஆம் ஆண்டில் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 30 வீத சம்பள உயர்வு தொடர்பாக விடுக்கப்பட்ட சுற்றறிக்கையில் அனைத்துக் கொடுப்பனவுகள் தொடர்பாகவும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. பணிப்பாளர்களுக்கான ஊக்குவிப்பு மற்றும் இதர கொடுப்பனவுகள் தொடர்பிலும் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு முகாமை மட்டப் பணியாளர்கள், தமது பணிக்கு மேலதிகமாக வேறு பணியை மேற்கொண்டு பெறக்கூடிய கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" எனவும் அவர் தெரிவித்தார். (உ-ஜ-17)

13 ஆவது வருட நினைவு நாள்

திருமதி
வசந்தாதேவி தனபாலசிங்கம்
(முன்னாள் பிரதம லிகிதர் -சாவகச்சேரி நகரசபை)
ஆண்டுகள் 13 சென்றாலும் எம் உள்ளத்திலே
என்றென்றும் வீற்றிருக்கும் எமது தெய்வமே
உங்கள் அன்பான அரவணைப்பும், அறிவுரைகளும்
இல்லாமல் தவிக்கின்றோம் தங்களின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், மருமகன்மார், மருமகள், பேரப்பிள்ளைகள்
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
021 567 5196
பிறப்பு 26.12.1947
இறப்பு 26.06.2003
திதி: திரயோதசி 02.07.2016

8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர்
சின்னத்தம்பி குணசிங்கம்

தாயின் மடியில்
11.01.1943
முருகனடியில்
01.07.2008
திதி:02.07.2016
நீரடித்து நீரகலாது எம் நெஞ்சை விட்டு
நும் நினைவு என்றும் அகலாது
ஆத்மசாந்தி வேண்டிப் பிரார்த்திக்கும்
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
077 350 2726
தீபா இல்லம்
முதலாம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ
முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சுந்தரம் செல்வராசா
(ரிங்கர்)
மலர்வு
27.12.1949
உதிர்வு
14.07.2015
திதி: திரயோதசி
ஆலம் விழுதுகள் போல் ஆயிரம் உறவு கொண்டு
குடும்ப உறவுகள் விழாதிருக்க வேரென இருந்தீரே
காலனவன் உயிர் பறிக்க சோகத்தைத் தந்து
எமக்குச் சொல்லாமல் சென்றதெங்கே?
அன்பான பேச்சும் அறிவான தத்துவமும்
புன்னகை மாறா முகமும் – பிறரை
புண்படுத்தா மனமும் கொண்ட பண்பாளரே
ஆண்டொன்று சென்றாலும் மறக்க முடியவில்லை தம்மை
வாழ்க்கையென்னும் சக்கரத்தில் உயிர் உதிர்வு உண்மையே என்ற போதும்
உம்மையே எண்ணி உருகுகின்றோம் நாம்
எம் இதயங்களில் என்றென்றும் வாழும் உங்கள் ஆத்மா
இறையின் பாதங்களில் சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.
தங்கள் பிரிவால் துயருறும்...
குடும்பத்தினர்.
54 உ, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

# அமைச்சர் தேவரப்பெருமவால் அச்சுறுத்தல் என ஆர்ப்பாட்டம்

## மீகாதென்ன ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் முன்னெடுப்பு

கொழும்பு, ஜூலை 2
பிரதியமைச்சர் பாலித்த தேவரப்பெருமவினால் தாம் அச்சுறுத்தப்பட்டனர் எனத் தெரிவித்து மத்துகம மீகாதென்ன பாடசாலை ஆசிரியர்கள் நேற்றுவெள்ளிக்கிழமை போராட்டம் ஒன்றை நடத்தினர்.
மத்துகம மீகாதென்ன ஆரம்பப் பாடசாலை நிர்வாகம், தரம் ஒன்றுக்கு விண்ணப்பித்தவர்களில் 10 பேரைச் சேர்த்துக் கொள்ள மறுத்திருந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கலாசார அலுவல்கள் பிரதியமைச்சர் பாலித்த தேவரப் பெரும மத்துகம பாடசாலைக்கு முன்பாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்தினார். அதற்குப் பயன் கிடைக்கவில்லை. இதனால் நேற்று முன்தினம் பாடசாலைக்குள் நுழைந்து தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தார். சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இறுதியில் 10 மாணவர்களையும் பாடசாலையில் இணைத்துக் கொள்ள அதிபர் உறுதியளித்தார்.
இதனிடையே பாடசாலை அதிபருக்கு, பிரதியமைச்சர் எச்சரிக்கை விடுத்து அச்சுறுத்தினார் எனவும், பலாத்காரமாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு அவர் முயற்சி செய்கிறார் எனவும் தெரிவித்து நேற்றையதினம் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத் தப்பட்டது.
ஆசிரியர்களின் ஆர்ப்பாட்டத்துக்கு வலுசேர்க்கும் வகையில் சில பெற்றோரும் அதில் கலந்து கொண்டனர். இந்தப் போராட்டம் காரணமாக மீகாதென்ன பாடசாலையின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.
இதேவேளை-தற்கொலை செய்துகொள்ள முயற்சித்த பிரதியமைச்சர் பாலித தேவரப்பெரும கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (உ-5)

> ஆசிரியர்களின் ஆர்ப்பாட்டத்துக்கு வலுசேர்க்கும் வகையில் சில பெற்றோரும் அதில் கலந்து கொண்டனர். இந்தப் போராட்டம் காரணமாக மீகாதென்ன பாடசாலையின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

Majestic
Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்
CEYLON THEATRES

10.00 / 1.00 / 7.00
Fri/Sat/Sun 9.30 p.m
3D 4.00 p.m
சில்வர் 10.15 / 1.15 / 4.15 / 7.15
Fri/Sat/Sun 9.30 p.m
ப்ரொன்ஸ் 10.30 / 1.30 / 4.30 / 7.30
Fri/Sat/Sun 9.30 p.m
021 2227712
ceylontheatres
www.ceylontheatres.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்.ஐ.வி. நோய்த் தொற்றுக்குள்ளான பாதிப்பேர் ஓரினச் சேர்க்கையாளர்கள்

கொழும்பு, ஜூலை 2
எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகிய சுமார் 2 ஆயிரத்து 400 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 50 வீதமானவர்கள் ஓரினச் சேர்க்கையாளர்கள் என்று சுகாதார அமைச்சின் பாலியல் நோய்கள் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சிசிர லியனகே தெரிவித்தார்.
கட்டுமானங்கள் இடம்பெறும் சூழல்களில் பணிபுரியும் தொழிலாளர்களில் பலர் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை தெரியவந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
"இன்றே பரிசோதியுங்கள்" என்ற தொனிப்பொருளுடன் கடந்த 28ஆம் திகதி நாடு முழுவதும் எச்.ஐ.வி. பரிசோதனை செய்யப்பட்டதன் பின்னணியில் சிசிர லியனகே இந்தத் தகவல்களைத் தெரிவித்தார்.

> நாடு முழுவதும் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகியவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 377 பேர் என்று பதிவு செய்யப்பட்ட தரவுகள் கூறுகின்றபோதும், அந்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 200 தொடக்கம் 5 ஆயிரத்து 600 வரை இருக்கலாம்.

"நாடு முழுவதும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 377 பேர் என்று பதிவு செய்யப்பட்ட தரவுகள் கூறுகின்றபோதும், அந்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 200 தொடக்கம் 5 ஆயிரத்து 600 வரை இருக்கலாம்என்றேகணிப்பிடப்பட்டுள்ளது" என்று யாழ்ப்பாண பாலியல்நோய்தடுப்புப்பிரிவுபொறுப்பு மருத்துவ அதிகாரி திருமதி தாரணி குருபரன் தெரிவித்தார்.
"அடையாளம் காணப்பட்டவர்களில் 376 பேர் உயிரிழந்துவிட்டனர். பாதிக்கப்பட்டவர்களில் குழந்தைகள் 78 பேர். பாலூட்டலினால் தாய் மூலமாகக் குழந்தைகளுக்கும் நோய் பரவியது.
யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கும் பாலியல் நோய்த் தடுப்புப் பிரிவில் தற்போது 21 பேர் எச்.ஐ.வி. சிகிச்சை பெற்று வருகின்றனர். அங்கு காலை 8.30 தொடக்கம் மாலை 4 மணி வரை எச்.ஐ.வி. உள்ளதா என்பதைக் கண்டறிவதற்கான குருதிப் பரிசோதனையை மேற்கொள்ளமுடியும். ஆனால் அங்கு யார் தமது பரிசோதனையை மேற்கொள்கிறார்களோ அவர்களது பரிசோதனை அறிக்கையை அவர்கள் மட்டுமே பார்க்க முடியும். ஏனைய உறவினர்களோ, நண்பர்களோ எவரும் பார்க்க முடியாது. பரிசோதனை மேற்கொள்பவர்களது இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும்" என்று மருத்துவர் தாரணி தெரிவித்தார். (உ)

## சுகாதாரத் துறையில் தொழிற் பயிற்சி பெற அரியதொரு வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2
சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சால் தொழிற்பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று யாழ். பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் க.நந்தகுமாரன் அறிவித்தார்.
மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், மருந்தாளர், பௌதிக சிகிச்சையாளர், தொழில்வழி சிகிச்சையாளர், கதிரியலாளர், கண் தொழில்நுட்பவியலாளர், பற்சிகிச்சையாளர், பாடசாலை பற்சிகிச்சையாளர், சுகாதார பூச்சியியல் அலுவலர், செயற்கை அவயவ தொழில்நுட்பவியலாளர், பொது சுகாதாரப் பரிசோதகர், இதயத்துடிப்புப் பதிவாளர், மூளை மின் இயக்கப் பதிவாளர் ஆகிய தொழிற்பயிற்சிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
பொதுச் சுகாதார பரிசோதகர், இதயத்துடிப்பு பதிவாளர், மூளை மின் இயக்க பதிவாளர் தவிர்ந்த பயிற்சி நெறிகள் அனைத்தும் 2 வருடங்கள் ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படும். பொதுச் சுகாதார பரிசோதகர் பயிற்சி நெறி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் ஒரு வருடம் தொடக்கம் ஒன்றரை வருடங்களுக்குக் கற்பிக்கப்படும். இதயத்துடிப்புப் பதிவாளர், மூளை மின் இயக்க பதிவாளர் ஆகிய கற்கை நெறிகள் ஆங்கில மொழி மூலம் ஒருவருடம் இடம்பெறும்.
க.பொ.த. உயர் தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்றவர்கள் இந்தக் கற்கை நெறிகளுக்கு உள்வாங்கப்படுவர்.
பயிற்சி நெறியை மேற்கொள்ள விரும்புவர்கள் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் (நிர்வாகம் - 2), சுகாதார போசணை மற்றும் சுதேசவைத்திய அமைச்சு, சுவசிறிபாய, இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு - 10 என்னும் முகவரிக்கு தமது வேண்டுகைகளை அனுப்பிவைக்கலாம். மேலதிக தகவல்களை அறிவதற்கு 2016.06.24 ஆம் திகதிய வர்த்தமானியைப் பார்வையிடலாம். (ஐ-ரி)

## "டிமிக்கி" விட்டுவிட்டு காட்டுக்குள் சென்ற 4 மாணவர்கள் கைது

கொழும்பு, ஜூலை 2
மேலதிக வகுப்புக்குச் செல்வதாகப் பெற்றோருக்குத் தெரிவித்துவிட்டு காட்டுக்குள் சென்ற பாடசாலை மாணவ, மாணவிகள் கைது செய்யப்பட்டனர். நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.
களுத்துறைப் பொலிஸார் இது பற்றி விசாரணை நடத்திவருகின்றனர். களுத்துறையிலுள்ள பிரபலமான பாடசாலை ஒன்றைச் சேர்ந்த மாணவர்கள் நால்வரே கைதாகினர். இந்தமுறை சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்கள் இவர்கள். கடந்த 26ஆம் திகதி காட்டுக்குள் சென்றுள்ளனர். நீண்ட நேரம் ஆகியும் திரும்பி வரவில்லை. இதனை அவதானித்த அந்தப் பகுதி மக்கள்களுத்துறைபொலிஸாரிடம்முறையிட்டனர். காட்டுக்குள் சென்ற பொலிஸார் மாணவிகள் இருவரைக் கைது செய்தனர். மாணவர்கள் இருவரும் தப்பிச் சென்றனர். பின்னர் அவர்கள் பொலிஸாரிடம் சரணடைந்தனர். நால்வரும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இருவரையும் தலா ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்தார் களுத்துறை நீதிவான் உதேஸ ரணதுங்க. மாணவிகள் இருவரும் மருத்துவப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (உ-5)

## "யாழ்ப்பாண நினைவுகள்" வெளியீடு கிளிநொச்சியில்

கிளிநொச்சி, ஜூலை 2
யாழ்ப்பாண வாழ்வியலின் அம்சங்களை உள்ளடக்கிய "யாழ்ப்பாண நினைவுகள்" கட்டுரை நூல், நாளைஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் வெளியிடப்பட உள்ளது.
கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வில், நூல் அறிமுக உரை, நூல் நயப்புரை, வாழ்த்துரைகள் உட்பட பல அம்சங்கள் இடம்பெறும்.
கிளி நொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் அ.கேதீஸ்வரன் நிகழ்வுக்குத் தலைமை வகிப்பார். (அ)

## தனித்து வாழ்ந்த முதியவரின் உடல் உருக்குலைந்த பின் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2
வீட்டில் தனித்திருந்த முதியவர் உயிரிழந்து உருக்குலைந்த நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
உதவிக்கு எவரும் இல்லாத நிலையில் வாழ்ந்து வந்த கொழும்புத்துறை-புங்கன்குளத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை சுந்தரலிங்கத்தின் சடலமே மீட்கப்பட்டது.
"கடந்த செவ்வாய்க்கிழமை அவரை ஊரவர்கள் கண்டுள்ளனர். அதன் பின்னர் அவரை எவரும் காணவில்லை. இந்த நிலையில், அவரது வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசியதையடுத்து அங்கு சென்று சிலர் பார்த்தபோதே அவர் உருக்குலைந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டார். பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது" என்று ஊரவர்கள் தெரிவித்தனர்.
பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.
"முதியவர்கள் தனித்து வாழ்வதனால் தான் அவர்கள் உயிரிழந்தாலும் அவர்களது சடலம் உருக்குலைந்து துர்நாற்றம் வீசுமளவுக்கு நிலைமை ஏற்படுகிறது. உதவிக்கு யாராவது இருப்பார்களேயானால் அல்லது அருகிலுள்ளவர்களின் கவனிப்பு தினமும் இருக்குமேயானால் இறந்தாலும் உருக்குலையும் நிலையைத் தவிர்த்து இறுதிக் கிரியைகள் செய்ய முடியும்" என்று சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (உ-4)

முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
11 . 11 . 1962

உதிர்வு
14 . 07 . 2015

இரத்தினம் பிரபாகரன்
(சாருஜன் லொறி முன்னாள் உரிமையாளர்)

திதி: திரயோதசி [02.07.2016]

அன்பின் திருவுருவமாய் ஆற்றலின் இருப்பிடமாய்
பண்பின் சிகரமாய் நீண்ட பயணத்தின் நினைவுகளை எமக்குத் தந்தீர்
புன்னகை பூத்த முகமும் உறவுகளை நேசிக்கும் குணமும்
நட்புப் பாராட்டும் தன்மையும் எங்கள் உயர்வையே இலட்சியமாகக் கொண்ட
தங்கள் முகம் பார்க்காது உள்ளம் வாடுகிறதே
எண்ணிய பொழுதெல்லாம் கண்ணில் நீர் கசிகிறதே
குடும்ப ஒளி விளக்கே எங்கே சென்றீர்
உணர்வால் உள்ளத்தால் எம்மோடு வாழும் தெய்வமாகி
ஒளியாகி எமக்கெல்லாம் வழியாகி எம் இதயங்களில் வாழ்கின்றீர்

[illegible] கோயிலடி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்பதில் கிளம்பியது புதுச் சிக்கல்

## மாங்குளத்தில் அது இருக்க வேண்டும் என்கின்றனர் ஒட்டுசுட்டான் கமக்கார அமைப்பினர்

முல்லைத்தீவு, ஜூலை 2

வடக்கின் பொருளாதார மத்திய நிலையத்தை எங்கே அமைப்பது என்ற விடயம் மேலும் மேலும் சிக்கலாகிக் கொண்டே செல்கிறது. அதனை ஓமந்தையில் அமைப்பதா? தாண்டிக் குளத்தில் அமைப்பதா? என்கிற இழுபறி ஏற்கனவே இருக்கின்ற நிலையில், அதனை மாங்குளத்திலேயே அமைக்க வேண்டும் என்று ஒட்டுசுட்டான் பகுதி கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் குரல் எழுப்பியுள்ளனர். இது தொடர்பான தமது முடிவை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு அனுப்பி வைக்கவுள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

"பொருளாதார மத்திய நிலையம் மாங்குளத்திலேயே அமைய வேண்டும். இதன் மூலம் வடக்கின் சகல விவசாயிகளும் உச்சப் பயன்பாட்டினை அடைவார்கள்" இவ்வாறு ஒட்டுசுட்டான் பகுதி கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

பொருளாதார மத்திய நிலையத்தை வவுனியாவில் அமைப்பது என்ற முடிவு கொழும்பு அரசினால் எடுக்கப்பட்டது. கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டது. ஆனால் அதனை அமைப்பதற்கான இடத்தெரிவில் வடமாகாண முதலமைச்சர் மற்றும் விவசாய அமைச்சர் ஒரு பக்கமும் சுகாதார அமைச்சர் மற்றும் அமைச்சர் ரிஷாத் ஆகியோர் ஒரு பக்கமுமாக நின்று இரு பிரிவுகளாக இழுபறி ஏற்பட்டுள்ளது.

> "பொருளாதார மத்திய நிலையம் வட மாகாணத் திற்குரியது. எனவே அந்தத் திட்டம் வட மாகாணத்தின் மத்திய பகுதியான மாங்குளம் நகரை அண்டி அமைவதே பொருத்தமானதாக இருக்கும். வடக்கின் சகல மாவட்டங்களினதும் விவசாய பெரு நிலப்பரப் புகளின் இலகுவான போக்குவரத்து மார்க்கங்களின் மையமாகவும் மாங்குளமே அமைந்துள்ளது."

ஒரு தரப்பு, நிலையத்தை ஓமந்தையில் அமைக்க வேண்டும் என்கிறது. மறு தரப்பு அதனைத் தாண்டிக்குளத்தில் அமைக்கலாம் என்கிறது. இது தொடர்பில் ஏட்டிக்குப் போட்டியான போராட்டங்களும் கடந்த வாரம் வவுனியாவில் நடத்தப்பட்டன.

இந்த இழுபறி முடிவதற்கு முன்பாக நிலையத்தை மாங்குளத்தில் அமைப்பதே பொருத்தமானது என்ற குரல் எழுந்துள்ளது. முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் பொதுநிகழ்வு ஒன்றில் பேசுகையில் ஏற்கனவே இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஒட்டுசுட்டான்-சின்னச்சாளம்பன் பொதுநோக்கு மண்டபத்தில், அந்தப் பகுதிக் கமக்கார அமைப்புக்களின் கலந்துரையாடல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

"முல்லைத்தீவு மாவட்டமே போரினால் அடித்து நொருக்கப்பட்டது. வறுமையில் இன்று முதல் நிலையில் உள்ளது. வறுமையிலிருந்து எமது மாவட்டம் மீட்சி பெறுவதற்கு இவ்வாறான அபிவிருத்தித் திட்டம் எமது மாவட்டத்துக்கு மிக முக்கியம். வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் பொதுவான மத்திய பகுதியாக மாங்குளமே உள்ளது. மாங்குளத்தைச் சுற்றி மிக முக்கியமான பெரிய நீர்ப்பாசனக் குளங்கள் உள்ளன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு விவசாய நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. பொருளாதார மத்திய நிலையத்தை மாங்குளத்தில் அமைத்தால் விளைபொருள்களைச் சந்தைப்படுத்துவதும் இலகுவாக இருக்கும். முல்லை மாவட்டத்தின் அபிவிருத்தியில் கொழும்பு அரசும், வடக்கு அரசும் மெத்தனப் போக்கையே தொடர்ந்து கடைப் பிடிக்கின்றன" என்று கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஒருமித்துத் தெரிவித்தனர்.

பொருளாதார மத்திய நிலையம் மாங்குளத்தில் அமைவதே வடக்கு மாகாணத்துக்குப் பொருத்தமானதாக அமையும் என்றும் அவர்கள் முடிவெடுத்தனர்.

"பொருளாதார மத்திய நிலையம் வட மாகாணத்திற்குரியது. எனவே அந்தத் திட்டம் வடமாகாணத்தின் மத்திய பகுதியான மாங்குளம் நகரை அண்டி அமைவதே பொருத்தமானதாக இருக்கும். வடக்கின் சகல மாவட்டங்களினதும் விவசாய பெரு நிலப்பரப்புகளின் இலகுவான போக்குவரத்து மார்க்கங்களின் மையமாகவும் மாங்குளமே அமைந்துள்ளது. மாங்குளத்தில் பொருளாதார மத்திய நிலையம் அமைய வேண்டும் எனும் கோரிக்கையானது மாவட்ட நலனை மட்டும் முன்னிறுத்திய ஒரு விடயமில்லை. வடக்கின் அனைத்து மாவட்டங்களினதும் விவசாயத் துறையினருக்கு நன்மை பயக்கும் என்கின்ற பொதுவான நலன் சார்ந்த கோரிக்கையாகும்" என்று கலந்துரையாடலில் கலந்து கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவநேசன் தெரிவித்தார்.

இதற்கிடையே, பொருளாதார மத்திய நிலையம் அமைவது தொடர்பான சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கலந்துரையாடல் ஒன்றை ஒழுங்கு செய்துள்ளார். வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதில் பங்குபற்றவுள்ளனர். இந்தக் கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. (உ-5,21,ரி7)

# மீண்டும் அதிகரிக்கிறது டெங்கு நோய் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ். மாவட்டத்தில் டெங்கு தொற்றும் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து வருகிறது. கடந்த மாதம் 80 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் மட்டும் 6 பேர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பிராந்திய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்தது.

கடும் வறட்சி காரணமாக சற்றுக் குறைந்திருந்த டெங்கு அண்மையில் பெய்த மழையை அடுத்து மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது என்று சுகாதாரத் திணைக்களம் தெரிவிக்கிறது. யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலேயே அதிகளவில் தொற்றுக் காணப்படுகின்றது என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

பொதுவாக வருட ஆரம்பத்திலும் வருட இறுதியிலும் மழை காலம் என்பதனால் டெங்குத் தொற்றின் எண்ணிக்கை அதிகரித்தே இருக்கும். யாழ்ப்பாணத்தில் கடந்த ஜனவரியில் 543 பேரும், பெப்ரவரியில் 236 பேரும், மார்ச்சில் 173 பேரும், ஏப்ரலில் 66 பேரும், மே மாதம் 60 பேரும், ஜூனில் 80 பேரும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

டெங்குத் தொற்றிலிருந்து அவதானமாக இருக்குமாறும் டெங்கு பரவும் சூழலை இல்லாமல் செய்து சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்குமாறும் யாழ். பிராந்திய தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

நேற்றுவரை யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து 304 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் இணையத் தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே கிளிநொச்சியில் 50 பேரும், மன்னாரில் 95 பேரும், வவுனியாவில் 153 பேரும், முல்லைத்தீவில் 108 பேரும் டெங்கினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர் என்றுமுள்ளது. கொழும்பு மாநகரில் இந்த வருடம் இதுவரை ஆயிரத்து 754 பேரும் கொழும்பு புறநகரில் 4 ஆயிரத்து 574 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். (உ-4)

# நீர்விநியோகத்தை ஆரம்பித்து வைத்து வீடுகளுக்கு அடிக்கல் நட்டார் அமைச்சர்



யாழ்ப்பாணம், ஜூலை 2

மீள்குடியேற்ற அமைச்சின் நிதி உதவியில் வலி. வடக்கு - வலி. கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட நீர் விநியோகத் திட்டத்தை நேற்றுத் திறந்து வைத்தார் கொழும்பு அரசின் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன். மீளக்குடியமர்ந்த மக்களுக்கான வீடுகளுக்கு அடிக்கல்களையும் அவர் நட்டு வைத்தார். இந்த நிகழ்வுகளில் யாழ்ப்பாணத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் கலந்து கொள்ளவில்லை.

வலி. வடக்கில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்களின் குடிதண்ணீர்த் தேவைக்காக 8.4 மில்லியன் ரூபா செலவில், புதிய கிணறுகள், நீர்த்தொட்டிகள் என்பன அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் வறுத்தலைவிளானில் அமைக்கப்பட்டுள்ள நீர்த் தொட்டி மற்றும் அதனுடன் இணைந்த மின்மோட்டரை சம்பிரதாயபூர்வமாக அமைச்சர் சுவாமிநாதன் திறந்து வைத்தார்.

பின்னர் பலாலி வடக்கில், அரச காணியில் குடியேற்றப்பட்ட மக்களுக்கான வீடுகளுக்கான அடிக்கற்களையும் நட்டு வைத்தார். தொடர்ந்து, வலி. கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவின் மீள் குடியமர்வுக் கிராமமான அக்கரை கிராமத்துக்கு அமைச்சர் சென்றார். அங்கும் குடிதண்ணீர் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார். இந்தக் குடிதண்ணீர் விநியோகத் திட்டம் 13.5 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டது.

வறுத்தலை விளானில் நீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பித்து வைத்த அமைச்சர், அதன் பின்னர் தனியார் காணி ஊடாக அமைக்கப்பட்டுள்ள பாதையினூடாகப் பயணித்து பலாலி வடக்குக்குச் சென்றார். இதன்போது தற்போது விடுவிக்கப்பட்டுள்ள பிரதேசங்களையும் அவர் பார்வையிட்டார்.

அமைச்சரின் வாகனத் தொடரணி பயணம் செய்த போது, அந்த வீதிகளில் எழும்பிய தூசிகள் சில நிமிடங்கள் வரையில் அந்தப் பகுதியை மறைத்தன. (உ-5-101)

# கொலை செய்த மூவருக்கு தூக்குத் தண்டனை விதிப்பு

## நுவரெலியா நீதிமன்று தீர்ப்பு

தலையில் தாக்கி, கத்தியால் குத்தி, உடல்மீது லொறியை ஏற்றி ஒருவரைக் கொலை செய்த 3 பேருக்கு நுவரெலியா மேல்நீதிமன்று தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

கந்தப்பளை - எஸ்கடேல் தோட்டத்தைச் சேர்ந்த கருப்பையா வனராஜா (வயது - 45) என்பவர் கொல்லப்பட்ட வழக்கில் நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

கந்தப்பளைக்கு உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த ஹெட்டித்தரகே காமினி விஜேசூரிய, சமரகே சஞ்சீவ மகிந்த பண்டார, அது லகே நளின் [illegible] ஆகிய குற்றவாளிகளுக்கே நீதிபதி லலித் ஏக்கநாயக்க தூக்குத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். கொலைச் செய்யப்பட்ட நபர் உட்பட 4 பேரும் 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 10ஆம் திகதி வீடு ஒன்றில் திருடினர். திருட்டுப் பொருள்களைப் பங்கிடுவதில் ஏற்பட்ட பிரச்சினையே கொலைக்குக் காரணமென நீதிமன்று முடிவு செய்தது. அதனையடுத்து 3 பேரும் குற்றவாளிகளாக இனங் காணப்பட்டு அவர்களுக்குச் சாவுத்தண்டனை விதிக்கப்பட்டது. (உ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தான்தோன்றித்தனமாக முடிவெடுக்காதீர்கள்

## அதிகாரிகளுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் காட்டமான அறிவுரை

யாழ்ப்பாணம், ஜூலை 2

வட மாகாண வேலைத் திட்டங்களில், இறுதித் தீர்மானம் எடுப்பதற்கு முன்னர், வடக்கு மாகாண சபையுடன் கலந்தாலோசியுங்கள். தான்தோன்றித்தனமாக முடிவு எடுக்காதீர்கள். தலைமைச் செயலருக்குத் தெரியப்படுத்தினோம் என்று காரணம் கூறாதீர்கள். அவர் தொழில் திறனுடனும், நிர்வாகத் திறனுடனும் செயற்பட கொழும்பு அரசால் நியமிக்கப்பட்ட ஒருவர். அரசியல் ரீதியாக விடயங்களை ஆராய்வதென்றால், மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

இவ்வாறு காட்டமாகத் தெரிவித்திருக்கிறார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

வவுனியாசிதம்பரபுரத்தில்அமைந்துள்ள நலன்புரி நிலைய மக்களுக்கு காணி உறுதி வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் உரையாற்றிய முதலமைச்சர் தெரிவித்ததாவது:

1990ஆம் ஆண்டு ஏற்பட்ட தற்காலிக அமைதிக் காலத்தில் இந்தியாவிலிருந்து திரும்பி வந்த அகதிகள், இங்கு தங்க வைக்கப்பட்டனர். 25 வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட தற்காலிக வசிப்பிடங்களிலேயே அவர்கள் இதுவரையும் வாழ்ந்து வந்துள்ளனர்.

மாகாண சபை தெரிவு செய்யப்பட்ட பின்னர், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த சுகாதார அமைச்சர் உங்கள் பிரச்சினைகளை எனது கவனத்துக்குக் கொண்டு வந்தார். கொழும்பு அரசும், வடக்கு அரசும் மனம் உவந்து மனிதாபிமானத்துடன் செயற்பட்டன. அதனால் உங்களுக்குத் தலா 6 பேர்ச் காணிகள் கிடைத்துள்ளன. அதற்கான அனுமதிப் பத்திரம் இப்போது வழங்கப்படுகிறது.

இது புதிய கிராமம் என்பதால் சகல அடிப்படை வசதிகளும் வழங்கப்படவேண்டும். இந்த மக்களுக்கு நிரந்தர வீடுகளை வழங்குவதற்கு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் உதவுவார் என்று எண்ணுகின்றேன்.

வவுனியா மாவட்டத்தின் தெற்கு எல்லையிலும், அநுராதபுரத்தின் வடக்கு எல்லைக்குச் சற்று அப்பாலும் அமைந்திருக்கும் தமிழர்களின் பூர்வீகக் கிராமம் இது. அதனாலேயே புவியியல் ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் இது முக்கியத்துவம் பெறுகின்றது. நிலங்கள் பாதுகாக்கப்படுவதற்கு எல்லைப்புறக் கிராமங்களின் சீரமைப்பும் விரிவாக்கமும் அவசியம். இதனை எமது அரச அலுவலர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவிலிருந்து 50 ஆயிரம் குடும்பங்கள் நாடு திரும்பத் தயாராக உள்ளனர். உதவிகள் கிடைக்கும் என்ற உத்தரவாதம் இல்லாமையால், அவர்கள் திரும்பி வருவதற்குத் தயக்கம் காட்டுகின்றார்கள். இந்தியாவிலிருந்து திரும்பிய சில குடும்பங்கள் தமக்கு அரசிடமிருந்தோ, அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்தோ உதவிகள் எவையும் கிடைக்கவில்லை என்கின்றார்கள்.

அனுமதிப் பத்திரங்கள் வைத்திருக்கும் சிலர், தமது காணிகளைப் பார்க்கச்சென்றால், தெற்கிலிருந்து வந்தவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதைக் கண்டுள்ளார்கள். இராணுவம் அவர்களுக்குத் துணை போகின்றது என்று கூறுகின்றார்கள். இந்தியாவிலிருந்த காலத்தில், அங்கு பிறந்து வளர்ந்த பிள்ளைகள் போதிய கல்விகளைப் பெற்றிருந்தும், இங்கு வந்தவுடன் அரச உத்தியோகங்களுக்கு விண்ணப்பிப்பதில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை எமக்கு எடுத்தியம்புகின்றார்கள். இந்தியாவில் இருந்து திரும்பும் குடும்பங்களின் புனர்வாழ்வு பற்றி முறையான திட்டங்கள் வகுக்கப்படவேண்டும் - என்றார். (ஐ-5)

### ஓவியக்கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 2

'ஞாபகங்கள்' என்னும் தலைப்பில் ஓவியக் கண்காட்சி இல.15, றக்கா வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலை முற்றத்தில் இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்த நாள்களில் முற்பகல் 10.30 மணி தொடக்கம் மாலை 4 மணி இதனைப் பார்வையிடலாம். ஆசிரியர் எஸ்.சிவதாசனால் இந்தக் கண்காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

### விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 2

நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபை பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டு விழா, நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும். நிலையத் தலைவர் சு.கிருஷ்ணராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மருத்துவர் ம.மனோகரன் கலந்து கொள்வார். (ஐ-35)

### நிறைவேற்றுக் குழுக்கூட்டம்

நெல்லியடி மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க நிறைவேற்றுக் குழுக்கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். கூட்டத்தில் பரிசளிப்புவிழா உட்பட முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதாக செயலாளர் வீ.சுதர்சன் தெரிவித்தார். (ஐ-35)

### வடமராட்சி கிழக்கில் அரச வீடுகளுக்கான 2ஆம் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜூலை 2

வடமராட்சி கிழக்கில் அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் வீட்டுத் திட்டத்துக்கான, இரண்டாம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. இந்தத் தடவை தலா இரண்டு லட்சம் ரூபா வீட்டுத் திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படும் என்று பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

நிரந்தர வீடற்றவர்களுக்காக இந்தப் பகுதியில் 312 வீடுகளை அரசு அமைத்துக் கொடுக்கிறது. முதற்கட்டப் பணிக்காக ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு கட்டத்துக்கான கொடுப்பனவுக்கும் உரிய பணிகள் முடிந்ததும் அடுத்த கட்ட நிதி, வழங்கப்படும். ஒவ்வொரு வீட்டுக்கும் எட்டு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வீடுகளைக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் அமைத்து முடிக்கவேண்டும் எனப் பயனாளிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-17)

### ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் திருவிழா

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 16 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும். எதிர்வரும் 18ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ-500)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
தயாநிதி கஜேந்திரன்
(ராசா)

அன்னை மடியில் 30.08.1985
ஆண்டவன் அடியில் 13.07.2015

திதி: அபரபக்க திரயோதசி
02.07.2016

ஆண்டு ஒன்று ஆகியபோதும்
ஆறுகின்றதில்லை எம்மனம்
வேண்டுகின்றோம் இறைவனடியில் - நீர்
என்றும் நிலைத்திட
பூண்ட உம் அறநெறிகள்
என்றும் உமைப் போற்றிடும் - ஆண்டவன்
உம்மை எம் குடும்பத்தில் இணைத்திட
வேண்டுவதோடு உமது ஆத்மா சாந்தியடைய
பிடாரி அம்பாளை இறைஞ்சுகின்றோம்
சாந்தி! சாந்தி! சாந்தி

குடும்பத்தினர்.
தேணியடி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(9m/2556)
(11.17.16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



**செல்லமுத்து வீரகத்திப்பிள்ளை**

**தோற்றம்** 06.04.1906 **மறைவு** 29.06.2016

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், 136/10, ஜி.எஸ். ஒழுங்கை, தவசிகுளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லமுத்து வீரகத்திப்பிள்ளை 29.06.2016 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லமுத்து - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகலிங்கம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசமணி, நமசிவாயம், செல்லம்மா, கமலம்மா, சிவக்கொழுந்து, கிருஸ்ணபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற முத்துக்குமாருவின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் மார்க்கண்டு, காலஞ்சென்ற கனகநாயகம்பிள்ளை மற்றும் மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான மங்களேஸ்வரி, அமிர்தலிங்கம் மற்றும் சர்வேஸ்வரி, பத்மாவதி, இலங்கை வேந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற மாணிக்கம் மற்றும் சிதம்பரம், சர்வேஸ்வரி, தவமணிதேவி, காலஞ்சென்றவர்களான இலங்கைநாயகம், கங்கநாதன் மற்றும் குணரெத்தினம், கிருஷ்ணமூர்த்தி, வீரலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனும், ஸ்ரீகாந்தராஜா, நிரந்தரலட்சுமி (சுவிஸ்), சிவகாந்தன் (தம்புத்துரை), தவராணி (கனடா), ஸ்ரீமகள் (கனடா), சசிகாந்தராஜ, ரமணி (கனடா), கீதா, வாகீஸ்வரன் (வவுனியா), ஜெனிதா, ஞானசீலன் (வவுனியா), சிவகலை, கவிதாசன் (கிளிநொச்சி), கௌசலை, பாலசரவணபவன் (கிளிநொச்சி), கோசலை), வேல்முருகன் (கிளிநொச்சி), இந்திராணி, காசிநாதன் (வேலணை), ஜெயராயன், கோமுகி (கொழும்பு), சிலோசனா, விஜியகுமார் (வேலணை), நீலாம்பிகை, குகதாசலிங்கம் (யாழ்ப்பாணம்), செல்வநாயகம் (செல்வாமாஸ்ரர்), நளினி (சுவிஸ்), பாசமலர், கனகரெத்தினம் (லண்டன்), ஸ்ரீதரன், அருளாளியாள் (கனடா), மனோகரன், பாலநந்தினி (கனடா), ஜெயசீலன், தர்சனாதேவி (பிரான்ஸ்), சசிகலா, பார்த்தீபன் (சுவிஸ்), பாமினி, ஜாதவயோகராஜா (கனடா), பவதாரணி, விஜயானந் (கொழும்பு), பாலகிருஷ்ணன், சைலஜா (கனடா), டினேஸ்குமார், வினோகா (அமெரிக்கா), மயூரன், நிஷாந்தினி (வவுனியா), மைதிலி, கந்தராஜா (கிளிநொச்சி), செந்தூரன், கஜந்தன் (வவுனியா) ஆகியோரின் அன்புப் பேரனும், சுஜீவன், சுமீஷினி (சுவிஸ்), ஆரணி (கனடா), அகிலன், அனுஷா (கனடா), பானுஷா, வர்ணவி, மிதுளன், தரனிகா, சபிஷா (வவுனியா), கோகிலன், கஜமுகன் (கிளிநொச்சி), இந்துஜா, குபேரன், கம்ஷா (கிளிநொச்சி), சாயினி, அனுசா, லக்ஷன், இந்துஜா, விதுசன், தனுசியா, யதுசன் (வேலணை), புவனதாஸ், லியிந்தன், தாட்சாயினி (யாழ்ப்பாணம்), சபினா, சமீர் (சுவிஸ்), தர்ஷணா (லண்டன்), கஸ்தூரி, கேசவன், நிரோஸ், பிரவீனா (கனடா), லக்ஷன், லக்ஷிகா, கபிஷன் (கனடா), நிஷாந்தன், துவாரகா, கௌசிகன் (வேலணை), சில்லியா, லியோன் (சுவிஸ்), சாருஷன், சஜிதா (சுவிஸ்), தனுஷன், தர்ஷிகன் (கனடா), நாகசபரீசன், நாகவைஷ்ணவி, நாகவர்ஷினி (கொழும்பு), பவினன், பவிசன், சஹானா (கனடா), மிருனாலினி, விசாகனன் (கிளிநொச்சி), அனித்திரன் (வவுனியா) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் 136/10, G.S. ஒழுங்கை, தவசிகுளம் வவுனியாவில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் வேலணை மேற்கு அம்பலவி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**136/10,** G.S. **ஒழுங்கை,**
**தவசிகுளம்,**
**வவுனியா.**

தகவல்:
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

**077 296 5094**

# சிறுவர் பாதுகாப்பு விவரங்களையும் பாடத் திட்டத்தில் உள்ளடக்க முயற்சி

## அடுத்த ஆண்டில் கொண்டு வருவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபை முனைப்பு

கொழும்பு, ஜூலை 2

பாடசாலைப் பாடங்களில் சிறுவர் பாதுகாப்பு பற்றிய விவரங்களையும் உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

அடுத்த வருடம் தொடக்கம் இதனை உள்ளீர்த்து நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. தரம் இரண்டிலிருந்து தரம் 8 வரையான மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் இந்த விடயத்தை உள்ளீர்ப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக அதிகார சபையின் தலைவர் கலாநிதி நடாஷா பாலேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான கலந்துரையாடல்களைக் கல்வி அமைச்சு அதிகாரிகளுடன் தாம் நடத்திவருகிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

"வடக்கு உட்பட நாடு முழுவதும் சிறுவர் விவகாரம் தற்போது பிரச்சினையாகியுள்ளது. பாடசாலைகளிலும் பாலியல் வதைகள் இடம்பெறுகின்றன. அவ்வாறான சம்பவங்களில் பாடசாலை ஆசிரியர்கள் சிலரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அதற்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் பாடசாலை அதிபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். எனவே சிறுவர் பாதுகாப்புப் பற்றிய விடயங்களை மாணவர்களுக்குக்கற்றுக் கொடுக்க வேண் டியது அவசியம். பாடங்களில் சிறுவர் பாதுகாப்பையும் உள்ளீர்ப்பது அவசியமாகிறது" - என்று நடாஷா தெரிவித்தார். (உ-5)

# மத்திய வங்கி ஆளுநர் நியமனம் காத்திருப்பு

## நிதி அமைச்சரின் வருகைக்காக

கொழும்பு, ஜூலை 2

மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனின் பத விக் காலம் கடந்த 30ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது. இருப்பினும் புதிய ஆளுநர் இன்னமும் நியமிக்கப்படவில்லை. ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க நாடு திரும்பிய பின்னரே புதிய ஆளுநர் நியமிக்கப்படுவார் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

மத்திய வங்கியின் புதிய ஆளுநர் குறித்த விவரம், பழைய ஆளுநரின் பதவிக் காலம் முடிவடைந்த கடந்த வியாழக்கிழமையன்றே அறிவிக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்திருந்தார். இரண்டு தினங்கள் கடந்துள்ள நிலையிலும் புதிய ஆளுநர் யார் என்பது அறிவிக்கப்படவில்லை. நாணய சபையின் சட்டத்தின்படி, மத்திய வங்கிக்குப் புதிய ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமாயின் நிதி அமைச்சரின் ஆலோசனை கட்டாயம் பெற்றுக் கொள்ளப் படவேண்டும். நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தற்போது நாட்டில் இல்லை. அவர் ஜப்பானுக்குச் சென் றுள்ளார். நாளைமறுதினம் திங்கட்கிழமையே அவர் நாடு திரும்புகிறார். அதன் பின்னரே புதிய ஆளுநர் நிய மிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-5)

# உதய கம்மன்பில பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 2

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், மகிந்த ஆதரவு அணி உறுப்பினருமான உதய கம்மன்பில நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார். கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன இதற்கான அனுமதியை வழங்கினார்.

25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 5 லட்சம் ரூபா கொண்ட மூன்று சரீரப் பிணைகளிலும் விடுவிப்பு அனுமதி வழங்கப்பட்டது. ஆஸ்திரேலியர் ஒருவருக்குச் சொந்தமான 41 மில்லியன் ரூபா பங்குகளைப் போலிப் பத்திரம் மூலம் விற்பனை செய்தார் எனக் கூறப்படும் சம்பவத்தின் அடிப்படையில் உதய கம்மன்பில கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார். (உ-5)

# 'எட்கா'வில் ஒப்பமிடுவது இலங்கைக்கே நன்மை

## இலங்கை ஊடகவியலாளர்களிடம் டில்லியில் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 2

இந்தியாவுடன் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையில் (எட்கா) இலங்கை ஒப்பமிட வேண்டும், இது இலங்கையின் பொருளாதார நலன்களுக்கே நன்மையானது என்று பன் னாட்டு உறவுகள் தொடர்பான இந்திய வல்லுநர்களின் சுயாதீனக் குழு வலியுறுத்தியுள்ளது.

இலங்கையிலிருந்து புதுடில்லிக்குச் சென்றுள்ள ஊடகவியலாளர் குழுவுடனான சந்திப்பிலேயே இந்தக் கருத்து வலியுறுத்தப்பட்டது.

"இந்தியா - இலங்கை இடையே பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டால், இலங்கையில் இந்தியப் பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் மற்றும் இலங்கையின் உள்ளூர் தொழிற்துறைகளை இந்தியா தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து விடும் என்கின்ற கருத்துத் தவறானது. இந்த உடன்படிக்கையின் மூலம் இலங்கையர்கள் அதிகளவு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியும்" என்றார் பாதுகாப்புக் கற்கைகள் மற்றும் ஆய்வுகளுக்கான நிறுவகத்தின் தற்போதைய இயக்குநர் நாயகமான ஜெயந்த் பிரசாத்.

"இந்த உடன்படிக்கையை எதிர்த்து இலங்கையில் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்கள் அரசியல் ரீதியாகத் தூண்டப்பட்டவை" என்று இலங்கை இந்திய உறவுகள் தொடர்பான வல்லுநரும் ஜவர்கலால் நேரு பல்கலைக்கழகத்தில் தென் னாசியக் கற்கைகளுக்கான பன்னாட்டு உறவுகள் துறையில் 40 ஆண்டுகளாக விரிவுரையாளராகப் பணியாற்றுபவருமான பேராசிரியர் எஸ்.டி.முனி தெரிவித்தார்.

"இந்த உடன்படிக்கையின் வாயிலாக இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகள் மேலும் விரிவுபடுத்தப் படும். இந்தியாவின் புதிய தொழிநுட்ப நல்வாய்ப்பு களுக்குள் இலங்கையை உள்ளீர்த்துக் கொள்வதற்கும் உதவும். இதுபோன்ற இருதரப்பு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் நன்மைகள் மற்றும் சவால்கள் தொடர்பாக பங்குதாரர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும்" - என்று அவர் மேலும் தெரிவித்தார். (உ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளில் பாலியல் தொழிலுக்காக இலங்கைப் பெண்கள், சிறுவர்கள் கடத்தல்

## அமெரிக்க இராஜாங்கச் செயலர் கெரி அறிக்கை

கொழும்பு, ஜூலை 2
இலங்கைப் பெண்கள் ஜோர்தான், மாலைதீவு, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் பாலியல் தொழிலுக்குப் பயன்படுத்தப்படுகின்றனர். பாலியல் தொழிலுக்காகப் பெண்களும், குழந்தைகளும் ஆள்கடத்தலுக்கு உள்ளாகின்றனர். சிறுவர்கள் கரையோரப் பகுதிகளில் சிறுவர் சுற்றுலாவிகளுக்கான பாலியல் தொழிலுக்குத் தள்ளப்படுகின்றனர்.

இவ்வாறு அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி தெரிவித்தார்.

பன்னாட்டு ஆள்கடத்தல் வியாபாரம்தொடர்பான அறிக்கையை அவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியிட்டார்.

அதில், "இலங்கையைச் சேர்ந்த ஆண்கள் - பெண்கள் மற்றும் குழந்தைகள் மத்திய கிழக்கு நாடுகள் - தென்கிழக்காசிய நாடுகள் ஆகியவற்றுக்கு கட்டுமானத் தொழில், ஆடை உற்பத்தி நிலையங்கள் மற்றும் உள்நாட்டு சேவைத் துறைகளில் கட்டாய பணிக்கு அமர்த்தப் படுகின்றனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலிருந்து வெளியேறுவதற்கு முன்னர், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் ஆட்சேர்ப்பு முகவர்களுக்கு இவர்கள் அதிக கட்டணங்களைச் செலுத்துகின்றனர். இதன் மூலம் கடனுக்கு உள்ளாகின்றனர்.

அத்துடன் வெளிநாடு செல்வதற்காக ஊக்கத் தொகையாக முற்பணத்தையும் பெறுகின்றனர். இதனால் மீண்டும் நாடு திரும்பும் வரை கடன் அடிமைத்தனத்தில் சிக்குண்டு இருக்கின்றனர்.

உடல் ரீதியாகக் குறைபாடுடைய சிறுவர்கள் இலங்கையில் பிச்சை எடுக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். கொழும்பில் வீட்டுப் பணியாளர்களாகக் கடமையாற்றும் பெண்கள், உடல் - உள ரீதியாகத் துன்புறுத்தப்படுகின்றனர்.

இலங்கை அரசு ஆள்கடத்தல் வியாபாரத்தை தடுக்க முயற்சிகள் மேற்கொண்டது. இருப்பினும் அவை முழுமையாகக் கட்டுப்படுத்தப்படவில்லை- இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-5)

> "குழந்தைகளும் ஆள் கடத்தலுக்கு உள்ளாகின்றனர். சிறுவர்கள் கரையோ ரப் பகுதிகளில் சிறுவர் சுற்றுலாவிகளுக்கான பாலியல் தொழிலுக்குத் தள்ளப்படுகின்றனர்."



# மகிந்தவுக்கு வந்த ஆசை

கொழும்பு, ஜூலை 2
மத்திய வங்கியின் புதிய ஆளுநராகத் தெரிவு செய்யப்படுபவர் இலங்கையராக இருக்கவேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

பெபிலியான சுனத்ராதேவி பிரிவெணாவில் சமய நிகழ்வில் கலந்து கொண்டார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த. நிகழ்வு முடிந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

"புதிய மத்திய வங்கி ஆளுநரைத் தெரிவு செய்யும்போது, மத்திய வங்கியின் உயர் அதிகாரிகளின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் யாரை மத்திய வங்கி ஆளுநராக ஏற்றுக் கொள்கின்றார்களோ அவரை மாத்திரமே மத்தியவங்கி ஆளுநராக நியமிக்கவேண்டும். அவ்வாறு நியமிக்கப்படுபவர் நிச்சயம் இலங்கையராக இருக்க வேண்டும்" - என்றார்.

மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், சிங்கப்பூரிலும் குடியுரிமை வைத்திருப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

# மருத்துவர்கள் மீண்டும் அரை நாள் பணி நிறுத்தம்

## அரசுக்கு 6 கோரிக்கைகளை முன்வைத்து

கொழும்பு, ஜூலை 2
பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரச மருத்துவர்கள் மீண்டும் அடையாள வேலை நிறுத்தப் போராட்டமொன்றில் ஈடுபடவுள்ளனர்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணி முதல் 12 மணி வரை - அரை நாள் - இந்தப் போராட்டம் இடம்பெறும் என்று இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

'எட்கா' உடன்படிக்கை, மாலபே தனியார் வைத்திய கல்லூரியின் மாணவர்களை அரச வைத்தியசாலையில் உள்ளகப் பயிற்சிக்கு அனுமதித்தல், வெளிநாட்டுப் பயிற்சிகளை முடித்து வரும் மருத்துவர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை வழங்காமை உள்ளிட்ட 6 காரணிகளை முன்வைத்து இந்த அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்படுகிறது என்று சங்கம் தெரிவித்தது.

மகப்பேற்று வைத்தியசாலைகள், சிறுவர் வைத்தியசாலைகள், சிறுநீரக சிகிச்சை மையம், புற்று நோய் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் மருத்துவர்கள் மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு வைத்தியர்கள் இந்தப் போராட்டத்தில் இணைய மாட்டார்கள் என்றும் சங்கம் தெரிவித்தது.

கோரிக்கைகளுக்கு உரியபதில்கிடைக்காவிட்டால் தொடர் தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுக்க நேரிடும் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இதுபோன்ற சில கோரிக்கைகளை முன் வைத்து கடந்த மே மாதம் 31ஆம் திகதி அரச மருத்துவர்கள் அடையாளப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். கடந்த வாரம் கல்வி அமைச்சின் முன்பாக ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர். (உ-5)

# 17 வயது இளைஞன் புத்தளத்தில் கைது

## 15 வயது மாணவியை கடத்தி வதைத்த குற்றச்சாட்டில்

கொழும்பு, ஜூலை 2
15 வயதான பாடசாலை மாணவியை பாலியல் வதைக்குட்படுத்திய குற்றச்சாட்டில் 17 வயது இளைஞனைப் புத்தளம் பொலிஸார் கைது செய்தனர்.

அந்த மாணவி தனது காதலி என்று இளைஞன் பொலிஸாரிடம் தெரிவித்தான்.

பாதிக்கப்பட்ட மாணவி தனது தந்தையுடனேயே வசித்து வந்தார். அவரது தாயார் வெளிநாடு சென்றுள்ளார். ஏப்ரல் 12ஆம் திகதி தொடக்கம் மாணவி காணாமற்போனார். வெளிநாடு சென்றிருந்த தயார் நாடு திரும்பிய பின்னர், தனது மகளைக் காணவில்லை என்று பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

மாணவியைத் தேடிய பொலிஸார், நேற்றுமுன்தினம் அவரைக் கண்டுபிடித்தனர். 17 வயது இளைஞனின் உறவினர்கள் வீட்டில் இருந்தே மாணவி மீட்கப்பட்டார்.

"அந்த இளைஞன் என்னை காதலித்தார். அதனால் என்னைக் கடத்திச் சென்று அவருடைய உறவினர்கள் வீட்டில் தங்க வைத்தார்" என்று மீட்கப்பட்ட மாணவி பொலிஸாரிடம் தெரிவித்தார்.

மருத்துவப் பரிசோதனைக்காக மாணவியைச் சிலாபம் வைத்தியசாலையில் சேர்த்தனர் பொலிஸார். கைது செய்யப்பட்ட இளைஞன் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். (உ-5)

## விண்ணுலக வாழ்வின் இருபத்தைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகம் 22 . 06 . 1961



விண்ணகம் 09 . 07 . 1991

அமரர் **அழகரத்தினம் அருள்சோதி**

(முள்ளானை இளவாலையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்டவர்)

எங்கள் இதயங்களில் அணையாமல் வீற்றிருக்கும் அன்புத் தீபமே!
ஆண்டுகள் பல நகர்ந்தாலும்
ஆறாத துயர நினைவுகளுடன் எமது கண்ணீர்ப் பூக்களை
சமர்ப்பித்து தங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
எங்கள் உள்ளங்களில் சாகாவரம் பெற்று என்றுமே வாழ்ந்திடுவீர்

திருமதி சுவர்ணா நிமல்ராஜ்
(மகள் - கனடா)

(வி/55) (11,17)

அன்பான மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அனைத்துலகை அனுசரிக்காவிடில் பாதிப்புக்கள் பல்கிப் பெருகும்...

● இலங்கையில் நீண்ட காலமாக நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும்.

● அதற்குப் பதிலாக, அனைத்துலகத் தரத்துடன் கூடிய சட்டம் ஒன்று இயற்றப்பட வேண்டும்.

● அதேவேளை, நடைமுறையில் உள்ள பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுவிக்கப்பட வேண்டும்.

ஐ.நா.மனித உரிமைகள் சபையில், கடந்த புதன்கிழமை நடைபெற்ற, இலங்கை தொடர்பான விவாதத்தின்போது, அனைத்துலக மனித உரிமைகள் காப்பகத்தின் பிரதிநிதி ஒருவர் மேற்கண்ட கருத்துக்களை அழுத்திக் கூறியுள்ளார்.

ஐ.நா.நிபுணர்கள் குழு, போரில் நாற்பதினாயிரம் (40,000) பேர் உயிர் இழந்திருக்கலாம் என்று அண்ணளவாகக் கூறியுள்ளது.

அது மட்டுமன்றி, தமிழ் ஆண்கள் மற்றும் பெண்கள் சித்திரவதைக்கும், பாலியல் வல்லுறவுக்கும் உட்படுத்தப்பட்டனர் என்றும் தொட்டுக் காட்டப்பட்டுள்ளது.

மேலும், முந்தைய இலங்கை அரசின் செயற்பாடுகள், பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்தப்பட வேண்டுமே அன்றி, வெறும் இடம் மாற்றாக அமையக்கூடாது--என்றும் அவர் அழுத்திக் கூறியிருந்தார்.

இதேவேளை-

இலங்கை அரசின் விசாரணைப் பொறிமுறையில், அனைத்துலக நாடுகளின் நீதிபதிகளின் பங்களிப்பு கட்டாயம் என்றும் வலியுறுத்தப்படுகிறது.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, நியூஸிலாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் அதனை அழுத்திக்கூறி உள்ளனர்.

பொறுப்புக் கூறும் பொறிமுறை அர்த்தம் உள்ளதாக அமைய வேண்டும். அதன் பொருட்டு இலங்கை, இனிமேலும் செயற்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் அதிகம் உள்ளன.

பொறுப்புக்கூறல் முறைமை சுயாதீனமாக அமைய வேண்டும். அர்த்தம் உள்ள பன்னாட்டுப் பங்களிப்பு அமைந்தால் மட்டுமே, பாதிப்புற்றவர்கள், அதில் நம்பிக்கை கொள்வர்.

இலங்கையின் உள்ளக விசாரணையில் அனைத்துலக நாடுகளின் பங்களிப்பு உள்ளடக்கப்படாவிடில், அது நம்பிக்கைக்கு உரிய ஒன்றாக மேலுயர இயலாது. அந்த நிலைமை குறித்து மேற்குறிப்பிட்ட நாடுகள் அழுத்திக் கூறியிருப்பது இங்கு தொட்டுக்காட்டப்பட வேண்டிய பிரதான அம்சம் ஆகும்.

இவற்றுக்கு மேலாக,முரணாக, இலங்கை அரசு தப்புத்தாளம் போட்டால், அதன் விளைவு மிகவும் பாரதூரமானதாக இருக்கும்.

அதனை உள்ளார்ந்து உணராமல்--

அது தப்புத்தாளம் போட முனைந்தால், அனைத்துலக நாடுகளின் உறவுகளும், உதவிகளும் 'அம்போ' ஆகிவிடும்.

'கெடு குடி சொற் கேளாது' என்ற நிலைமை மேலோங்கும் பட்சத்தில், ஏனைய நாடுகளின் நல்லெண்ணம் மட்டுமன்றி, பல்வகை உதவிகளும் 'அம்போ' ஆகிவிடும்! நல்லாட்சி அரசு அதனை உள்வாங்கி, சரியான தடத்தில் பயணிக்காதுவிடில், ஏனைய பல பாரதூரமான பாதிப்புக்கள், நாட்டை உலுப்பும்...! அது நிசம்!

# அரசைக் கவிழ்க்க முயலும் அரூபத் தரப்பின் புதிய உத்தி

■ மூலம் மவ்பிம
தமிழில் வி.எஸ்.ரீ



1988 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக்காக பிரேமதாச நாட்டின் பல பகுதிகளுக்குப் பயணம் மேற்கொண்டபோது பல இடங்களில் முழுமையாகக் கடையடைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்ததைக் காண நேர்ந்தது. ஜே.வி.பி. தரப்பினரது மிரட்டல்கள் காரணமாகவே அத்தகைய நிலை நிலவியது. அந்த நிலமையைக் கூடத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் விதத்தில் 1970-77 காலப்பகுதியில் நாட்டில் நிலவிய நிலமையைப் பிரேமதாச நினைவூட்டிக் கதையளந்தார். குறித்த காலப்பகுதியில் சிறிமாவோவின் தலைமையிலான அரசின் நிர்வாகத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குக் கடும் தட்டுப்பாடு நிலவியது. விற்பனை செய்வதற்கு பொருள்கள் எதுவும் இருக்காததால் கடைகள் மூடப்பட்டிருந்ததாக அவர் கதையளந்தார். சிறிமாவோவின் கைகளில் மீண்டும் அதிகாரத்தைக் கொடுத்து சிரமப்பட வேண்டாமென அறிவுறுத்தும் அந்தக் கடையடைப்பு நடவடிக்கைக்காக ஜே.வி.பியினருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் பிரேமதாச கருத்து வெளியிட்டிருந்தார்.

பெறுமதி சேர் வரி அறவீட்டு வீத அதிகரிப்புக்கு எதிராகத் தற்போதைய கடையடைப்பு நடவடிக்கையை அவதானிக்கும் போது, மேற்குறிப்பிட்ட அரசியல் சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன.

### கண்ணுக்குப் புலப்படாது இயங்கும் சக்தியொன்று

"கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த மீண்டும் வெற்றி பெற்றிருந்தால், பொருளாதாரத் தடையால் கடை உரிமையாளர்கள் தத்தமது கடைகளை இழுத்து மூட வேண்டி ஏற்பட்டிருந்திருக்கும். நாட்டுமக்கள் பெரும் பொருளாதாரச் சிரமங்களைச் சந்திக்க நேர்ந்திருக்கும்."

அரசு, பெறுமதி சேர் வரி அறவீட்டு வீதத்தை உயர்த்தியதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில், வர்த்தக சமூகத்தினரைத் தூண்டிவிட்டு கடையடைப்புச் செய்விக்க கண்ணுக்குப் புலப்படாத ஒரு சக்தி செயற்படுவதாகச் சுட்டிக்காட்டி, பிரபல பொருளாதார நிபுணரொருவர் வெளியிட்ட கருத்தே மேற்கொண்டதாகும். அப்படியானால், மீண்டும் நாட்டில் முன்னரைப் போன்றதொரு பயங்கரயுகம்தலையெடுக்கிறதா? என எண்ணத் தோன்றுகிறது. 1988-89 ஆண்டுகள் காலப்பகுதியில் நாட்டில் ஜே.வி.பி தரப்பின் பயங்கர யுகம் நிலவியது. ஆனால் இன்றோ கடந்த அரசின் காலத்தில் ஊழல் மோசடிகளை மேற்கொண்டவர்களை அவர்களது குற்றங்களில் இருந்து தப்பிக்க வைப்பிக்கும் நோக்கில் கண்ணுக்குப் புலப்படாத சக்தியொன்று பின்னாலிருந்து இயங்கி, இந்தக் கடைகளை மூட வைப்பிக்கும் உத்தியை முன்னெடுத்து வருகிறது.

### பெறுமதிசேர் வரிவிதிப்பின் வரலாறு

2002 ஆம் ஆண்டில் ரணில் தலைமையிலான ஐ.தே.கட்சி அரசே, பெறுமதி சேர் வரியை 15 வீதமாக நிர்ணயித்து அறிமுகப்படுத்தி வைத்தது. 2006 ஆம் ஆண்டில் மகிந்தவின் அரசு அதனை 20 வீதமாக உயர்த்தியதோடு, மொத்த சில்லறை வியாபார முயற்சிகளுக்கும் அந்த வரியை அறவிட்டது. அந்த நடைமுறை 2007 ஆம் ஆண்டு வரை தொடர்ந்த போதிலும், அதற்கெதிராக எவர் தானும் கடைகளை மூடி எதிர்ப்புத் தெரிவிக்கவோ நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கவோ முன் வராததேன்? பெறுமதி சேர் வரியை இன்றைய அரசு 15 வீதமாக அதிகரித்ததால் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது, வர்த்தக நிலையங்களை மூட வேண்டி ஏற்பட்டிருக்கிறதானால், அன்று மகிந்தவின் அரசு அந்த வரியை 20 வீதமாக அறவிட்ட வேளையிலும் அதே சிரமநிலை ஏற்பட்டிருக்க வேண்டுமல்லவா? அப்படி எதுவும் நடக்கவில்லையே? அப்படியானால், இன்று நல்லாட்சி அரசால் வரி வீதத்தை 15 வீதம் அதிகரிக்கப்பட்டமையை இவர்களால் தாங்கிக்கொள்ள முடியாமல் இருப்பதேன்.? உண்மையில் அரசுக்கு எதிராக வர்த்தக சமூகத்தினரைத் தூண்டிவிட கண்ணுக்குப் புலப்படாத சக்தி ஒன்று செயற்பட்டு வருகிறது என்பதே உண்மை. பெரும் நிதி மோசடிக் குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணைகள் தற்போது பெரும்பாலும் முடிவடைந்து, அவற்றின் அறிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. குறித்த விசாரணைகளில் குற்றம் இழைத்தோராகக் காணப்பட்டோர் மிக விரைவில் கைது செய்யப்படவுள்ளனர். குறித்த தரப்பினரில் பெரும்பாலோர் முன்னைய அரசில் உயர் பதவிகளை வகித்தோரே. இவற்றாலெல்லாம் வர்த்தகர்களோ பொதுமக்களோ எந்த வகையிலும் பாதிப்பை எதிர்நோக்கப் போவதில்லை.

பெரும் ஊழல் மோசடி விசாரணைகளை திசை திருப்பாது விட்டால், தாம் அனைவரும் விரைவில் சிறைவாசம் அனுபவிக்க நேரிடும் என்பது குறித்து முன்னைய அரசில் பங்கு கொண்டு செயற்பட்டோர் கடும் அச்சம் கொண்டுள்ளனர். இயல்பு வாழ்க்கையை இவர்கள் குழப்ப முயல்வதன் மூலம் இவர்களது அந்த அச்சத்தின் உச்சநிலை தெளிவாகப் புலப்படுகிறது.

நல்லாட்சி அரசின் முதலாவது வரவு - செலவுத் திட்டத்தில் பெறுமதி சேர் வரி 12 வீதத்தில் இருந்து 11 வீதமாகக் குறைக்கப்பட்டது. ஆனால் அந்த வேளையில் மகிந்த அரசால் வெளிநாடுகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பெருந்தொகைக் கடன்கள் குறித்த் பூரண விவரங்கள் நல்லாட்சி அரசுக்குக் கிட்டியிருக்கவில்லை. அவை குறித்த முழு விவரங்களும் கிடைத்த பின்னர், வேறு எதுவுமே செய்ய இயலாத நிலையில், பிரதமர் ரணில் நாடாளுமன்றத்தில் நிலமையை விளக்கிக் கூறி, பெறுமதி சேர் வரி விகிதத்தைக் கூட்டியதோடு, வெளிநாடுகளது கடன் செலுத்தி முடிக்கப்பட்ட பின்னர் வரி அறவீட்டு விகிதம் மீண்டும் குறைக்கப்படுமெனவும் உறுதியளித்துள்ளார்.

அந்த வகையில், நாட்டு மக்கள் இன்றைய நல்லாட்சி அரசுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கும் வகையில், ஓராண்டு காலம் வரை பொறுமை காத்து அரசின் போக்கை அவதானித்தல் பொருத்தமானதாக அமையும். ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற விசாரணையில் சர்வதேசத்தின் அழுத்தம் எடுபடுமா?

எம்.ஐ.முபாறக்



இலங்கை அரசு இன்று எதிர் நோக்கி இருக்கும் மிகப்பெரிய தலையிடி, போர்க்குற்ற விசாரணை குறித்த விடயம்தான். மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பித்த இந்த விடயத்துக்குப் பதிலளிக்க வேண்டிய கடப்பாடு இப்போதைய மைத்திரி – ரணில் அரசுக்குத்தான் ஏற்பட்டுள்ளது. இது கத்திமேல் நடக்கும் வித்தை போன்றது. இந்த விசாரணை தமிழர்களுக்குச் சாதகமாக அமைந்து விட்டால், அரசு சிங்களவர்களைப் பகைத்துக் கொள்ள வேண்டிவரும். படையினருக்குச் சாதகமாக அமைந்துவிட்டால், சர்வதேசத்தையும் தமிழர்களையும் பகைத்துக்கொள்ள வேண்டிவரும்.

**போர்க்குற்ற விசாரணை அரசுக்குச் சிக்கலான ஒன்று.**

இதனால், இதை மிகவும் கவனமாகக் கையாள வேண்டிய ஓர் இக்கட்டு நிலை அரசுக்கு. சர்வதேசத்தைத் திருப்திப் படுத்தும் வகையில் இந்த விசாரணை அமைந்து விட்டால், படையினரின் ஒட்டு மொத்த ஆதரவையும் அரசு இழக்க வேண்டிவரும். அது அரசின் இருப்புக்கே ஆபத்தாக அமைந்துவிடும். அதனால், சர்வதேசத்தை எப்படியாவது சமாளித்து படையினருக்கு சாதகமாக இதனை முடித்து வைப்பதற்கு அரசு முடிவெடுத்துள்ளது.



உள்ளகப் பொறிமுறை தொடர்பில் அரசு தொடர்ச்சியாகத் தெரிவித்து வரும் கருத்துக் கள், தமிழருக்குப் பாதகமாகவே அமைந்துள்ளன. உள்ளகப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் உள்ளடக்கப்படமாட்டார்கள், படையினர் குற்றவாளிகளா கக் காணப்பட்டாலும் அவர்கள் தண்டிக்கப்படமாட்டார் கள் என்றும், அரச தரப்பினர் கூறி வருகின்றனர். குறித்த விசாரணையில் சர்வதேச நீதிபதிகள் உள்ளடக்கப்பட்டால், அது நிச்சயமாகப் பக்கச்சார்பற்ற விசாரணையாக அமையும், படையினர் இழைத்த குற்றங்கள் அனைத்தும் வெளியே வந்துவிடும், அந்தக் குற்றங்களுக்குத் தண்டனை வழங்க வேண்டிவரும் என்றும் அரசு அஞ்சுகின்றது.

ஆக, விசாரணையின் முடிவு இப்படித்தான் அமைய வேண்டும் என்று அரசு ஏற்கனவே முடிவெடுத்துவிட்டது. அதனால் அதில் வெளியார் தலையீடு இருக்கக்கூடாது என்பது அரசின் நிலைப்பாடு.

ஆனால், சர்வதேசமோ, உள்ளகப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளைப் புகுத்த முயற்சிக்கின்றது. ஆனால், இலங்கை அரசு, சர்வதேசத்தின் அந்த நிலைப்பாட்டை எதிர்த்து வருகின்றது.

உள்ளகப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் உள்ளடக்கப்பட்டால் போதும் என்ற நிலைப்பாட்டுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வந்திருக்கிறது.

**கூட்டமைப்பு முன்னெடுக்கும் ராஜதந்திர நகர்வு**

கூட்டமைப்பின் இந்த நிலைப்பாட்டையும் அரசு இப்போது கவனத்தில் எடுக்கின்றது. கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், இது விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்புகளைச் சந்தித்து ராஜதந்திர நகர்வுகளை முன்னெடுத்துள்ளார். இலங்கை அரசுக்குப் பல தடவைகள் சலுகை காட்டிய ஐ.நா, இந்த விடயத்தில் சற்று இறுக்கமாக இருக்கும் என்றே தெரிகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வாய் மொழிமூல அறிக்கை, சர்வதேச நீதிபதிகளின் உள்ள டக்கத்தை கடுமையாக வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சர்வதேச நீதிபதிகளை விசாரணையில் இணைத்துக் கொள்வதை நிராகரித்துள்ள அதேவேளை, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இதை முற்றாக நிராகரிக்கவில்லை. 50 க்கு 50 என்ற நிலைப்பாட்டில்தான் அவர் உள்ளார். இது அரசில் ஒரு மாற்றத்தை ஏற்படுத் தக்கூடும்.

"படையினர் குற்றமிழைக்கவில்லை என்றால், ஏன் சர்வதேச நீதிபதிகளைப் பார்த்து அஞ்ச வேண்டும்? பல விடயங்களில் இந்த அரசு சர்வதேசத்திடம் கட்டுண்டுதான் கிடக்கின்றது;"

மகிந்த ராஜபக்ச சர்வதேச விசாரணையை நிராகரித்தபோதெல்லாம் ஐக்கிய தேசியக் கட்சி அதை மேற்கண்ட வாறு விமர்சித்தது. அதே கேள்வியை நாம் இப்போது ஐக்கிய தேசியக் கட்சியிடம் எழுப்ப முடியும். அரசியல் இலாபங்களுக்காக மாறுபாடான கருத்தக்களை வெளி யிடுவது இலங்கை அரசியல்வாதிகளுக்கு ஒன்றும் புதிதல்ல. ஆனால், தொடர்ச்சியாக அதைச்செய்து கொண்டிருக்கமுடியாது. சர்வதேச நீதிபதிகள் விடயத்தில் அரசு என்ன முடிவை எடுக்கப்போகின்றது என்று சர்வதேசம் பார்த்துக்கொண்டு இருக்கின்றது. சர்வதேசத்தைப் பகைத்துக் கொண்டால், அது அரசின் இருப்புக்கே ஆபத்தாக அமைந்துவிடும் என்பதை அரசு அறியாமல் இல்லை.

## சேவை சிறக்க, மனித, பௌதிக வளங்கள் அத்தியாவசியமே

யாழ். மாவட்டத்தில், ஏன் வடக்கில் மிகவும் பிரபல்யம் பொருந்திய வைத்தியசாலையில் நான் பெற்ற அனுபவம் இது.

இங்கு பல்வேறுபட்ட விசேட வைத்திய அலகுகள் காணப்படுவது வரவேற்கத்தக்கதாகும். இருப்பினும், அதற்கேற்ற மனித, பௌதிக வளங்கள் காணப்படாமை மிகவும் வருந்தத் தக்கது.

விசேடமாக ஒரு சில பிரிவுகளில் வைத்தியர் பற்றாக்குறை, தாதியர் பற்றாக்குறை நிலவுவதை நேரடியாக அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இது எனது மனதை மிகவும் வேதனையடைய வைத்தது. இருப்பினும் எனது நோய்நிலை குணமடைய வேண்டிய நிலையில் அனைத்தையும் பொறுத்துக் கொண்டிருந் தேன்.

இந்த நிலையில், கடும் சிரமங்களுக்கு மத்தியில் பணியாற்றும் தாதியர் மற்றும் துறைசார் ஊழியர்கள் மீது பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவது மிகவும் வருந் தத்தக்கது. வளங்களைப் பெற்று பிரிவுகளை ஆரம்பிப்பதே இங்கு பொருத்தமானது. அதனை விடுத்து, கண்துடைப்பு நாடகமாக புதிய பல பிரிவுகளை திறந்து விட்டு, ஊழியர் மேல் அழுத்தங்களைப் பிரயோகிப்பதால் அவர்களது சேவையின் உச்சத்திறனை பெற்றுக்கொள்ள முடியாது போய் விடும் என்பதனை அறியத்தருகிறேன்.

பிரியன்

## ஒலிபெருக்கி பாவனையைக் கட்டுப்படுத்த மாட்டார்களா?

கடந்த 12வருடங்களாக நான் வாசகர் திருமுகம் பகுதிக்கும் சிரிக்கச் சிந்திக்க சில வரிகள் எனும் தலைப்பில் உதயனுக்கு எழுதிவருகிறேன். அவற்றில் யாழ்.குடாப் பகுதியில் ஒலி பெருக்கிகளின் அலறல் பற்றியும், அடிக்கடி குறிப்பிட்டு எனது கவலையை வெளியிட்டு வந்துள்ளேன். இருந்தும் ஒலி பெருக்கியின் தொல்லையைத் தவிர்ப்பது குறித்து அரச அதிகாரிகளிடமிருந்தோ காவல் துறையினரிடமிருந்தோ எந்தவித பயனளிக்கவல்ல நடவடிக்கைகள் இதுவரை முன்னெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த நிலையில்,

அண்மையில் யாழ்.மேல் நீதி மன்ற நீதிவான் மா.இளஞ்செழியன் ஒலிபெருக்கிப் பாவனையால் மக்கள் எதிர் கொள்ளும் துன்பத்தை உணர்ந்து பொலிஸ் உயர் அதிகாரிக்கு சில அறிவுறுத்தல்களை விடுவிப்பது சற்று ஆறுதல் தருகிறது.

மேலும் மூன்று விடயத்தை இங்கு குறிப்பிடலாம் என எண்ணுகிறேன். ஒன்று ஐஸ்கிறீம் வான்களில் பொருத்தியுள்ள ஒலிபெருக்கியின் ஓலம் பல வீதி விபத்துக்களை ஏற்படுத்தக் காரணமாக உள்ளது. முக்கியமாக வாகனத்தைப் பயணிக்க வைத்தபடியே பலத்த தொனியில் பாடல்களை ஒலிபெருக்குவதால் ஏனைய வாகனங்களுக்கும், ஐஸ்கிறீம் வானின் பின்னால் ஓடும் (ஐஸ்கிறீம் வாங்க) சிறுவர்களுக்கும் விபத்து ஏற்படுகின்றது.

இரண்டாவதாக பாண் விற்கும் சிறிய ரக வாகனங்கள் ஒலிபெருக்கியை உச்ச ஒலியில் ஒலிக்கவிட்டபடி பயணிப்பதால் ஏனைய வாகனங்களின் ஹோண் சத்தம் பாதசாரிகளுக்கும் வாகன ஓட்டிகளுக்கும் கேட்பதில் இடைஞ்சல் உண்டு. மூன்றாவதாக மினி பஸ்களிலும், பெரிய பஸ்களிலும், ஓட்டோக்களிலும் உரத்த தொனியில் பாடல்களை ஒலிக்க விடுவதாலும் விபத்துக்களும், பயணிகளுக்கு இடைஞ்சல் ஏற்பட வழி வகுக்கிறது. இவற்றையும் கவனத்தில் கொண்டு கட்டுப்படுத்தினால் மக்கள் காவல்துறையினருக்கும், நீதித்துறையினருக்கும் நன்றியுடையவர்களாக இருப்பர் என்பதில் சந்தேகமில்லை.

கலாபூசணம் மு.மாசிலாமணி

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு. புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். [illegible] த வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க இராணுவத்தில் அரவாணிகளுக்கு அனுமதி

வொஷிங்ரன், ஜூலை.2
அமெரிக்க இராணுவத்தில் மாற்றுப்பாலினத்தோர் (அர வாணிகள்) வெளிப்படையாகப் பணிபுரியலாம் என நேற்றுமுன்தினம் பென்ரகன் அறிவித்தது. அத்துடன் அவர்களுக்கான மருத்துவச் செலவு களையும் அரசு பெறுப்பேற்கிறது என்றும் தெரிவித்தது.

அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகமான பென்ரகன் எடுத்துள்ள இந்த முடிவு ஒரு மைல் கல் எனக் கருத்துகள் வெளியாகியுள்ளன.

மக்களுக்கும், இராணுவத்தினருக்கும் கடமையாற்ற மாற்றுப்பாலினத்தோருக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது என பாதுகாப்பு செயலர் அஷ்டன் காட்டர் தெரிவித்தார். “மக்களுக்குப் பணிபுரியும் களத்தில் திறமையாளர்களுக்கு அங்கீகாரம் வழங்க வேண்டும். தேவையற்ற தடைகள் எமது இலக்கைச் சென்றடைய வழிவகுப்பதில்லை. எதிர்வரும் ஒக்ரோபர் மாத்தில் இருந்த மாற்றுப் பாலினத் தோருக்கு மருத்துவ வசதி வழங்கப்படும்” எனவும் தெரிவித்தார்.

5 வருடங்களுக்கு முன்னர், மாற்றுப்பாலினத்தோர் தொடர்பில், வெளிப்படை யான கருத்துக்கள் அமெரிக்க இராணுவத்திடம் இருக்க வில்லை. மாற்றுப் பாலினத்தோர் ஒன்றில் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோதான் இராணுவத்தில் இணைந்து பணியாற்றக் கூடியதாக இருந்தது. இந்த அறிவிப்பின் மூலம் இனிமேல் அவர்கள் தம்மை மாற்றுப் பாலினத்தோர் என்று வெளிப்படையாக அடையாளப்படுத்திக் கொண்டே இராணுவ சேவையாற்ற முடியும். மாற்றுப் பாலினத்தோருக்கான அங்கீகாரம், முதற்கட்டமாக ஒரு வருடத்திற்கே அனுமதிக்கப்பட்டுள்ளது. விளைவுகளை அவதானித்து இவற்றுக்கான முழுமையான அங்கீகாரம் வழங்கப்படும். பணியாற்றும்போது, உடல், உள ரீதியில் மாற்றுப் பாலினத்தவர்களின் வலு, அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என அமெரிக்க இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

(உ-ரி4)

# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச்செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்டச்செயலரால் **சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் வாழ்வாதார உதவி திட்டத்தின் கீழ்** யாழ் மாவட்ட செயலகத்தால் கீழே குறிப்பிடப்பட்ட பொருள்களை பெற்றுக் கொள்வதற்காக பொருத்தமான வழங்குநரிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் **மீள்குடியேற்ற பிரிவு. மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் 04.07.2016 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் மேலதிக **மாவட்டச் செயலாளர்-காணி, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** (தொலைபேசி இல:021 221 2631) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றினை **மீள்குடியேற்ற பிரிவு மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து **04.07.2016 முதல் 20.07.2016 வரை** காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 500/- ஐ கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் **தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம் ,யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு **21.07.2016 ஆம் திகதியன்று பி.ப 2.30மணிக்கு** அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் **அரச அதிபர் அலுவலகத்தில்** வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் கையொப்பமிட்டு கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர், மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேற்குறிப்பிட்ட முகவரியில் **21.07.2016 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு** நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச்சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
7. முன் ஆயத்த கூட்டம் ( Prebid Meeting) **15.07.2016** காலை **10.00மணிக்கு அரசஅதிபர் மாநாட்டு மண்டபத்தில்** நடைபெறும்

| கேள்வி இல | விவரம் | அண்ணளவான எண்ணிக்கை | மீளளிக்கப்படாத தொகை (ரூபா) |
|---|---|---|---|
| JF/RES/LH/I/01/2016 | நீர் இறைக்கும் இயந்திரம் | 240 | 500/= |
| | தூவல் நீர்ப்பாசன உபகரணங்கள் | 06 | |
| | மண்வெட்டி | 280 | |
| | பூவாளிகள், பட்டை | 23 | |
| | மருந்துதெளி கருவிகள் | 190 | |
| | மின்சார மோட்டர்கள் | 20 | |
| | Alkathene Pipe -30m | 300 | |
| | Alkathene Pipe -15m | 50 | |
| JF/RES/LH/I/02/2016 | தையல் இயந்திரம் | 150 | 500/= |
| JF/RES/LH/I/03/2016 | மீன்பிடி உபகரணங்கள் | 300 | 500/= |
| JF/RES/LH/I/04/2016 | நூலக அலுமாரி –Steel | 10 | 500/= |
| | துணிவெட்டும் மேசை –மரம் (Sewing Cutting Table) | 210 | |
| | கதிரை –மரம் | 160 | |

**நா.வேதநாயகன்,**
**அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாண மாவட்டம்.**
(சி/22164) (11.17.18)



# நடையா...! இது நட

மட்ரிட், ஜூலை.2
ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டில் வருடாந்த மாற்றுப்பாலினத்தோர் கெ
வாரகாலமாக இடம்பெறும் இந்தக் கொண்டாட்டங்களில், குதிச் செரு
நடைபெறும் இந்தப் பந்தயத்தில் பலர் கலந்து கொண்டனர். பந்தயத்தி
வழங்கப்பட்டது. இந்தக் கொண்டாட்டங்களின்போது சுற்றுச் சூழலைப் ப
க்கப்பட்டது. கொண்டாட்ட இசையைக் கேட்க விரும்புபவர்கள் தத்தமது
சபை நிகழ்ச்சி ஏற்பாட்டாளருக்கு அறிவுறுத்தியது.

# பிரச்சினைகள் கண்டு ந
# இறையாண்மையை வ

## கட்சி மாநாட்டில் சீன ஜனாதிபதி சி ஜின்பி

பீஜிங், ஜூலை.2
சீனா தனது இறையாண்மையை ஒருபோதும் விட்டுக் கொடுக்காது என சீன ஜனாதிபதி சி ஜின்பிங் நேற்றுத் தெரிவித்தார். சீனாவின் ஆளும் கட்சியான கொம்யூனிஸ்ட் கட்சியின் 95ஆவது ஆண்டு நிறைவு வைபவத்தில் உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். “பிரச்சினை களைக் கண்டு நாம் அஞ்சவில்லை” எனவும் தெரிவித்தார்.



தென் சீனக் கடல் முழுவதும் தனது ஆதிக்கத்திற்கு உட்பட்டது என்று சீனா உரிமை கோரி வருவது குறித்த சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பு விரைவில் வரவுள்ள நிலையில் சீன ஜனாதிபதியின் இந்தக் கூற்று வந்துள்ளது.

“நாட்டின் தேசிய இறையாண்மைக்கு, பாதுகாப்பிற்கு, அபிவிருத்திக்கு பாதகத்தை ஏற்படுத்தும் எந்தவொரு சின்னச் செயலிலும் நாம் ஈடுபடுவோம் என்று உலகின் எந்த நாடும் எதிர்பார்க்கக்கூடாது” என்று உறுதியாகத் தெரிவித்தார் சீனப் பிரதமர்.

தென்சீனக் கடல் முழுவதும் தனக்கே சொந்தம் என்று உரிமை கோரும் சீனா, அங்கு ஒரு செயற்கைத் தீவை உருவாக்கி வருகிறது. இதனை எதிர்த்து, அந்தக் கடலில் தனக்கும் உரிமை இருக்கிறது என்று கூறும் பிலிப்பைன்ஸ் இந்த விவகாரத்தை ஹேக் நகரில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தின் முன் எடுத்துச் சென்றது. இந்த வழக்கின் தீர்ப்பு எதிர்

வரும்
கப்பட
சீனா
பதற்
திக்கு
போர்
அனு
ரிக்கா
அமெ
லுக்கு
தனது
தெரிவ
“அடு
போய்

# பள்ளிவாசலில் தற்கொ

யாவுண்டே, ஜூலை.2
ஆபிரிக்க நாடான கமரூனில் உள்ள பள்ளிவாசலில் புதன்கிழமையன்று தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 11 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர் என இராணு வத்தினர் தகவல் தெரிவித்தனர்.

புனித மாதமான ரமழானில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிரு
நோன்பு முடிந்த நேரத்தில் த
இடம்பெற்றது.

ஜன்கானாப் பகுதியில், பி
னையை முடித்துவிட்டு அ
கூடாரத்தினுள் ஒன்று கூடி
போது குண்டுதாரி குண்டை
வைத்தார் என அதிகாரபூர் வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடையா...!

தோர் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. சூக்கா சதுக்கத்தில்ஒரு
நிச் செருப்பு ஓட்டப்பந்தயமும் இடம்பெற்றது. வருடம் ஒரு முறை
ந்தயத்தில் வெற்றி பெற்றவருக்கு ஆயிரம் யூரோ பரிசுத் தொகை
ழலைப் பாதிக்கும் என்பதால் ஒலிபெருக்கி பயன்படுத்தத் தடைவிதி
தத்தமது 'கெட்செட்' களைப் பயன்படுத்தலாம் என்று மட்ரிட் நகர
(உ-ரி4)

# நாம் அஞ்சவில்லை
# விடவும்மாட்டோம்

## ஜின்பிங் கர்ச்சிப்பு



வரும் 12ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது. இதற்கிடையில் சீனாவின் செயற்கைத் தீவால் பதற்றம் உருவாகியுள்ள பகுதிக்கு நெருக்கமாகத் தனது போர்க் கப்பல் ஒன்றை அனுப்பி உள்ளது அமெரிக்கா.
அமெரிக்காவின் இந்தச் செயலுக்குப் பதிலளிப்பது போன்று தனது உரையில் கருத்துத் தெரிவித்தார் சீன ஜனாதிபதி. "அடுத்தவருடைய வாசலில் போய் நின்று கைகளை மடக்கி உயர்த்தி பலத்தைக் காட்டவில்லை நாம். அப்படிச் செய்வது யாருடைய பலத்தையும் காட்டாது. அதனால் யாரும் பயப்படவும் மாட்டார்கள்" என்றார் அவர்.
ஹேக் நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் தன்னைக் கட்டுப்படுத்தாது என்று தெரிவித்துள்ள சீனா, வழக்கு நடவடிக்கைகளையும் புறக்கணித்துள்ளது.
தன்னுடைய பேச்சில் சீனாவினுடைய ஆளும் கட்சியின் செயற்பாடுகளை ஜனாதிபதி பெரிதும் சிலாகித்தார். கட்சியின் மத்திய அதிகாரக் குவிப்பு ஆட்சி முறையையும் அவர் வரவேற்றார். "கட்சியின் அனைத்துத் தோழர்களும் நினைவில்கொள்ளவேண்டியது என்னவென்றால், நாங்கள் சோசலிசத்தை சீனாவின் கூறுகளுடன் கட்டமைத்து வருகின்றோம், வேறு எந்தவொரு கருத்தியலோடும் அல்ல என்பதைத்தான்" என்றார் அவர். (உ - ரி4)

# துருக்கி மீது ரஷ்யா விதித்த சுற்றுலாத் தடை நீக்கம்

மொஸ்கோ, ஜூலை.2
துருக்கி மீது விதிக்கப்பட்டிருந்த சுற்றுலாத்தடையை நீக்கினார் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின். நாட்டின் தலைமையகமான கிரெம்ளின் மாளிகை இதனை அறிவித்தது.
ரஷ்ய போர் விமானம் ஒன்று கடந்த நவம்பர் மாதம் துருக்கிய இராணுவத்தால் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதனை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பாதிக்கப்பட்டன. விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதற்காக துருக்கி ஜனாதிபதி பின்னர் மன்னிப்புக் கோரினார். அதையடுத்து ரஷ்யா விதித்திருந்த சுற்றுலாவுக்கான தடைநீக்கப்பட்டது என்று ஜனாதிபதி மாளிகையின் அறிக்கை தெரிவித்தது. ரஷ்யா-துருக்கி இடையிலான சுற்றுலாப் பயணங்களை அனுமதிப்பதற்கான ஆவணத்திலும் புடின் கையொப்பமிட்டார்.
இரு நாடுகளுக்கிடையில் ஏற்பட்ட முறுகலை அடுத்து 7 மாதங்களாக இந்தத் தடை நடைமுறையில் இருந்தது. இப்போது ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவை மேம்படுத்த திட்டமிடப்படுவதாகக் கிரெம்ளின் தெரிவித்தது. அத்துடன் துருக்கிய உணவுப் பொருள்கள் இறக்குமதியும் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என தெரிவித்தது.
துருக்கி ஜனாதிபதி ஏர்டகன், ரஷ்ய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு மன்னிப்புக் கோரும் உத்தியோகபூர்வ கடிதத்தை கடந்த திங்கட்கிழமை மொஸ்கோவுக்கு அனுப்பி வைத்தார். இதனை அடுத்து இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையில் அமைதி ஏற்பட்டுள்ளது. (உ-ரி4)

# சீனா நோக்கி தாய்வான் திடீர் ஏவுகணை வீச்சு

## தவறுதலாக நடந்தது என்று உடனடியாகவே அறிவிப்பு



பீஜிங், ஜூலை.2
சீனாவை நோக்கித் தாய்வான் ஏவுகணை ஒன்றை ஏவியதால் பதற்றம் ஏற்பட்டது. எனினும் அந்த ஏவுகணை சீனா பக்கமாகத் தவறுதலாக ஏவப்பட்டது என்று தாய்வான் கடற்படை அறிவித்தது. பயிற்சியின் போது ரோந்துப் படகு ஒன்றிலிருந்து சிங்பெங்-3 எனும் ஏவுகணை தவறுதலாக ஏவப்பட்டது என ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
ஏவுகணையை ஏவிய ரோந்துப்படகு, பென்கு தீவின் கடற்பரப்பில் இருந்தது. "ஏவுகணை ஏவப்பட்ட திசை சீனாவின் பக்கமாகும். அது கடலிலேயே வீழ்ந்து வெடித்தது.
இந்தச்சம்பவத்தில்யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை" எனத் தாய்வானின் உத்தியோகபூர்வு அறிக்கை கூறியது. இந்தச் சம்பவம், சீனாவின் ஆளும் கட்சியான கொம்யூனிஸ்ட் கட்சியின், 95 ஆவது ஆண்டு நிறைவு தினத்தில் இடம்பெற்றது.
இந்தத் தற்செயல் சம்பவம் தொடர்பில், சீனாவிடம் உடனடியாகவே அறிவித்ததாக தாய்வான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. சம்பவம் குறித்து விசாரணை இடம்பெற்று வருகிறது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்தப்பட்ட ஏவுகணை 300 கிலோ மீற்றர் தொலை தூரம் சென்று தாக்கவல்லது.
தாய்வான் தன்னைத் தனி நாடு என்று கூறிவருகின்ற போதும் அது சீனாவின் ஒரு பகுதி என்று பீஜிங் தொடர்ந்து கூறிவருகின்றது. தாய்வானுக்கு அமெரிக்கா ஆதரவு வழங்கிவருகிறது. இது தனது இறைமையை மீறும் செயல் என்று சீனா கண்டித்து வருகிறது. (உ-ரி4)



# கெட்டுப்போன நாய் இறைச்சி விற்றோருக்கு சீனாவில் சிறை

பீஜிங், ஜூலை.2
சீனாவில் உண்ணத் தகாத - கெட்டுப்போன - நாய் இறைச்சியை விற்பனை செய்த குற்றச்சாட்டில் 22 பேருக்கு அந்த நாட்டு நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது. ஜியாங்சு மாகாணத்தில், 5 ஆயிரம் கிலோ உண்ணத் தகாதநாய் இறைச்சியை விற்பனை செய்தவர்கள் என இனம் காணப்பட்ட 22 பேருக்கு 8 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.
ராகோ நகரில் பாவனைக்குதவாத உணவுப் பொருள்களை விற்பனை செய்தது தொடர்பான 14 சம்பவங்களை அதிகாரிகள் விசாரித்தார்கள். 5 ஆயிரம் கிலோ நஞ்சூறிய நாய் இறைச்சி, 11 ஆயிரம் விசம் ஏறிய பறவைகள் இறைச்சி மற்றும் 500 கிலோ கிராம் அபாயகரமான வேதியல் கலவைகள் என்பன தொடர்பான குற்றங்களும் அதில் அடக்கம்.
7 ஆயிரம் கிலோ நஞ்சூறிய நாய் இறைச்சியை கொள்வனவு செய்த லாவோ கான் என்ற நபரையும் மேலும் ஐவரையும் பொலிஸார் கைது செய்தனர். அதற்கு முன்பதாக அன்குய், ஜுன்டொங், ஜியாங்சு ஆகிய பகுதிகளில் உள்ள விடுதிகளுக்கு 2 ஆயிரம் கிலோ இறைச்சி விற்பனை செய்யப்பட்டிருந்தது. மேலும் 8 பேர், விசம் ஏறிய 11 ஆயிரம் பறவைகளை, ஜுங்காய், சீஜி யாங், குவாங்டொங் ஆகிய மாகாணங் களுக்கு விற்பனை செய்தனர் என்பதற்காகக் கைது செய்யப்பட்டனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.
கடந்த வாரம் சீனாவில் இடம் பெற்ற நாய் இறைச்சித் திருவிழா குறித்து, உலக அளவில் கண்டனங்கள் எழுப்பப்பட்டன. ஆனாலும் திருவிழா கோலாகலமாக நடந்தேறியது. இது மேலும் கண்டனங்களை உருவாக்கியது. இந்த நிலையில் பாவனைக்குதவாத நாய் இறைச்சியை அதிகாரிகள் கைப்பற்றி யிருக்கின்றனர்.
"ஆடு, மாடு மற்றும் பன்றி இறைச்சிகள் பண்ணை உற்பத்திகள் மூலம் கிடைக்கப் பெறுகின்றன. ஆனால் நாய் இறைச்சி எங்கிருந்து கிடைக்கின்றது என்பது எமக்குத் தெரியாது.
அத்துடன் நீண்ட பயணத்தின் போது இறைச்சி கெட்டுப்போகாமல் இருக்க உள்நோக்கம் இல்லாமலேயே ஆபத்தான வேதியல்களை அவற்றில் சேர்த்துவிடுகின்றனர்" எனவும் தெரிவித்தார் உணவு அறிவியல் பல்கலைக்கழகப் பேராசிரியர் பான் சிகொங்.நாய் இறைச்சி தொடர்பில் சீனாவில் வலுவான சட்ட திட்டங்கள் ஏது மில்லை. (உ-ரி4)

# கொலைத் தாக்குதல்; கமரூனில் கொடூரம்; 11 பேர் உயிரிழப்

பட்டிருக்கிறது.
த்தில் தாக்குதல்
யில், பிரார்த்த
டு அனைவரும்
று கூடினர். அப்
ண்டை வெடிக்க
ரபூர் வத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டது.
ஒரு சிறுவனே தாக்குதலை நடத்தினான் என இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். சமீப காலமாக போகோ ஹறம் அமைப்பினர் கொரில்லா முறைத் தாக்குதல்களை கமரூனில் நடத்தி வருகின்றனர். அவர்களுக்கு எதிரான நடவடிக்கையை இராணுவம் தீவிரப்படுத்தி, அவர்களின் முக்கிய இடங்களைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து இத் தகைய தாக்குதல்கள் தீவிரம் பெற்றுள்ளன. கடைசியாக நடந்த தாக்குதலில் பல பதின்ம வயதுச் சிறுமிகளும் உயிரிழந்தனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.
வடகிழக்கு நைஜீரியா இஸ்லாமியத் தலைநகர் என பொகோஹறம் அமைப்பால் அறிவிக்கப்பட்டுள்ளது. கமரூனில் கடந்த 7 வருடங்களாக நடந்துவரும் போரில், 15 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். 2 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.
போகோ ஹறம் அமைப்புக்கு எதிரான நடவடிக்கைகளை இராணுவம் தீவிரப்படுத்தியிருக்கிறது.
கடந்த புதன்கிழமை 6 கிராமங்க
இடம் பெற்ற அதிரடித் தேடுதல்
போகோ ஹரத்துடன் தொடர்புடைய
கள் என்று சந்தேகிக்கப்படும் 24
கைது செய்யப்பட்டனர். இந்த அதிர
தேடலில் ஓர் இராணுவச் சிப்பாய் ச
டையில் உயிரிழந்தார். (உ-ரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிறப்பு முதல் இறப்பு வரை
# பிறந்த எண்ணின் பலன்கள்



(பிறந்த எண்ணின் பலன்கள் என்ற தொடரில் பிறந்த எண் 9 குறித்த விவரங்களின் தொடர்ச்சி கீழே பிரசுரமாகின்றன.)

**இவர்களது திருமணம்**

இவர்கள் தாம்பத்தியத்தில் மிகுந்த விருப்பமும், வேகமும் உடையவர்கள். தங்களது நட்பு எண்களான 3, 5, 6, 9ஆகியஎண்களில்பிறந்தவர்களை (பிறவி எண், கூட்டு எண்) மணந்து கொண்டால், இவர்களுக்கு ஆனந்த மானதிருமண வாழ்க்கை அமையும். குழந்தைப் பாக்கியம் இவர்களுக்கு உண்டு. ஆண் குழந்தை நிச்சயம் ஏற்படும்.

2, 11, 20, 29, 8, 17, 26 ஆகிய திகதிகளில் பிறந்த பெண்களையும், கூட்டு எண் 2, 8 வரும் பெண்களையும் திருமணம் செய்யக்கூடாது. திருமண வாழ்க்கையே கசந்துவிடும். சில அன்பர்கள் மனைவியின் கொடுமையால் மனைவியை விட்டு ஓடத் துணிந்து விடுவார்கள். திருமண நாளின் எண்கள் 3, 6, 9, 1ஆகியவை வந்தால், குடும்ப வாழ்க்கை நன்கு அமையும்.

**இவர்களது நண்பர்கள்**

3, 6, 9 ஆகிய எண்களை உடைய அன்பர்கள் இவர்களுக்கு நல்ல நண்பர்களாகவும், கூட்டாளிகளாகவும் அமைவார்கள். முதலாம் திகதி பிறந்தவர்களின் உதவி நடுத்தரமானது தான். 2, 8 எண்காரர்களின் நட்பையும், கூட்டையும் தவிர்த்து விட்டால், பல நட்டங்களை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்ளலாம்.

**இவர்களது நோய்கள்**

இவர்களது உடலில் ஏதாவது ஒரு நீண்டகாலப் பிணி இருக்கும். அடிக்கடி வாய்வுத் தொந்தரவுகள், வயிற்றுவலி போன்றவை ஏற்படும். இவர்களுக்குப் பல் வலி, பற்களில் பூச்சி விழுதல் போன்றவை ஏற்படும். கால் ஆணித் தொந்தரவுகள், பாதங்களில் வலி, வெடிப்புக்கள் ஆகியவை ஏற்படும்.

மிகவும் உஷ்ண திகதிகளாதலால், இவர்களுக்கு அடிக்கடி மலச்சிக்கலும், மூல உபத்திரவங்களும், வலியும், கண்களில் எரிச்சலும் ஏற்படும். பகலை விட இரவில் உற்சாகமாக இருப்பார்கள். நீண்ட நேரம்இரவில்குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டோ, பேசிக் கொண்டோ இருப்பார்கள். இவர்கள் தினமும் நீராகாரம் பருகி வந்தால் மிகவும் நல்லது. உடல் சூட்டைத் தணிக்க நீராகாரம் சிறந்த பானமாகும். நெருப்புக்காயங்கள், விபத்துக்கள் ஆகியவைகளால் உடலில் பாதிப்பும் உண்டு. குருதிக் கட்டிகள், குடற்புண்கள், குருதிகெடுதல்ஆகியவைகளால் பாதிப்பும் உண்டு. கூர்மையான ஆயுதங்களைக் கையில் வைத்துக் கொள்ளக்கூடாது. இந்த எண்காரர்களின் உடம்பில் எப்படியும் சத்திர சிகிச்சை (ஏதாவது ஒரு காரணத்துக்காவது) செய்ய வேண்டி வரும்.

**இவர்களது தொழில்கள்**

இவர்களில்பெரும்பாலானோர்எஞ்சினியர்களாகவும், அறுவை சிகிச்சை நிபுணர்களாகவும் இருப்பார்கள். இராணுவம், பொலிஸ் போன்ற அதிகாரப் பதவிகளில் விருப்பம் உடையவர்கள். மேலும் கட்டடம் கட்டுதல் இயந்திரங்கள், வியாபாரம், இரும்புச் சாமான்கள் உற்பத்தி ஆகியவை நல்லஅதிர்ஷ்டம்தரும். சிறந்தஅமைச்சர்களாகவும், இராஜ தந்திரிகளாகவும் இருப்பார்கள். வான இயல் துறையும், இவர்களுக்கு மிகவும் பிடிக்கும்.

நாட்டுக்காகத் துப்பாக்கி ஏந்தும் வீரர்கள் இவர்கள் தான். அநீதிகளை எதிர்த்துப் போராடுவார்கள். இவர்கள் அரசியலிலும் ஈடுபடலாம். பலரை வைத்து வேலை வாங்கும் தலைவர்களாக, உயர் அதிகாரிகளாக புகழ் பெறுவார்கள். இவர்கள் வீரம் மிகுந்தவர்கள், துப்பறியும் தொழில் ஒத்து வரும். கலைத் தொண்டிலும், உணர்ச்சியைத்தூண்டும்எழுத்திலும் பிரகாசிப்பார்கள். பொதுமக் களுக்காகத் தியாகம் (உண்மையாகச்) செய்ய வல்லவர்கள்.

பிரபல வேட்டைக்காரர்களாகவும், வனவிலங்குகளைத் திறமையாக அடக்கும் தொழிலிலும் நன்கு பிரகாசிப்பார்கள். கால் பந்தாட்டம், டென்னிஸ், ஹொக்கிப் பந்தயம் ஆகியவற்றில் ஈடுபாடு கொள்வார்கள். சிறந்த விளையாட்டு வீரர்களாகவும் புகழ் பெறுவார்கள். ரயில், கார், ஆகியவற்றின் ஓட்டுநர்கள், தீயணைப்புத் துறை, மின்சாரத்துறை ஆகியவற்றிலும் இவர்கள் தொழில் அமையும்.

(தொடரும்)

# இயற்கையும் மனிதனும்



வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா

நாம் சூறாவளி, சுனாமி, வெள்ளப்பெருக்கு, கடும்வெயில், நிலநடுக்கம், கடற்கோள்கள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு வருகின்றோம். எந்த ஒரு நிகழ்வுக்கும் அடிப்படைக் காரணம் என்று ஒன்று இருந்தாக வேண்டும். ஆதி மனிதன் தோன்றுவதற்கு முன்பே இயற்கையின் மாற்றங்கள், அதனால் ஏற்படும் சீற்றங்கள் போன்றவை இருந்துதான் வந்திருக்கின்றன. மனிதன் தன் அறிவுக்குப் புலப்படாத காலகட்டத்தில் இவற்றின் மீது அவனுக்கிருந்த பயம், அவற்றிலிருந்து எப்படித் தப்பிப்பது என்பது பற்றிய சிந்தனை அவனை மற்ற உயிரினங்களிலிருந்து தனிமைப் படுத்தி எதையும் சிந்தித்து முடிவெடுக்கும் ஆற்றல் பெற்ற உயிரினமாக மாற்றியது.

இதன் காரணமாகவே பகுத்தறிவு, எதிலும் வரமுன் காப்பு, வந்தபின் காப்பு, நிவாரணப்பணி என இடர் முகாமைத்துவம் நிர்வாக ரீதியில் அமைக்கப்பட்டது. கனடாவில் எஸ்கிமோவரின் சீவியம், ஜப்பானில் மிதக்கும் வீடுகள் ஆகியன இயற்கைக்கு எதிரான எதிர்நீச்சல்களே. மனிதன் இயற்கை வளங்களைத் தனக்கே உரிமைப்படுத்தி வருகின்றான். இயற்கையின் சீற்றத்தில் மண்துகள்கள், மரங்கள்,



மலைகள், செடிகொடிகள் ஆகியவற்றுக்கு எப்படிப்பட்ட பாதிப்புகள் நிகழுமோ, அதே பாதிப்புத் தான் மனிதனுக்கும் . நாம் வாழும் பூமி தனது முழுமையான பகுதியிலும் உயிரினங்கள் வாழ அனுமதிக்கவில்லை. பூமியின் மேற்பரப்பில் மட்டும் வாழலாம். மேல் மட்டத்தில் இருந்து சராசரியாக 12 மைல்கள் ஆழம் வரை உயிர்கள் வாழலாம். அதன் பின் நெருப்புக்குழம்பு உருண்டை அதனை அடுத்து இரும்புத் தன்மை கொண்ட புவியின் மைய உட்கரு ஆகியன அமைந்துள் ளன. மணிக்கு ஆயிரம் மைல் வேகத்தில் பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்ளும். நொடி ஒன்றுக்கு 20மைல்வேகத்தில் சூரிய னைச் சுற்றிக் கொண்டிருக்கும் இயற்கை என்னும் மாபெரும் சக்தியின் ஒரு சிறு துகள்தான் மனிதன்.





நேபாளத்தில் நிலநடுக்கம், மலைநாட்டில் மண்சரிவு, எரிமலைக் குமுறல், புயல் எனச் செய்திகளை அடிக்கடி கேட்கிறோம். எமது பகுத்தறிவுடன் இயற்கையை அரவணைத்து, சூழலுக்கேற்ப, தேவைகளை முழுமை செய்ய முன்னிற்போமாக. இயற்கையுடனான எதிர்நீச்சலின் போது அழிவுகளுக்கு ஆளாவோம். சமீபத்தில் அமெரிக்காவில் ஏற்பட்ட அழிவுகள் எமக்குப் பாடமாக அமையும். எங்கள் வளமான வாழ்வுக்கு இயற்கைதான் வழிகாட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசா குவேந்திரநாதனின் பயன்மிகு வீட்டுத்திட்டம்

■ க. கனகசபை

புனித பூமியாகிய யாழ்ப்பாணத்தில், கோண்டாவிலைத் தனது வசிப்பிடமாகக் கொண்ட கொடை வள்ளல், சமூக சேவையாளன், ஏழைகளின் காவலன் இராசையா குவேந்திரநாதன் தனது தனி மனிதப் பங்களிப்பின் மூலம் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயக சனசமூக நிலையத்தினதும், குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தின் ஊடாக நவக்கிரிப் பகுதியில் புத்தூர் தெற்கு மஸ்கன் வீதியில் 15 வீடுகளைக் கொண்ட மிக அழகான வீட்டுத்திட்டத்தை அமைத்துள்ளார். இந்த வீட்டுத்திட்டத்துக்கு ராஜா பிளாசா மாதிரிக் கிராமம் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

சிறுவர் இல்லங்களில் வாழும் 14 பெண்பிள்ளைகளின் குடும்பங்களுக்கு இந்த வீடுகள் நன்கொடையாகப் பகிர்ந்தளிக்கப்பட் டுள்ளன.

இந்த மாதிரிக் கிராமத்தின் திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை ஓய்வுபெற்ற நீதியரசரும், வடமாகாண முதலமைச்சருமான க.வி. விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டு உத்தியோகபூர்வமாகபயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது இதன் சிறப்பம்சம் ஆகும்.

குவேந்திரநாதன் சிறு வயதில் இருந்தே வியாபாரத்தின் ஊடாகத் தன்னை வளர்த்து சமுதாயத்துக்காக பல விதமான நற்பணிகளை மேற்கொண்டு வருகின்றார். அவர் செய்திருக்கின்ற நற்பணிகளில் ராஜா பிளாசா மாதிரிக்கிராம வீட்டுத் திட்டம் முதன்மை இடத்தைப் பிடித்திருக்கின்றது எனலாம். இந்த வீட்டுத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்தி, தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளிடம் கையளித்தமை அவரின் சமூக சேவைகளில் மிகவும் முக்கியமானது. 15 வீடுகளும் 25 பரப்புக் காணியில் மிகவும் அழகாக ஒரே வடிவில் கட்டப்பட்டுக் காணப்படுகின்றன. ஒவ்வொரு வீடும் ஒன்றரை பரப்புக் காணியில் இரண்டு அறைகள், சமையலறை, விறாந்தை, குழாய்க்கிணறு, மோட்டர், மலசலகூடம், குளியலறை, மூன்று தென்னம் பிள்ளைகள், ஒரு தேசி மரம் என்பவற்றோடு காணப்படுகின்றது. ஒவ்வொரு நிரையிலும் 5 வீடுகள் என்ற அடிப்படையில் 3 நிரையிலும் 15 வீடுகள் காணப்படுகின்றன. இரண்டு ஒழுங்கைகள் 14 அடி அகலத்தில் உள்ளன. இந்தப் புதிய வீடுகள் காணி வாங்கப்பட்டு 3 மாத காலத்தில் கட்டி முடிக்கப்பட்டு, 14 பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

ஒரு வீடு சனசமூக நிலையத்துக்கு ஒதுக்கப்பட்டு தற்போதைய பயனாளிகளின் நலனைக் கவனித்த பின்னர் ஈற்றில் அந்தவீடும் ஒதுக்கப்பட்ட பயனாளிக்கு வழங்கப்படவுள்ளது.

இராசையா குவேந்திரநாதன், திருமதி ரஞ்சினதேவி குவேந்திரநாதன் மற்றும் இவர்களது குடும்பத்தவர்களும் தம் பெற்றோர் நினைவாக இந்த வீட்டுத்திட்டத்தை அமைத்துக் கொடுத்துத் தமது பெற்றோரை மனதில் இருத்தி, மேன்மைப்படுத்தி உள்ளார்கள். இவர்களது முன்மாதியான செயல் நம்மக்களிடையே பணம் படைத்தவர்களுக்கு ஒரு படிப்பினையாக அமையட்டும்.

அன்ன சத்திரங்கள் அமைத்து, மடாலயங்கள், தாக சாந்தி நிலையங்கள் அமைத்து பொது மக்களின் பசியைப் போக்கும் தர்ம சீலர்கள்போல் இவரும் முன்மாதிரி வீட்டுத் திட்டத்தை அமைத்து, மிகவும் வசதி குறைந்த பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு வழங்கித் தமது செயற்பாட்டை நடை முறைப்படுத்தி இருப்பது மிகவும் போற்றுதற்குரியதாகும். யாழ். மாவட்டத்தில் பலர் வசதி படைத்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் ஏழைகளுக்கு உதவ முன்வருவதில்லை. சிலர் தமது பெயர், புகழுக்காக கோயில் திருவிழாக்களில் பணத்தைக் கொட்டித் தம்மை முன்னிலைப்படுத்திக் கொள்கின்றனர். ஏழைகளின் சிரிப்பில் இறைவன் இருக்கிறான் என்று கூறுவார்கள்.



குவேந்திரநாதன் சிறு வயதில் இருந்தே வியாபாரத்தின் ஊடாகத் தன்னை வளர்த்து சமுதாயத்துக்காக பல விதமான நற்பணிகளை மேற்கொண்டு வருகின்றார். அவர் செய்திருக்கின்ற நற்பணிகளில் ராஜா பிளாசா மாதிரிக் கிராம வீட்டுத் திட்டம் முதன்மை இடத்தைப் பிடித்திருக்கின்றது எனலாம்.

குவேந்திரநாதன் மிகவும் அமைதியாக இருந்து பல ஆக்கபூர்வமான செயல்களைத்திறம்படச்செய்துள்ளார். இந்த வீடுகளைப் பெற்றவர்கள் அனைவரும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட ஏழைகள். இவர்கள் உள்ளத்தில் ஏற்படும் மன மகிழச்சியும், உளமார வாழ்த்துக்களும் குவேந்திரநாதன் குடும்பம் என்றும் இத்தரணியில் நீடூழி வாழ வாழ்த்தும். இந்தப் பெரிய பணிகளைச் சர்வ சாதாரணமாக செய்துவிட்டு மிகவும் அமைதியாக இருக்கும், குவேந்திரநாதனைப் பார்க்கும்போது இவரா அம்மனிதர் என ஆச்சரியப்பட வேண்டி யுள்ளது.



இவற்றை விட கோண்டாவி லில் காணிவாங்கி இராம கிருஷ்ணன் மகா வித்தியா லயத்துக்கு பல லட்சம் ரூபா செலவில் மாடிக் கட்டடம் ஒன்றைக் கட்டிக் கொடுத்துள்ளார். கோண்டாவிலில் தபால் நிலையம் ஒன்றையும் மற்றும் கோண்டாவிலில்சனசமூக நிலையம், விளையாட்டுக் கழகம், மற்றும் முன்பள்ளி ஒன்றையும் அமைத்துக் கொடுத்துள்ளார். பொன்மகான்கள் உவந்தளிக்கும் பொன்மனப் பேராளன் ஒருவர் தனது ஏழு சந்ததிக்குச் சொத்துச் சேர்க் கும் இந்தக் கால கட்டத்தில் தமது ஏழு சந்ததிக்குப் போது மான சொத்தை ஏழைச் சமூ கத்துக்கு நன்கொடையாக உவந்தளித்திருக்கும் குவேந்திரநாதனின் பணி மகத்தானதேயாகும். இப் பேற்பட்ட நற்செயல்களைச் செய்பவர்கள் இறைவனுக்கு அடுத்த படியாகப் போற்றப்பட வேண்டியவர்கள் இந்தப் செய்தியைப் பத்திரிகை வாயிலாக பார்த்தபோது எனது உடல் புல்லரித்தது. அவரை எனக்கு முன் பின் தெரியாது. அவரை நேரடியாகச் சென்று பார்த்து எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்க எண்ணியுள்ளேன். அதற்கு முதற்கட்டமாக உதயன் பத்திரிகை ஊடாக எனது வாழ்த்துக்களை அந்தக் கொடை வள்ளலுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது குடும்பம் இந்த அவனியில் நீடூழி காலம் வாழ்ந்து எமது நாட்டுக்கு மேன் மேலும் பல அறப்பணிகளைச்செய்து ஏழை களுக்குத் தோள் கொடுக்கவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

“ யாழ். மாவட்டத்தில் பலர் வசதி படைத்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் ஏழைகளுக்கு உதவ முன்வருவதில்லை. சிலர் தமது பெயர், புகழுக்காக கோயில் திருவிழாக்களில் பணத்தைக் கொட்டித் தம்மை முன்னிலைப்படுத்திக்கொள்கின்றனர். ஏழைகளின் சிரிப்பில் இறைவன் இருக்கிறான் என்று கூறுவார்கள். குவேந்திரநாதன் மிகவும் அமைதியாக இருந்து பல ஆக்கபூர்வமான செயல்களைத் திறம்படச் செய்துள்ளார். இந்த வீடுகளைப் பெற்றவர்கள் அனைவரும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட ஏழைகள்.

*கட்டுரையாளர்*
*முன்னைநாள் எழுதுநர்,*
*பரந்தன் இராசயனக் கூட்டுத்தாபனம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம்

## தீட்டுவோம் வாங்க....



# சிக்கன மோகத்தால் முதலுக்கே மோசம்

விதவைப் பெண்ணொருத்தி செம்மறியாடு ஒன்றை வளர்த்தாள்.

செம்மறியாடு நன்கு வளர்ந்து கொழுத்திருந்தது. அதன் உடலில் அடர்த்தியாக உரோமம் வளர்ந்திருந்தது.

ஆட்டின் உரோமத்தை அடிக்கடி வெட்டி விட வேண்டும். ஆடு அப்பொழுது தான் நன்றாக வளரும். அத்துடன் ஆட்டு உரோமத்தைக் கம்பளி நெய்வதற்காகச் சிலர் வாங்குவார்கள். நல்ல பணம் கிடைக்கும் என்று அவள் தோழிகளில் ஒருத்தி கூறினாள்.



ஆட்டு உரோமத்தைக் கத்தரித்துத் தருவதற்கென சில ஆள்கள் உண்டு. அவர்களுக்குக் கத்தரிப்பதற்கும் கூலி கொடுக்க வேண்டும். உரோமம் கத்தரிக்கும் சிலரை அழைத்துக் கூலியைப் பற்றி விசாரித்தாள் அந்த விதவை.

கூலி ஒன்றும் அதிகம் என்று கூற முடியாது. ஆனால், அந்தச் சிறு தொகையையும் செலவழிக்க விதவைக்கு மனம் வரவில்லை.

ஆட்டு உரோமத்தைக் கத்தரிப்பது என்ன பெரிய மந்திர தந்திர வேலையா? ஒரு கத்தரிக்கோலைக் கையில் எடுத்துக் கொண்டால் கொஞ்சம் கொஞ்சமாக ஆட்டின் உரோமத்தைக் கத்தரித்து எடுத்து விடலாம். இப்படிச் செய்தால் இரண்டு, மூன்று ரூபாய் சிக்கனப் படுத்தினாற்போல் இருக்குமே என்று விதவை நினைத்தாள். உடனே ஒரு கத்தரிக்கோலை எடுத்து ஆட்டின் உரோமத்தை வெட்டத் தொடங்கினாள்.

இதற்கு முன்னர் ஆட்டின் உரோமத்தை வெட்டி அவளுக்குச் சற்றும் பழக்கமில்லாததால் உரோமத்தை வெட்டும்போது கத்தரி முனை ஆட்டின் சதைப் பகுதியை வெட்டி ரணமாக்கியது.

ஆடு வேதனை தாளமாட்டாது துடிதுடித்து அலறியது. அவள் பயந்துபோய் நிறுத்தி விட்டாள். அதை மிருக வைத்தியரிடம் கூட்டிப்போனால் செலவு என்று சும்மா இருந்தாள். ரணம் பட்ட இடம் சீழ் கோர்த்து ஆடு ஒரே வாரத்தில் இறந்து போனது.

இரண்டு, மூன்று ரூபாய் சிக்கனப்படுத்த நினைத்த விதவை முதலையே இழந்தாள்.

# அன்னை தெரேசா

*(கடந்த சனிக்கிழமை வெளிவந்த பகுதியின் தொடர்ச்சி)*

1917 ஆம் ஆண்டு இவருடைய தந்தை இறைவனடி சேர்ந்தார். கணவரின் அகாலச் சாவின் துயரத்தை ஏற்றுக் கொள்வதற்குத் தேவையான ஆழமான விசுவாச முதிர்ச்சி இவரது தாயாரிடம் இருந்தது. இந்த விசுவாசமே இவரைத் தாங்கிப் பிடிக்கும் ஊன்று கோலாக இருந்தது. கணவரின் திடீர் சாவு இவரைப் பிடித்து உலுக்கி அதிர்ச்சியடைய வைத்தது. பல மாதங்கள் இந்த அதிர்ச்சியின் கிடுக்குப் பிடியிலிருந்து விடுபடவில்லை. நாளாக நாளாக அதிர்ச்சியின் பிடிகள் தளர்ந்தன. புதிய தெம்புடன் வெளியே வந்தார். சொந்தமாகவே சிறிய அளவில் ஒரு வியாபாரம் தொடங்கினார். அலங்கார ஆடைகளை விற்பனை செய்யத் தொடங்கினார். இதனால் இவருடைய துணிவான முயற்சி பிரிவுத் துயரத்தை அடித்து விரட்டி ஓடச் செய்தது. தன்னுடைய சம்பாத்தியத்தால் மூன்று குழந்தைகளையும் வளர்க்க முடிந்தது. இவருடைய கணவர் நிக்கோலாஸ் போஜாக்ஸ்ஹியுடன் வியாபாரம் செய்த கூட்டாளி நிறுவனத்தின் சொத்துக்களையெல்லாம் அபகரித்துக் கொண்டதால் விதவையும் மூன்று குழந்தைகளும் நடுத் தெருவில் நிற்காத ஒரு குறைதான். அவர்களுடைய தலைக்கு மேல் இருந்த கூரையைத் தவிர வேறு ஏதுமில்லை. எல்லாம் அபகரிக்கப்பட்டு விட்டன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் குடும்பத் தலைவி துணிவான முடிவுகளை எடுத்தாக வேண்டும். தன் தாய் துயர மிக்க இந்தக் கொடிய நேரத்தில் துணிவுடன் செயற்பட்டுப் பிறர் கையை எதிர்பாராமல் தன் காலிலேயே ஊன்றி நிற்குமளவுக்கு தற்சார்பு நிலையை அடைந்துள்ளமை சிறுமி ஆஞ்ஞேசின் இருதயத்தைப் பலமாகத் தாக்கிற்று. தந்தை இறந்த போது சிறுமி ஆஞ்ஞேசுக்கு வயது 7. விதவைத் தாயின் துணிச்சலும் தந்தையின் மறைவும் குடும்பத்தில் ஏற்படுத்திய அடர்த்தியான கரிய மேகங்களையும் விரட்டிக் கலைத்து விட்டு ஒளிக்கு வந்து சேர அவர் தாய் எடுத்த பகீரதப் பிரயத்தனங்களும் இந்தச் சிறுமியின் இதயத்தைப் பலமாகத் தாக்கின.



முன்பு இருந்ததைவிட இப்போது தந்தையின் மறைவுக்குப் பின் இயேசுவின் திரு இருதய ஆண்டவர் ஆலயம் இந்தக் குடும்பத்தின் வாழ்வில் அதிக ஆதிக்கம் செலுத்தி வந்தது. இந்த ஆலயத்தை முக்கியமான மையப் புள்ளியாக வைத்து இந்தக் குடும்பத்தின் சக்கரம் சுழன்று ஓடிக் கொண்டிருந்தது. ஆஞ்ஞேசும் அவளுடைய சகோதரியும் ஆலயப் பங்கில் பல பணிகளில் ஈடுபாடு கொண்டிருந்தனர். ஆஞ்ஞேஸ் ஒரு புத்தகப்புழு. புத்தகப் பிரியையான ஆஞ்ஞேஸ் பங்கிலுள்ள நூலகத்துக்குப் போவதுண்டு.

"எனக்கு வயது 12. என் பெற்றோருடன் ஸ்கோப்ஜியில் வாழ்ந்து வந்தேன். முதன் முதலாக இறைவனின் பணிக்காக என்னையே அர்ப்பணிக்க வேண்டும் என்ற ஆர்வம் என் இதயத்தில் விழுந்தது. அப்போதுதான்" என்று அன்னை தெரேசா நினைவு கூர்ந்தார். ஆஞ்ஞேஸ் இன்னும் முதிர்ச்சியடையாத ஒரு சிறுமி. இறைவனுக்காகத் தன்னையே அர்ப்பணிக்க வேண்டுமென்று ஆஞ்ஞேஸின் இதயத்தில் தோன்றிய உணர்வை நாளடைவில் மறந்து விட்டாள். எனினும் தனக்கென்று முன் அமைக்கப்பட்ட தடத்தில் சிறுமி ஆர்வமாகப் பாதம் பதித்து நடந்து கொண்டிருந்தாள். தாயும் மகளும் பல மணி நேரங்கள் ஆலயத்தில் இயேசுவின் அன்பிலே சிக்கி ஈயைப்போல மொய்த்துக் கொண்டிருந்தனர். இவர்களுடைய மிகவும் உருக்கமான செபம் ஸ்கோப்ஜியிலுள்ள லெட்னிஸ் மரியன்னையின் முன் மண்டியிட்டு செபமாலை செய்வதுதான். அல்லது இரவில் வீட்டிலேயும் கூட செபிப்பார்கள்.

(அடுத்த சனிக்கிழமை தொடரும்)

# வரலாற்றில் இன்றைய தினம்



1698 - தோமஸ் சவேரி, நீராவி இயந்திரத்துக்கான காப்புரிமத்தைப் பெற்றார்.

1822 - அடிமைப் புரட்சியை ஏற்படுத்த முயற்சித்ததாகக் கூறப்பட்டு, தென் கலிபோர்னியாவில் டென்மார்க் வெஸி உட்பட 35 அடிமைகள் தூக்கிடப்பட்டனர்.

1839 - கியூபாவின் கரைக்கு அப்பால் 25 மைல் தொலைவில், யோசப் சின்கு தலைமையிலான 53 ஆபிரிக்க அடிமைகள் அமிஸ்ராட் அடிமைக் கப்பலைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

1881 - அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் ஹார்பீல்ட்–சாள்ஸ் ஜே.கிட்டுவால் சுடப்பட்டு காயமடைந்தார். பின்னர் காயத்தில் ஏற்பட்ட தொற்றினால் செப்ரெம்பர் 19 இல் உயிரிழந்தார்.

1897 - இத்தாலிய விஞ்ஞானி கக்லில்மோ மார்க்கோனி, லண்டனில் வானொலிக்கான காப்புரிமத்தைப் பெற்றுக் கொண்டார்.

1921 - முதலாம் உலகப் போர்; அமெரிக்க ஜனாதிபதி வர்ரன்ஜி ஹார்டிங்ஸ், நொக்ஸ்–போட்டர் தீர்வில் ஒப்பமிட்டதை அடுத்து அமெரிக்காவுக்கும் ஜேர்மனிய முடியாட்சிக்குமிடையேயான போர் முடிவுக்கு வந்தது.

1940 - இந்திய சுதந்திரப் போராட்ட வீரரான சுபாஸ் சந்திரபோஸ், கைது செய்யப்பட்டு கல்கத்தாவில் சிறையிலடைக்கப்பட்டார்.

1964 - அமெரிக்க ஜனாதிபதி லிண்டன் பி.ஜோன்சனால் 1964 இன் குடியியல் உரிமைச் சட்டத்தில் ஒப்பமிடப்பட்டது. பொது இடங்களில் பாகுபாடு காட்டப்படுவது இதன் மூலம் தடை செய்யப்பட்டது.

1976 - வியட்நாம் குடியரசு வீழ்ச்சி; வியட்நாம் சோசலிஸ்ட் குடியரசை கம்யூனிஸ்ட் வட வியட்நாம் பிரகடனப்படுத்தியது.

1986 - சிலி சர்வாதிகார ஆட்சியாளர் ஜெனரல் அகஸ்டோ பினோச்சற்றிக்கு எதிராக வீதியில் எதிர்ப்பாட்டம் செய்தவேளை றொட்றிகோ றோஜஸ் மற்றும் கார்மன் குளோறியா குயின்ரானா ஆகியோர் உயிருடன் தீயிட்டு எரிக்கப்பட்டனர்.

2001 - முதன் முதலாக, செயற்கை இதயம் பொருத்தப்பட்டது.

2002 - பலூனில் இடைநடுவில் நிற்காது தனியாக உலகைச் சுற்றிப் பறந்த முதலாவது ஆளானார், ஸ்டீவ் பொஸற்.

2002 - சோதனைக் குழாய் முறையில் பெண் குழந்தை பிறந்தது. இலங்கை மருத்துவர்கள் சாதனை.

2010 - கொங்கோவில் ஏற்பட்ட தாங்கி லொறி வெடிப்பில், 230 பேர் வரை உயிரிழந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைதியைத் தொலைத்துவிட்டு அலைகின்ற மனிதர்கள்

அமைதியை விரும்பாதவர்கள் எவருமே இல்லை. கூச்சல்களும், குழப்பங்களும் நிறைந்த இந்த உலகத்தில் மன அமைதியை இழந்து தவிக்கின்ற மனிதர்கள் பலரைக் காண்கின்றோம். சிலருக்கு வீட்டில் அமைதி கிடைப்பதில்லை. சிலர் கடமை புரிகின்ற அலுவலகத்தில் அமைதியைக் காணாது தவித்து நிற்பர். வேறுசிலர் நண்பர்களும், உறவினர்களும் அமைதியைக் கெடுக்கின்றார்கள் என்று கூறிப் புலம்புவார்கள். வேறு சிலர் தாமாகவே தமது அமைதியைக் குலைத்துக் கொள்வார்கள், பின்னர் அமைதியில்லை எனவும் கூறிக் கொள்வார்கள். ஆக மொத்தத்தில் பார்க்கும்போது அமைதியைத் தேடுகின்ற பலர் இந்தச் சமுதாயத்தில் வாழ்வது உறுதியாகி விட்டது.

ஒரு வயல் வெளிகள் நிறைந்த பிரதேசம். கண்ணுக் கெட்டிய தொலைவுவரை வயல் வெளிகளைத்தான் காண முடிகின்றது. அந்த வயல்களின் ஓர் ஓரத்தில் ஆலயமொன்று கம்பீரமாக எழுந்து நிற்கின்றது. அதனைச் சூழவுள்ள பகுதியில் அரசு, ஆல், மருது, வேம்பு ஆகிய மரங்கள் ஓங்கி வளர்ந்து கிளை பரப்பி நிற்கின்றன. சூரிய ஒளி நிலத்தில் விழாதவாறு அவற்றின் இலைகள் மறைத்து நிற்கின்றன. இலைகள் காற்றில் ஆடும்போது எழுகின்ற கலகலவென்ற ஓசை சுருதியுடன் சேர்ந்து ஒலிக்கின்ற சங்கீதத்தை நினைவு படுத்துகின்றது. மிகப்பெரிய வயல் வெளி என்பதால் காற்று வீசுவதற்குத் தடை எதுவும் இல்லை. அது உடலைத் தழுவும் போது ஏற்படுகின்ற சுகானுபவத்துக்கு ஈடு இணை கிடையாது.

அமைதியிழந்து மனம் குழம்பிக் கிடக்கின்ற ஒருவன் இந்தச் சூழலைப் பார்க்கும்போதே அவனது மனக் குழப்பத்தில் பாதி கரைந்து விடும். அந்த ஆலய வீதியொன்றின் மரங்கள் நிறைந்த பகுதியில் சில மணித்தியாலங்கள் அமர்ந்திருந்தால் மனக்குழப்பங்கள் நீங்கி மன அமைதி தானாகவே வந்து விடும். மருந்துகளை விட இயற்கை எமக்குத் தருகின்ற இந்த இயற்கை மருத்துவம் மகத்தானது.

பிறர் விடயங்களில் தேவையற்ற வகையில் தலையிடுவதைச் சிலர் வழக்கமாகக் கொண்டிருப்பார்கள். இதனால் பலரின் வெறுப்புக்களைச் சம்பாதிப்பதுடன் மன உழைச்சலுக்கும் ஆளாகி நிற்பார்கள். இவர்கள் தம்மைத்தாமே கட்டுப்படுத்திக் கொண்டால் குழப்பங்கள் நீங்கி இழந்த மன அமைதியையும் மீட்டெடுத்துக் கொள்ளமுடியும்.

வீடு மற்றும் பணிபுரியும் இடங்களிலும் நாம் தேவையற்ற வார்த்தைப் பயன்பாட்டைத் தவிர்த்துக் கொள்ளுதல்வேண்டும். தேவையேற்படும்போது மட்டுமே வாயைத் திறக்கவேண்டும் என்ற கொள்கையை எப்போதுமே கடைப்பிடிக்கவேண்டும். இவைகூட இழந்த எமது மன அமைதியை மீளப் பெறுவதற்கு உதவும்.

சிலர் நாள் முழுவதும் படபடப்புடன் காணப்படுவார்கள். ஏதோ சிந்தனைகள் இவர்களது மனதைக் குழப்பிக் கொண்டேயிருக்கும். இவர்களின் முகத்தைப் பார்த்தவுடனேயே இது புரிந்துவிடும். இவர்களை அணுகுவதைப் பிறர் விரும்பமாட்டார்கள். ஒதுக்கியே வைத்துவிடுவார்கள். இத்தகையவர்கள் தமது இயல்பை மாற்றாத வரை மன அமைதி கிடைக்கவே கிடைக்காது.

ஒவ்வொருவருடைய மனமும் ஓர் ஆலயமெனக் கூறப்படுகின்றது. அவ்வாறாயின் இறைவன் அங்கு குடியிருக்கிறார் என அர்த்தம் கொள்ள முடியும். இறைவன் குடியிருக்கின்ற மனம் என்ற ஆலயத்தை நாம் எப்போதுமே தூய்மையாக வைத்திருக்க வேண்டாமா? கண்ட கண்ட கழிவுகளையும், குப்பைகளையும் அங்கு புதைத்து வைத்தால் புனிதத்தை அங்கு எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

ஆகவேதான் எமது மனதை அழுக்காறு இல்லாத வகையில் நாம் புனிதமாக வைத்திருப்போமாயின் இறைவன் அங்கு குடிகொள்வார். அமைதியும் கிடைத்து விடும்.




# பெண்ணே! பெண்மைக்கு



# சாவு மணி அடிக்காதே

■ உடுவிலூர் கலா

பெண்மைகொண்ட பெண்ணே! பெண்ணாக நீயும் வாழ்ந்து விடு. பெண்ணியத்தைக் கொன்று போடும் பெண்ணாக நீ மாறிடாதே. ஆம்! பெண்மை அழகானது, புனிதமா னது, காத்திரமானது. உலகமே பெண்மையால் நிறைந்திருக்கின்றது. அண்டமா முனி வரும் பெண்மைக்குள் அடங்குவர் என்றால், பெண்மையின் சிறப்பைச் சொல்லவும் வேண்டுமா? இத்தகைய சிறப்புக்கள் உடைய பெண்மை, பெண் களாலேயே மாசுபடுத்தப்படுகிறது. விரும்பியோ விரும்பாமலோ தெரிந்தோ தெரியாமலோ பெண்களே பல சந்தர்ப் பங்களில் பெண்மையைக் கொன்று விடுகிறார்கள். பெண்மைக்குள் ஓருயிர் உருவாகும் போது பெண்மை தாய்மையடைகிறது. பெண்ணினுள் வியக்கத்தக்க உடல், உள மாற் றங்கள் ஏற்படுகின்றன. ஐயிரண்டு மாதங்கள் கருவறையில் பாதுகாப்பாக குழந்தை வளர்கிறது. அற்புதமான இந்த நிகழ்வானது உலகத்தில் எந்தவொரு ஆடவனாலும் செய்ய முடியாதது. ஒரு பெண் சட்டவிரோதமாகக் கருவுறும்போது அவளது சிந்தனை ஓட்டமானது சமுதாயத்தை நோக்கியதாகவே உள்ளது.

இதனாலேயே பற்றைகள், நீர் நிலைகள், மலசல கூடங்கள், தெருவோரங்களில் அநாதரவாகப் பிறந்த சிசுக்கள் வீசியெறியப்படுகிறார்கள். சில இடங்களில் பிறந்த மறு நிமிடமே கழுத்தை நெரித்துக் கொலை செய்கிறார்கள். இந்தக் கொடூரத்தைப் பெற்றவர்களே செய்வது கொடுமையல்லவா? ஆணும் பெண்ணும் செய்த தவறுகளால் எதுவுமறியாத பிஞ்சுகள் தண்டனை அனுபவிப்பது நியாயமானதா?

பெண் தாயாக மாற முடிந்தால் மட்டுமே தாய்மையடைய வேண்டும். உடலில் உள்ள அனைத்து உறுப்புக்களும் பிரசவ வலியை உணரும். அப்படியான வலியைத் தாங்கி பிரசவிக்கும் குழந்தையை வீசுவதோ, கொலை செய்வதோ மன்னிக்க முடியாத குற்றமாகும். தவறு செய்ய முன் சிந்திக்க வேண்டும். சட்டவிரோதமாகக் கருவுற்றுப் பிறக்கும் குழந்தைக்கு சமூக அங்கீகாரம் கிடைக்குமா என்பதைப் பெண்கள் சிந்தித்துத் தவறுக்குக் களமிறங்க வேண்டும். எவருக்கும் தெரியாது என்று நினைத்துத்தான் சிசுக்களை வீசுகிறார்கள், கொலை செய்கிறார்கள். மறு நிமிடமே செய்தி பரபரப்பாகி ஊடகங்களில் தலைப்புச் செய்தியாகிவிடும். எவருக்கும் தெரியாது செய்கின்ற தவறை முழு வடிவமாக்கி சமுதாயத்துக்கு விடுகின்றோம் என்பதைப் பெண்கள் மறந்து விடுகிறார்கள். தவறுக்குக் காரணமான ஆண்களின் வழிநடத்தையும் ஒரு கார ணம். தாம் சமுதாயத்தில் முகமூடி அணிந்து வாழ்வதற்காக பெண்களை இவ்வாறு நெறிப் படுத்துகின்றனர்.

தடம்புரளுகின்ற பெண்களுக்கு சட்டவிரோதமாகப் பிறக்கின்ற சிசுக்கள் ஒருதடவைகூட தாயின் பாலை சுவைப்பதில்லை. காரணம் தாயின் மனநிலையானது தாய் சேய் உறவைத் துண்டிப்பதே. இதனால் குழந்தையைப் பெற்றும் அவள் தாயாக மாறுவதில்லை. கொலைகாரியாக சமுதாயத்தில் துரோகியாகவே மாறுகின்றாள். வழி தவறிய நடத்தைகளால் கருவுற்றுப் பிறந்த குழந்தையைக் கொலை செய்வதோ, அநாதரவாக வீசுவதோ பாவமான காரியம். இதனால் ஒட்டு மொத்த பெண்களுக்கும் பலத்த அவமானம். உயிர்களைப் படைக்கின்ற பெண் இங்கு அழிக்கும் தொழிலையும் செய்கிறாள். பெண்மைக்கு இழுக்கான, அருவருப்பான இந்தச் செயலால் பெண்ணியம் களங்கப்படுகிறது என்பதைப் பெண்கள் சிந்திக்க மறப்பது ஏன்? சமுதாய ஒழுக்க விழுமியங்களைப் பெண் கள் சிதைக்கின்றனர். பிரசவ வலியை மறந்து சிசுவை எப்படித் தூக்கி எறிய மனம் வருகிறது. தாய்மை எப்படி அமைதி கொள்கிறது? புரியவில்லை.

கற்பு, ஒழுக்கம் என்பது இருபாலாருக்கும் பொதுவானவை. பாலியல் தேவைக்காகத் தவறு செய்யும்போது இருவரது கற்பும் இழக்கப்படுகிறது. இருவருமே ஒழுக்கம் கெட்டவர் ஆகின்றனர். ஆனால், தவறுக்கான தண்டனை பெண்ணுக்கல்லவா காத்திருக்கின்றது. கருவறை, சுமைதாங்கி ஆகிவிடுகிற கொடுமையைப் பெண்கள் சிந்தித்தால், இத்தகைய தவறுக்கு தம்மைத் தயார்படுத்த மாட்டார்கள். ஆண் கெட்டால் அம்பலம். பெண் கெட்டால் சரித்திரம் என்பதை நாளாந்த வாழக்கையில் கண்டும், மீண்டும் மீண்டும் அழிவை நோக்கிச் செல்வதா? பெண்மையைச் சிதைப்பதா? அநாதை, தந்தை பெயர் தெரியாதவன் என சுட்டப்படும் குழந்தைகள் சமுதாயத்தில் தேவைதானா? உலகில் குழந்தைப் பேறு கிடைக்காத ஏராளமான பெண்கள் வாழ்வின் அர்த்தத்தை இழந்தவர்களாக வேதனைகளோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பெண்களே சிந்தியுங்கள். தூரநின்றும் சமுதாயம் பெண்களை நோக்கியே சொல்லம்புகளை வீசுகிறது. முதலில் கற்பு ரீதியாக தமது உடல் உள ஆரோக்கியத்தைக் கருத்திற் கொள்ள வேண் டும். என்னதான் உத்தமமான ஆணாக இருந்தாலும் எச்சரிக்கையுடன் பழக வேண்டும். கரும்பு கட்டோடுதானே இருக்க வேண்டும். எச்சில் பார்வையினின்று விலகி வாழக் கற்றுக் கொள்ளுங்கள். வழிதவறும் பெண்கள் நிலை குலைகின்றனர். நிலை குலைவதால் க[illegible] சூறையாடப் படுகிறது. கற்பு நெறி தவறும் பெ[illegible] மனச்சாட்சிக்கு விரோதி ஆகின்றாள். உ[illegible] களால் தூக்கி வீசப்படுகிறாள். சமுதாய வாழ்[illegible] இழி சொற்களுக்கு கருப்பொருளாகிறா[illegible] முடிவில் தன் வயிற்றில் உற்பவித்த சிசு[illegible] தானே கொலை செய்யும் கொலைகாரியாகிற[illegible] இவை பெண்ணியத்துக்கு அப்பாற்பட்ட[illegible] மட்டுமல்ல , ஒத்துவராததும் கூட.

ஆக, பெண்களே பெண்மையைப் புனிதப்[illegible] துங்கள். அடுத்தவனின் அற்ப சுகத்துக்[illegible] உங்களை நாசமாக்காதீர்கள். சமுதாய[illegible] நிகழ்ந்து விட்ட, நிகழ்கின்ற ஈனச் செயல்க[illegible] உற்று நோக்குங்கள். வேதனைகளும் அ[illegible] ானங்களும் உங்களைத் தொட்டுச் செ[illegible] வண்ணம் ஒழுக்கமாக வாழுங்கள். ஒழு[illegible] உயிரினும் மேலானது. பெண் ஒழுக்கம் [illegible] டால் ஆணாதிக்கத்துக்குத் துணை போ[illegible] நிலையே உருவெடுக்கும். பால் நிலை [illegible] துவத்துக்காகப் போராடுகிறோம். ஒழுக்க[illegible] வாழ்ந்து பெண்ணுரிமையை வென்றெ[illegible] போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மேடம்:** குடும்பச் சிரமம் பற்றி பிறரிடம் பேச வேண்டாம். தொழிலில் மிதமான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். உணவு விடயத்தில் கவனம் தேவை. வெளியூர்ப் பயணத்தில் திடீர் மாறுதல் ஏற்படும்.

**இடபம்:** பெற்றோரின் தேவையை நிறை வேற்று வீர்கள். வாழ்வில் வளர்ச்சிக்கான சூழல் உரு வாகும். தொழிலில் அபரிமித வளர்ச்சி ஏற்படும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பணி யாளர்கள், பாராட்டும் விதத்தில் பணியாற்றுவர்.

**மிதுனம்:** சுற்றுப்புறச் சூழலால் தொந்தரவு வர லாம். தொழில், வியாபாரத்தில் இருக்கும் அனு கூலத் தன்மையைப் பாதுகாப்பது நல்லது. பண வரவு குறைந்த அளவில் கிடைக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**கடகம்:** நண்பரால் உதவி கிடைக்கும். தொழி லில் விற்பனை அதிகரிக்கத் தேவையான மாற் றம் செய்வீர்கள். பணவரவு திருப்தி தரும். பெண் கள் கலையம்சம் நிறைந்த பொருள் வாங்குவர். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.

**சிங்கம்:** மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். பணித் திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை திருப்திகர மாகும். உபரிபண வருமானம் கிடைக்கும். உற வினர்களிடமிருந்து சுபசெய்தி வந்து சேரும்.





**கன்னி:** மனதில் குழப்பம் ஏற்படலாம். குடும்பத்தினரின் கனிவான ஆலோசனை ஆறுதல் அளிக்கும். தொழிலில் அக்கறை கொள்வது நல்லது. இலாபம் சுமார். உறவினர் வகையில் பணம் செலவு செய்ய நேரிடலாம்.

**துலாம்:** நேர்மை குணத்தைப் பின்பற்றி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்துக்கு கூடு தல் மூலதனம் தேவைப்படும். இலாபம் படிப் படியாக உயரும். பிறர் பார்வையில் தெரி யும்படி செலவு செய்வதைத் தவிர்க்கவும். சீரான ஓய்வு உடல்நலம் பாதுகாக்கும்.



**விருச்சிகம்:** முக்கியப் பணி ஒன்று நிறைவேற அனுகூல சூழல் உருவாகும். தொழில் வியா பாரத்தில் அபிவிருத்திப் பணிக்காக அதிக மூல தனம் செய்வீர்கள். இலாபம் உயரும். உறவி னர் வருகையால் குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**தனுசு:** சமயோசித புத்தியால் வளர்ச்சி காண் பீர்கள். நண்பர் மத்தியில் மதிப்பு கூடும். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். சராசரி வருமானத்துடன், நிலுவைப் பணமும் வசூலா கும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**மகரம்:** தகுதி மீறிய செயலில் ஈடுபட வேண் டாம். நண்பர்கள் உதவி கேட்டு வருவர். அதிக உழைப்பால் தொழிலில் இலாபத்தை தக்க வைத்துக் கொள்வீர்கள். பெண்கள் செலவுக் காக கடன் வாங்குவர்.

**கும்பம்:** பகைவரின் பேச்சை பொருட்படுத்த வேண்டாம். தொழிலில் திட்டமிட்ட இலக்கை அடைய, கால அவகாசம் தேவைப்படும். இலா பம் சுமார். பெண்களுக்கு வீட்டுச்செலவு அதிகரிக் கும். வாகனப்பயணத்தில் மிதவேகம்பின்பற்றவும்.

**மீனம்:** மற்றவர் நலனில் அக்கறை காட்டி வரு வீர்கள். தொழிலில் வளர்ச்சிப் பணி திருப்திகர மாக நிறைவேறும். நிலுவைப் பணம் எளிதில் வசூலாகும். அரசியல்வாதிகளுக்கு எதிர்ப்பு மறை யும். எதிர்பார்த்த பதவி கிடைக்கும்.

## சண்டைக் காட்சிகளுடன் நெஞ்சம் மறப்பதில்லை



பேய்ப்படங்கள் ஒன்றும் தமிழ் சினிமாவுக்குப் புதிதில்லை என்றாலும், இயக்குநர் செல்வராகவனின் முதல் பேய்ப்படம் என்ற வகையில் 'நெஞ்சம் மறப்பதில்லை' நிச்சயம் ரசிகர்களுக்குப் புதுசுதான். செல்வராகவனின் முதல் பேய்ப்படம் என்பதால் "நெஞ்சம் மறப்பதில்லை'யில் புதிய விடயங்களை கண்டிப்பாக எதிர்பார்க்கலாம்." என பேட்டி ஒன்றில் மனம் திறந்திருக்கிறார் படத்தின் நாயகி ரெஜினா கெஸன்ட்ரா. எஸ்.ஜே.சூர்யா நாயகனாக நடிக்கும் 'நெஞ்சம் மறப்பதில்லை' படத்தில் 'மரியம்' என்ற குழந்தைப் பராமரிப்பாளர் பாத்திரத்தில் நடிக்கும் ரெஜினாவுக்கு, படத்தில் பயங்கரமான சண்டைக் காட்சிகளும் இருக்கிறதாம். அது மட்டுமில்லாமல், நாயகன் எஸ்.ஜே.சூர்யாவுக்கும், நந்திதாவுக்கும் இடையே நடைபெறும் சண்டைக் காட்சிகள் ரசிகர்களை நடு நடுங்க வைக்கும் எனவும் ரெஜினா தெரிவித்தார்.

'நெஞ்சம் மறப்பதில்லை' படத்தின் படப்பிடிப்பு வேலைகள் முடிவடைந்துள்ளன எனவும் தெரிவிக்கப் பட்டது.



நவீனா ✌ @latha_Bharathy

தேடிக் கிடைத்ததாகக் காட்டிக் கொண்டு கிடைத்தவர்களைத் தொலைக்காமல் இருப்பவர்களை விட, தேவைக்கு மட்டுமே பயன் படுத்திக்கொள்பவர்கள் அதிகம்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | | 7 | | | | 1 |
| | | | 3 | | | 6 | | |
| 8 | | 6 | 1 | | | 4 | | |
| | | 5 | 2 | | 4 | 9 | | |
| | 4 | | | 3 | | | 1 | |
| | | 1 | | | | 2 | | |
| 2 | | 4 | 6 | | 8 | | | |
| | | | | 4 | | | | |
| | 5 | | | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | 6 | 3 | 1 | 8 | 7 | 2 | 5 |
| 8 | 3 | 2 | 7 | 6 | 5 | 4 | 1 | 9 |
| 7 | 5 | 1 | 9 | 2 | 4 | 3 | 8 | 6 |
| 4 | 1 | 9 | 6 | 8 | 7 | 5 | 3 | 2 |
| 2 | 6 | 7 | 1 | 5 | 3 | 9 | 4 | 8 |
| 5 | 8 | 3 | 4 | 9 | 2 | 1 | 6 | 7 |
| 6 | 7 | 5 | 2 | 4 | 1 | 8 | 9 | 3 |
| 3 | 9 | 4 | 8 | 7 | 6 | 2 | 5 | 1 |
| 1 | 2 | 8 | 5 | 3 | 9 | 6 | 7 | 4 |

சுடோக்குஒருஎண்விளையாட்டு தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

பகலில்
உங்களுக்குக் கண் தெரியாதா டாக்டர்....?
தெரியுமே. ஏன் அப்படி கேட்கிறீங்க..... ?
இல்ல, பார்வை நேரம் மாலை ஆறிலிருந்து எட்டு வரை என்று போர்ட் வச்சிருக்கிறீங்களே... அதுதான் கேட்டேன்.!



ஆயிரம் உறவுகள் அகிலத்தில் இருப்பினும்
அன்னை போல் ஆகுமா?



தன்னை உருக்கி தன் குழந்தையின் வாழ்வை
[illegible]ரணியில் ஒளிர வைக்[illegible] மெழுகு, அம்மா!




இரக்கம் காட்டுங்கள் Irakkam kattungal

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொழும்பு | பருத்தித்துறை | சாவகச்சேரி | பாசையூர் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 900 | 800 | 700 |
| நண்டு | 250 | 500 | 300 | 400 | 500 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 700 | 600 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 600 | 600 | 400 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 1000 | 600 | – |
| சீலா | 300 | 500 | 400 | 800 | 400 | 600 | 400 |
| விளை | 650 | 600 | 400 | 800 | 500 | 500 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 500 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | – | – |
| திரளி | 300 | 250 | 200 | 200 | 300 | 200 | 300 |
| நகரை | 250 | 250 | – | 300 | 400 | 200 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 300 | 150 | 400 | 300 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 350 | 400 | 300 | 150 |
| மதனம் | 150 | 200 | 180 | – | 350 | 300 | 200 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 80 | 100 | – |
| பாலை | 400 | 200 | 250 | 400 | 400 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | – | 300 | – | – |

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 80 | 80 | 160 | 80 | 60 | – | 60 |
| கத்தரி | 80 | 70 | 80 | 80 | 80 | 100 | – | 40 |
| கரட் | 300 | 240 | 140–300 | 140 | 240 | 250 | – | 160 |
| மரவள்ளி | 100 | 80 | 80 | 80 | 100 | 60 | – | 50 |
| பயிற்றை | 80 | 80 | 80 | 120 | 100 | 80 | – | 80 |
| பாகல் | 200 | 200 | 200 | 240 | 240 | 160 | – | 150 |
| கருணைக்கிழங்கு | 180 | – | 120 | 160 | 140 | – | – | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 90 | 90 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 120 | 160 | 120 | 180 | 140 | 120 | – | 160 |
| பூசணி | 70 | 90 | 80 | 120 | 120 | 100 | – | 80 |
| தக்காளி | 300 | 240 | 200 | 240 | 240 | 200 | – | 200 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 120 | 120 | 60 | – | 40 |
| கீரை | 15 | 30 | 20 | 20 | 20 | 20 | – | 20 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 45 | 20 | 30 | – | 10 |
| பச்சை மிளகாய் | 600 | 600 | 600 | 800 | 650 | 800 | – | 500 |
| புடோல் | 50 | 80 | 80 | 140 | 80 | 80 | – | 100 |
| கோவா | 180 | 140 | 150 | 240 | 140 | 150 | – | 140 |
| வெண்டி | 120 | 80 | 100 | 120 | 100 | 120 | – | 80 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 240 | 220 | 240 | – | 120 |
| லீக்ஸ் | 200 | 160 | 120 | 24 | 160 | 120 | – | 150 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 30–38 | 25–30 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 80 | – | .120 |
| தேசிக்காய் | 200 | 160 | 200 | 250 | 160 | 160 | – | 280 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 –15 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 200 | 200 | 180 | 140 | 220 | – | – | 200 |
| இராசவள்ளி | 160 | – | – | 180 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 700 | 450 | 500 | 800 | 350 | 600 | – | 350 |



# பிஸா தோசை

### தேவையானவை

தோசை மா – ஒரு கப்
முட்டை – ஒன்று
பெரிய வெங்காயம் – ஒன்று
தக்காளி – ஒன்று
மிளகு, சீரகத் தூள் – ஒரு தேக்கரண்டி
பச்சை மிளகாய் – ஒன்று
கறிவேப்பிலை – சிறிதளவு
உப்பு – 2 சிட்டிகை
எண்ணெய் – 2 தேக்கரண்டி

### செய்முறை

பெரிய வெங்காயத்தை தோல் உரித்து நீள வாக்கில் மெல்லியதாக நறுக்கிக் கொள்ளவும். தக்காளியை நீளவாக்கில் நறுக்கிக் கொள்ளவும். பச்சை மிளகாய், கறிவேப்பிலை இரண்டையும் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். தோசைக்கல்லில் எண்ணெய் தடவி இரண்டு கரண்டி மாவை ஊற்றி சற்று இறுக்கமாக அப்பம்போல் ஊற்றவும். பிறகு அதில் முட்டையை உடைத்து ஊற்றி மேலே மிளகு, சீரகத் தூள், உப்பு, தூவவும். அதன் மேல் நறுக்கிய வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய், கறிவேப்பிலை தூவி வேக விடவும். சிறிது எண்ணெய் ஊற்றி திருப்பிப் போட்டு வெந்ததும் எடுத்து பரிமாறவும்.

## நாளை

ஆனி-19
ஞாயிற்றுக்கிழமை
- 03.07.2016
திதி: சதுர்த்தசி
மு.இ.07.18 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம்
மு.இ.08.53 வரை
ராகுகாலம்:
04.27-05.57 வரை
சுபநேரம்:
08.57-10.27 வரை



## பெண்களுக்கான சில குறிப்புகள்



- வெண்ணெயில் உப்பைத் தூவி விட்டால் அது நாள்பட்டாலும் கெடாமல் இருக்கும்.
- வெயில் காலத்தில் எங்கு நோக்கினும் இலையான் மொய்த்துக் கொண்டிருக்கும். வீட்டைக் கழுவும்போது நீரில் சிறிது உப்பைச் சேர்த்துப் பின்பு கழுவுங்கள். காய்ந்த பின் அறையில் இலையான் வராது.
- காய்கறி மற்றும் பழங்களை சிறிதளவு வினிகர் கலந்த குளிர்ந்த நீரில் ஒரு சில நிமிடங்கள் போட்டு வைத்தால் கிருமிகள் இறந்து விடும்.
- உள்ளி, வெங்காயம் போன்றவைகளை நறுக்குவதால் கத்தியில் ஏற்படும் துர்நாற்றத்தைப் போக்க, சிறிதளவு உப்பை கத்தியில் தடவி குளிர்ந்த நீரில் கழுவவும்.
- பால் பாத்திரத்தின் அடியில் ஒட்டிக்கொள்ளாமல் இருக்க பாத்திரத்தை முதலில் குளிர்ந்த நீரால் நன்கு கழுவ வேண்டும்.
- தேங்காய் மூடியை தண்ணீரில் வைத்தால் அல்லது மூடியில் சிறிது உப்பைத் தடவி வைத்தால் கெடாமல் இருக்கும்.
- நகைகளை பஞ்சில் சுற்றி வைத்தால் புதுப் பொலிவுடன் இருக்கும்.
- சமைக்கும் போது எரிபொருள் சிக்கனம் செய்ய வேண்டும். கீரையைத் தவிர எது சமைத்தாலும் பாத்திரத்தை மூடி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று 17 அகவை இல்

2000 – 2016

# கரிகணன்

## வடக்கின் அச்சகதாரர்



இன்று 17ஆம் அகவையில் அழுத்தமான காலடிகளை எடுத்து வைக்கும் நாம், இவ்வேளையில் வடக்கின் தனிப்பெரும் அச்சகதாரர்களாக எம்மை வளர்த்தெடுக்க உதவிய வாடிக்கையாளர்கள், நலன் விரும்பிகள், பணியாளர்கள் அனைவருக்கும் எம் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைக் காணிக்கை ஆக்குகிறோம்.

**Harikanan**
PRINTERS OF THE NORTH

Offset | Digital | Screen | Design

**Head Office:**
#681, K.K.S. Road, Jaffna, Sri Lanka.
W www.harikanan.com
E print@harikanan.com
F harikananprinters S harikanan
T +94 21 222 2717 | 8

**Why US???** Lowest Price | Best Quality | Fast Delivery | 100% Satisfaction

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளரின் மோட்டார் சைக்கிள் யாழ்.நகரில் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உதயன் ஊடகவியலாளரின் மோட்டார் சைக்கிள் நேற்றுப் பிற்பகல் திருடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை விடுதியில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் தனது தாயாரைப் பார்வையிடுவதற்காக ஆனைக்கோட்டையைச் சேர்ந்த குறித்த ஊடகவியலாளர் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக 5.30 மணியளவில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு வைத்தியசாலைக்குச் சென்றார். தாயாரைப் பார்த்துவிட்டுத் திரும்பிவந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் நிறுத்திய இடத்தில் காணப்படவில்லை.

யாழ்.நகரில் பல இடங்களில் தேடிய போதும் மோட்டார் சைக்கிள் கிடைக்கவில்லை. அது தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்துக்குச் சென்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டது.

(வ-4)

## கடத்தப்பட்ட

சென்.பீற்றர் ஆலய பங்குப் பணிமனையில் வைத்து கடந்த புதன் கிழமை காலை இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டார் என அவரது மனைவி முறைப்பாடு செய்திருந்தார்.

அதில், தனது கணவர் உயிலங்குளம் சென்.பீற்றர் ஆலய பங்குப் பணிமனையில் கடமையாற்றி வந்த நிலையில் கடந்த புதன்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் ஆலய பங்குப் பணிமனையில் வைத்து கடத்திச்செல்லப்பட்டார் என்று கூறியிருந்தாரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் வியாழக்கிழமை இரவு நொச்சிக்குளம் கிராம பகுதியில் அவலக்குரல் சத்தம் கேட்டவாறு உள்ளதாகத் தமக்கத் தகவல் கிடைத்தது. அங்கு சென்று பார்த்தபோது முதுகுப் பகுதியில் எரிகாயங்களுடன் குறித்த நபர் காணப்பட்டார். அவரை மீட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்த்தோம். என்று மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்தல் குறித்து அவரது மனைவி எனக்கும் தெரியப்படுத்தியிருந்தார். குறித்த குடும்பஸ்தர் 2001 ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம் திகதி கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலுடன் தொடர்புபட்டிருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு ஒரு வருடத்தின் பின்னர் விடுவிக்கப்பட்டார். இந்த நிலையில் 2 மாதங்களுக்கு முன்னர் அவரது வீட்டுக்கு நேரடியாக சென்றிருந்த பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் அச்சுறுத்தல் விடுத்திருந்தனர். அதன் பின்னர் கடந்த 19 ஆம் திகதி அவரது வீட்டுக்குச் சென்ற பொலிஸ் அதிகாரிகள் அவரைச் சரணடையுமாறு உத்தரவிட்டுச் சென்றதாக அவரது மனைவி கூறினார் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

குறித்த குடும்பஸ்தர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(வ-4,21,56,101)

## காணாமற்போனோர்

முன்னெடுப்பதற்கு தமிழ் சட்டத்தரணிகள் நியமிக்கப்பட வேண்டும். இவற்றுக்கு மேலாக, இந்த அலுவலகத்தை நடத்துவதற்கு பன்னாட்டு விசாரணையாளர்கள் அல்லது பன்னாட்டு அங்கீகாரம் பெற்றவர்கள் நியமனம் செய்யப்படவேண்டும்" என்று காணாமற்போனோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், "எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்பது தெரிய வரவேண்டும். விரைவில் இதற்கு முடிவு கிடைக்காவிட்டால், வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்துவோம்" என்றும் காணாமற் போனோரின் உறவினர்கள் எச்சரித்தனர்.

(உ-வ-5-21-ரி7)

## வடக்கின்

இதனை திறந்து வைக் கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மீள்குடியேற்ற அமைச்சர் மேலும் தெரிவித்தாவது:

கடந்த காலங்களில் வடக்கு மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் எவையும் தீர்க்கப்படாமல் இருந்தன. அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பணியை தற்போது நல்லாட்சி அரசு மிக தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது. கிராம மக்களின் வாழ்வாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தப் பாடுபடுகின்றது.

வடமராட்சி கிழக்கில் மீன்பிடித் தொழில் புரியும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இருக்கின்றன. இவர்கள் மீள்குடியமர்ந்தும் தமது வாழ்வாதாரங்களை முன்கொண்டு செல்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். படகு உற்பத்தி தொழிற்சாலை இங்கு இல்லாத நிலையில், தேவையான படகுகளை தென்னிலங்கையிலிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டிய நிலமை காணப்பட்டது. அத்துடன் சேதமடைந்த படகுகளையும் திருத்தம் செய்ய முடியாத நிலமை காணப்பட்டது.

இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காணும் பொருட்டே படகு உற்பத்தி தொழிற்சாலை இங்கு திறக்கப்பட்டுள்ளது. இதனை இங்குள்ள மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் – என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், பிரதேச செயலாளர் கனகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(வ-5-109)

## ஹுசேனின்

புக்கூறல் என்பவற்றிற்கான சந்தர்ப்பங்கள் மற்றும் சவால்கள் பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் பற்றி ஆணையாளரும், அவரது அலுவலகமும் தொடர்ச்சியா கக் காட்டிய ஈடுபாடு தொடர்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

மனித உரிமைகள் விடயத்தில் இலங்கையில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. இவை தொடர்பில் மிகவும் மெதுவான வேகத்தில் இலங்கை செயற்படுகின்றது. இந்த விடயத்தில் நாமும் கவனம் செலுத்தியுள்ளோம்.

இராணுவத்தினர் சட்டத்துக்குப் புறம்பான முறையில் கைப்பற்றியுள்ள தனியார் காணிகளை விடுவிப்பதில் தாமதம் காணப்படுகின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தொடர்ச்சியாக இலங்கை அரசு பயன்படுத்தி வருகின்றது. அதனை நீக்குவதற்கு அரசு தவறியுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நபர்களை விடுவிப்பது தொடர்பாக வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. வடக்கு – கிழக்கு மாகாணங்களில் பொதுமக்கள் தொடர்ச்சியாகக் கண்காணிப்புக்கு உட் படுத்தப்படுகின்றனர். அவர்கள் துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்படுகின்றனர் வடக்கு – கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்துவதில் தாமதம் காணப்படுகின்றது. அவர்களுக்கு வீடுகள், வாழ்வாதார வழிமுறைகள் மற்றும் ஏனைய வசதிகளைப் பெற்றுக்கொடுத்து, அவர்களது அன்றாட வாழ்க்கையினை இயல்புநிலைக்குக் கொண்டுவரும் செயற்பாட்டில் தொடர்ந்தும் அசமந்தப் போக்கே காணப்படுகின்றது. இதனால் தமது நிலையிலிருந்து மக்கள் மீள்வதற்கான பணியும், நல்லிணக்கச் செயற்பாடுகளும் பெரிதும் தடைப்பட்டுள்ளன.

காணாமற்போனோருக்காக அலுவலகம் நிறுவும் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் எமது கருத்துக்களையும் அரசு உள்வாங்கிக் கொண்டது. நாடாளுமன்றத்தில் குழு நிலை விவாதத்தில் மேலும் எமது திருத்தங்களை முன்வைப்போம்.

இந்தச் சட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் நோக்கம் நேர்மையான முறையில் நிறைவேற்றப்பட்டால், காணாமற்போனோரின் குடும்பங்களுக்கு நிவாரணம் கிடைக்கக் கூடியதாக இருக்கும். வெற்றியளிக்காத ஆணைக்குழுக்களிலிருந்து காணாமற்போனோர் அலுவலகம் மாறுபட்டதாக அமையவேண்டும்.

இரு தரப்பினாலும் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டும். இதன் ஊடாகவே அர்த்தமுள்ள நல்லிணக் கத்தை அடைய முடியும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கடந்த ஆண்டு தீர்மானத்தின் தொழிற்பாட்டுப் பந்திகள் 6 மற்றும் 7 என்பன முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும். இதனைத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம்.

இலங்கை தமது பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டுமென சர்வதேச நாடுகள் எம்மை ஊக்குவித்துள்ளன. நாங்கள் பிரதிநிதித்துவபடுத்துகின்ற தமிழ் மக்கள் உட்பட அனைத்துப் குடிமக்கள் சார்பாகவும் இலங்கைக்குள்ள பொறுப்புக்கள் பற்றி, கடந்த ஆண்டு தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனைக் கட்டாயம் நிறை வேற்றுதல் வேண்டும்.

சகலருக்கும் பயனளிக்கக் கூடிய வகையில் புதிய அரசமைப்பைத் தயாரிக்க வேண் டியதன் அவசியம் பற்றியும், அந்த நோக் கத்தை அடைவதற்காகப் பல நாடுகளின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளமை தொடர்பாகவும், ஆணையாளரின் அவதானிப்புக்கள் குறித்தும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

புதிய அரசமைப்பு ஏற்பாடுகளின் ஊடாகத் தேசியப் பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வினை முன்வைக்க வேண்டியுள்ளது. இலங்கையில் தொடர்ந்து வரும் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண நாம் அனைத்துப் பங்குதாரர்களுடனும் தொடர்ந்தும் ஈடுபாட்டிலிருப்போம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ-5)

## கரையை

நிலையை அவதானித்து, பொலிஸ் ஒழுங்குகளையும் பார்வையிட்டார். பின்னர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முகாமைத்துவப் பகுதிகளையும் பார்வையிட்டு பொலிஸாருடன் உரையாடினார்.

அதன் பின்னர் அவர் தெரிவித்ததாவது:

கேரளக் கஞ்சா, ஹெறோயின் உள்ளிட்ட போதைப் பொருள்கள் கடல் வழியாகவே அதிகளவில் நாட்டுக்குள் கடத்தப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. நடைமுறையிலும் அதனைக் காணமுடிகிறது. அதனைத் தடுக்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். எனினும் ஏதோ ஒரு வகையில் நாட்டுக்குள் போதைப் பொருள்கள் கடத்தப்பட்டு விடுகின்றன.

இதனைத் தடுக்க கடற்படையினர் கடலில் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். கடற்கரையிலும் அவர்களின் கண்காணிப்பு இருக்கிறது. தரையில் பொலிஸாரும் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். எனினும் இவை போதாமலுள்ளன. கண்காணிப்பைத் தீவிரப்படுத்த கரையோரத்தை அண்டிய கடலில் இனிமேல் படகில் பொலிஸாரும் கண்காணிப்பில் ஈடுபடுவர். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. விரைவில் அது நடைமுறைக்கு வரும்.

யாழ். குடாநாட்டில் குற்றச் செயல்கள் இம்பெறும் பகுதிகளில் பொலிஸாரின் சைக்கிள் சுற்றுக் காவல், மோட்டார் சைக்கிள் சுற்றுக் காவல்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன – என்றார்.

வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவில் போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் விசாரணைக்கு வருமாறு இளைஞனை அழைத்துக் கடுமையாகத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டுக் குறித்து செய்தியாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர். "சம்பவம் தொடர்பில் கொழும்பிலுள்ள தலைமையகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தலைமையக அறிவுறுத்தலுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்" என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். பொலிஸாரால் தாக்கப்பட்டார் என்று கூறப்படும் இளைஞர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(உ-4)

## இலங்கையின்

பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பன்னாட்டு நீதிபதிகளை அழைத்து வந்து அவர் முன்பாக விசாரணை நடத்தப்படுமாக இருந்தால் அது சரியான செயலாக அமையும். எமது மதிப்பைப் பாதுகாப்பதற்கு இதனைச் செய்ய வேண்டியது அவசியமாகும். அதற்காக எமது நாட்டு நீதிமன்றங்களாலும் இந்த விசாரணைகளைச் செய்யமுடியாது என்று பொருளல்ல. போர்க் குற்றங்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை எமது நாட்டில் எங்களால் செய்ய முடியும். ஆனால் இனவாத, மதவாத சக்திகள் அவற்றுக்கு தடை அமைத்து வருகின்றன. அவர்களைத் தோற்கடித்து நாங்கள் முன்செல்வோம்.

இந்த முயற்சிக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஹுசேன் உதவி செய்யவேண்டும். நாட்டிலுள்ள பாசிசவாத சக்தி தொடர்பாக ஹுசேன் தனது உரையில் குறிப்பிடத் தவறியிருக்கிறார். இவ்வாறான சக்திகளை செயலிழக்கச் செய்ய வேண்டும் என்பதை ஏன் அவர்களால் கூறமுடியவில்லை? பன்னாட்டுச் சமூகமும் இதனை ஏற்றுக்கொள்ளாதிருந்தால், இனவாதிகளின் கருத்துக்கள் மற்றும் விசாரணைகளை முடக்குவதற்காக அவர்கள் கொடுத்துவரும் நெருக்கடிகள் நியாயமானதாகிவிடும் – என்றார்.

(வ-5)

## 3 படையினரை

ஜூரிகள் முன்னிலையில் நேற்று சாட்சியமளித்த இருவரில் ஒருவர், தனது மகன் மற்றும் மகளின் கொலையை நேரடியாகப் பார்வையுற்ற சாட்சியாகும். மற்றையவர் தனது குடும்பத்தினர் ஏழு பேரை இரத்த வெள்ளத்தில் பார்த்த சாட்சியாகும்.

இதன்போது முதலாவதாகச் சாட்சியமளித்துக் கொண்டிருந்த பெண், தன் பிள்ளைகளின் படுகொலைகள் தொடர்பில் விபரிக்கும் போது, நீதிமன்றத்தில் மயங்கி வீழ்ந்தார். இதையடுத்து, நீதிமன்றத்தில் பரபரப்பு ஏற்பட்டது. மீண்டும் அரை மணித்தியாலத்தின் பின்னர் அவரது சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

எனது ஊர்ப்பக்கம் பலமாக வெடிச்சத்தம் கேட்டபோது, வீட்டுக்கு விரைந்தேன். அங்கு தனது நிறை மாத கர்ப்பிணியான மனைவி உட்பட 7 பேரை உயிரிழந்த நிலையில் கண்டேன்.

அத்துடன், இராணுவத்தினரே அவர்களை சுட்டுக்கொன்றதாக சம்பவத்தைக் கண்டவர்கள் கூறினார்கள்– என்றார் நேற்று சாட்சியமளித்தவர்களில் ஒருவர்.

இந்த வழக்கு தொடர்பில் நீதிமன்றத்தில் முற்பட்ட ஆறு படையினரில் மூவர் சாட்சியாளர்களால் தனித்தனியே இதுவரை அடையாளம் காட்டப்பட்டனர். மேலும், எதிர்வரும் திங்கட்கிழமை வரை சாட்சி விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டது.

(வ)

## சித்திரைப்

சரியான முறையில் செய்வதற்கு கால அவகாசம் தேவை. அந்தக் கால அவகாசத்தை வழங்காமல் தற்போதே தேர்தலை நடத்துமாறு கூறுகின்றனர். தேர்தலைத் தாம தப்படுத்துவதாக அரசியல் பரப்புரை செய்வோர், அரசு அச்சத் தில் உள்ளதாகக் கூறுகின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தத் தேர்தலை எதிர்கொள்வதற்கு அச்சப்படவில்லை.

மைத்திரிபால சிறிசேன, பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்காவிட்டால், எந்தவொரு வேட்பாளருக்கும் மகிந்த ராஜபக்சவின் அரச இயந்திரத்தைத் தோற்கடித்திருக்க முடியாது போயிருக்கும். மகிந்த ராஜபக்சவின் அரச இயந்திரத்தை தோற்கடித்து 19ஆவது திருத்தச் சட்டத்தை மைத்திரிபால சிறிசேனவே கொண்டுவந்தார். பதவிக்கு வந்த பின்னர் ஏனையோர் நிறைவேற்று அதிகாரத்தை மேலும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வார்கள். ஆனால் மைத்திரிபால சிறிசேன அதிகாரத்தைக் குறைத்துக் கொண்டுள்ளார் – என்றார்.

(வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வடக்கில் சில பகுதிகளில் இன்று மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை வடக்கு மாகாணத்தில் சில பகுதிகளுக்கு மின் விநியோகம் தடைப்படும்.

இதில் டச்சு வீதி, மீசாலை, வாகையடி, மயிலங்காடு, குப்பிளான், பொன்னாலை, காரைநகர், காரைநகர் இராணுவ கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும், வன்னிப் பிரதேசத்தில் புதூர், சிலாவத்தை, உடுப்புக் குளம், அளம்பில், குமுழமுனை, செம்மலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், கரு நாட்டுக்கேணி, கொக்கிளாய், கிளிநொச்சி நகரம், திருநகர், இரணைமடுவிலிருந்து கொக்கா வில் வரைக்கும், மத்திய வங்கி, எஸ்.எப். எச்.கியூ. இரணைமடு, மாஸ் அக்ரிவ், யுனிச் செலா, பொறியியல்பீடம், விவசாயபீடம், நோர்த் கார்கில்ஸ் அக்ரி பூட்ஸ், 651 ஆவது படைப்பிரிவு முகாம். 652 ஆவது படைப்பிரிவு முகாம், இராணுவ பாசறை 1, இராணுவ பாசறை 2, இராணுவ பாசறை, 7 ஆவது படையணி இராணுவ முகாம், மக்கள்வங்கி, கிளிநொச்சி மாவட்ட செயலகம், கிளிநொச்சி லங்காசதோச, கார்கில்ஸ் பி.எல்.சி, கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக் களம், மீன்பிடிசமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும்,

வவுனியா பிரதேசத்தில் ஆதிவிநாயகர் கோயில் பிரதேசத்திலும், மன்னார் பிரதேசத்தில் பள்ளமடுவிலிருந்து கணேசபுரம் வரை, வெள்ளாங்குளம் இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடக்கு மாகாண மின்வழங்கல்கட்டுப்பாட்டுநிலைய மின் பொறியியலாளர் தெரிவித்தார்.

(வ-ரி)

## மரண அறிவித்தல்

### திருமதி கோமளம் ஐயாத்துரை



காரைநகரைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோமளம் ஐயாத்துரை கடந்த (25.06.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-சின்னாச்சி தம்பதியரின் மருமகளும் ஜெகதீஸ்வரன்(அமெரிக்கா), ஜெயலட்சுமி(சுவிஸ்), ஜெகநாதன் ஆகியோரின் அன்புத் தாயும் கிஸ்ணவேணி, மோகனதாஸ், பர்வதகுமாரி ஆகியோரின் அன்பு மாமியும் அனுசிகா, அபிசிகா, பானுஜா, நிரோஸ், நிவாஸ், ஜஸ்நிதா, சானுஜன், விதுசன், தர்சன் ஆகியோரின் பேர்த்தியும் சரஸ்வதி, அன்னம்மா, மாணிக்கதேவி, கமலா ஆகியோரின் சகோதரியும் கார்த்திகேசு காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, நாகம்மா மற்றும் தில்லைநாதன், பாக்கியம், சுப்பிரமணியம், மகேந்திரன், மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

தகவல்:
மோகன் ஜெயலட்சுமி
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தனலட்சுமி தர்மலிங்கம்



யாழ்.சாவகச்சேரி, கற்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி தர்மலிங்கம் 30.06.2016 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் - பரமரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், சுமதியின் (சுவிஸ்) அன்புத் தாயாரும், ஈசனின் (சுவிஸ்) அன்பு மாமியாரும், கீர்த்தனா, நர்த்தனா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகளிர் கல்லூரி வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

071 993 9429, 076 986 9198,
+4131 992 0917

762474)
(11,17,18)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சிவசம்பு

(அளவெட்டி மேற்கு,அளவெட்டி)

மலர்வு
02.07.1928



உதிர்வு
01.07.2016

அளவெட்டி மேற்கு அளவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிவசம்பு நேற்று (01.07.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தனலட்சுமியின் அன்புக் கணவரும் சின்னம்மா(பிரான்ஸ்), காலஞ்சென்ற பரிமளம்(குஞ்சு) மற்றும் நடராஜா காலஞ்சென்றவர்களான பொன்னையா, கந்தசாமி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மகேஸ்வரன்(பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரன், விக்கினேஸ்வரன் மற்றும் பரமேஸ்வரன் (முருகன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் யசோதா (பிரான்ஸ்), சிறீயோகி ஆகியோரின் அன்பு மாமனும் சுமன், நினுசா, நினுசன் (பிரான்ஸ்), ரேணுகா, குணா, சிந்துஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2016) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி மேற்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி
### பாக்கியம் மார்க்கண்டு



நல்லூரைப் பிறப்பிடமாகவும் நாவலடி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் மார்க்கண்டு கடந்த (29.06.2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வர்களான கந்தையா -பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா, வள்ளியம்மை, சின்னம்மா, பரிமளம் ஆகியோரின் அன்புச் சகோ தரியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, தில்லையம்பலம், சின்னத்துரை மற்றும் இராமலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், மனோரஞ்சிதம், கனகேஸ்வரன், ஜெகதீஸ்வரன் (லண்டன்), நகுலேஸ்வரன் (பெல்ஜியம்), கிருபேஸ்வரன் (லண்டன்), விஜயறஞ்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவலிங்கம், ஜெசிந்தா, ஜெயக்குமாரி (லண்டன்), மங்கையற்கரசி (பெல்ஜியம்), ஜெயப்பிரதா (லண்டன்), செல்வராசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், தனோஜன் (பெல்ஜியம்), தனோஷியா, வினோஜன், தாகிஜன், தர்றுஜன், ஜெபனியா, எப்ஸியா, அஜய், விதுசன், அஸ்மிதா (லண்டன்), மிதுலஷ்சன், சலக்ஷன், கயூட்சன், சிரோஜன், சஞ்சயன் (பெல்ஜியம்), அக்ஷயன், அகிஷன், ஆருஜன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் 113, கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

113, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்நடத்தைக்கு முயன்ற ஆசிரியருக்கு மறியல் நீடிப்பு

தென்மராட்சி, ஜுலை 2

பாடசாலை மாணவியிடம் துர்நடத்தைக்கு முற்பட்டார் என குற்றஞ்சாட்டப்பட்ட ஆசிரியரையும் அதனை மூடி மறைத்தனர் எனக் கைது செய்யப்பட்ட நான்கு பேருக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்திலுள்ள பாடசாலை யொன்றில் விசேட வகுப்புக்கு வந்த மாணவியிடம் வகுப்பு முடிந்த பின்னர் மேல் மாடிக்கு அழைத்துச் சென்று ஆசிரியர், மாணவியிடம் துர்நடத்தைக்கு முற்பட்டார் என்று குற்றஞ்சாட்டது. சம்பவத்தை பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர் (பெண்) இரு ஆசிரியைகள் ஆகியோருக்கு மாணவி தெரிவித்த போதிலும், சம்ப வத்தை மூடி மறைத்துள்ளனர் என்று பொலிஸாரால் குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக மாணவியின் தாயார் கொடுத்த முறைப்பாட்டையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு துர்நடத்தைக்கு முற்பட்ட ஆசிரியரையும் மூடி மறைக்க முயன்ற பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர் மற் றும் இரு ஆசிரியைகள் உட்பட ஐந்து பேரை நீதிமன்றில் முற்படுத்தியபோது, 5 பேரையும் விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்த சேகரன் உத்தரவிட்டிருந்தார்.

பொலிஸார் மேற்கொண்ட தொடர் விசார ணைகளில் சம்பவத்தை வெளியே வர விடக்கூடாது என பாடசாலை அபிவிருத் திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் என் பன கூட்டங்களை வைத்து பாடசாலை சமூகத்துக்கு அறிவுறுத்தியது தெரியவந் தது. இதனையடுத்து பாடசாலை அபி விருத்திச் சங்கச் செயலாளர் மற்றும் உறுப்பினர் ( இருவரும் பாடசாலையின் பழைய மாணவர்கள் என்பதோடு தற் போது வேறு பாடசாலைகளின் அசிரியர் களாகவுள்ளனர்) ஆகியோரையும், பழைய மாணவர் சங்கச் செயலாளர் மற் றும் பாடசாலை ஆசிரியர் என மேலும் நான்கு பேரைக் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தியபோது, அவர்களையும் நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிவான் உத்தரவிட்டார்.

பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர், இரு ஆசிரியைகள் சார்பில் கடந்த புதன்கிழமை சட்டத் தரணிகளால் சமர்ப்பிக்கப்பட்ட பிணை மனுக்களை பரிசீலித்த நீதிவான் நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல அனுமதித்தார்.

வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது சந்தேக நபர்கள் நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான் பிணையில் சென்ற நால்வர் தவிர்ந்த ஏனைய 5 பேரையும் எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ-4,9)

## விற்பனைக்கு

Video கடைக்கான DVD Duplicator உம் சினிமா பட DVD களும் விற்பனைக்கு உண்டு.

077 330 2853

## வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கபடவுள்ள பெண்களிற்கான புடைவையகம் ஒன்றிற்கு பெண் வேலையாள்கள் தேவை.

தொடர்பு: 077 44 25321

## விற்பனைக்கு

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அருகில் கண்டி வீதியில் 2 பரப்புக் காணியுடன் கடை விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
077 991 9002, 4165676266

## தேவை

உள்ளூர் தொண்டு நிறுவனம் ஒன்றுக்கு வீடு வாடகைக்கு தேவை. யாழ் நகருக்கும் கச்சேரிக்கும் இடையில் பிரதான வீதியை அண்மித்ததாக இருப்பது விரும்பத்தக்கது. (J 2578) (14,17,18)

077 305 9683

## வேலையாள்கள் தேவை

கொழும்பில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய ஆர்வமுள்ள ஆண்கள் பார்சல் சேவிஸ் பதிவாளர் கடமைக்கு தேவை. உணவு, தங்குமிட வசதி உண்டு. (J 2577) (14,17,18)

021 492 3724

## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு விளையாட்டரங்க வீதியில் 5பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 077 9994655

நியத்த ஜய
வெற்றி வாரம் 475
திகதி 01.07.2016
வர்ணம் நீலம்
03 04 33 55 R
எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ 11,088,660/=
2016.07.05 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
Tel: 011 4 824 824

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 01.07.2016 | வெற்றி வாரம் 1998 | வர்ணம் சிவப்பு
07 47 54 55
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 5,622,340 /-
2016.07.03 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

அடுத்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ.85,956,580/-
024
2016-07-01
ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்
P 12 14 15 44
கோடிபதி
தொ.பே: 011 4 062 002 / 011 4 062 062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு: 011 4 824 824

## பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் முதற்தர உணவகம் ஒன்றிற்கு உணவு பரிமாறுபவர் (வெயிற்றர்) பணிநிலைக்குரிய பணியாளர் தேவை. தகுதியுடையோர் கீழ் உள்ள தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நேரடியாக வருகை தரவும்.

077 6491027, 077 9400963

## மரண அறிவித்தல்

### சுப்பையா பாலசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்)



தோற்றம்: 17.03.1931
மறைவு: 01.07.2016

சுதுமலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா பால சிங்கம் நேற்று (01.07.2016) வெள்ளிக் கிழமை காலமாகி விட் டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-வள்ளியம்மை தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற தேவாம்பிகை யின் அன்புக் கணவரும், பூரணம் (ஓய்வு பெற்ற ஆசிரியை), சின்னாச்சிப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செல் லத்துரை (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மற்றும் திருச்செல்வம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஆகி யோரின் மைத்துனரும், சுபாகரன் (மருந் துக்கலவையாளர், பிரதேச வைத்திய சாலை அனலைதீவு), சுபாமா (அமெரிக்கா), சுபாமதி (முகாமைத்துவ உதவியாளர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), சுபா உமா (ஆசிரியர், மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தை யும், கவிதா (ஆசிரியை, புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி), பிரபாகரன் (அமெரிக்கா), ஜெயராஜ் (ஆசிரியர், ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை), நரேந்திரம் (மன்னார், பிரதேசசபை, மன்னார்) ஆகியோரின் மாமனும், பானுஜி, சுபறூபன், ஜீபனா, ஜீபகி, சதுர்த் தியன், சந்தோஷ், தேவனா, அக்சனா, அக்சயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மலை வேம்படி வீதி,
சுதுமலை கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## யா/யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை பழையமாணவர் சங்க பொதுக் கூட்டம்

**இடம்: யா/யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை**
**திகதி : 03.07.2016**
**நேரம்: முற்பகல் 10.00 மணி**

எமது பாடசாலையில் கல்வி கற்று இன்று இல்லத்தரசிகளாகவும் தொழில் புரிவோராகவும் சிறப்பிக்கும் அனைத்துப் பழைய மாணவியினரையும் இப் பொதுக் கூட்டத்தில் கலந்து சிறப்பித்து பாடசாலை அபிவிருத்திக்கான தமது கருத்துக்களை பகிர்ந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலை அதிபர். பழைய மாணவர் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி

கிளிநொச்சி தேசிய சேமிப்பு வங்கியின் உதவி முகாமையாளர் **திருமதி விஜயதேவி லோகேஸ்வரன்** அவர்களின் தந்தை

### வேலுப்பிள்ளை செல்லத்துரை

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளர், பணியாளர்கள்.
**தேசிய சேமிப்பு வங்கி, கிளிநொச்சி.**

## Diploma In Spoken English

### புதிய பிரிவு ஆரம்பம்

**02.07.2016 @ 3.00மணி**

(இப்பாடநெறியானது சனி, ஞாயிறு தினங்களில், மாலை 3.00 - 5.30 வரை இடம்பெறும்)

ஆங்கில மொழியைக் கற்பித்துப்பேச வைப்பதில் வடமாகாணத்தில் முதன்மை ஆங்கிலக் கல்லூரி

உலகத்தரம் வாய்ந்த சான்றிதழ்கள்

University of Cambridge (UK) Certificates
CITY & GUILDS (UK) Certificates
E-CITY Diploma in English Certificates

City & Guilds

அனுமதிகள் வழங்கப்படுகின்றன

**E-CITY COLLEGE OF ENGLISH**
இல.372, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ். 0773400418/0212217106

குருவே துணை

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

**முழுமையான நல வாழ்வுக்கு மனவளக்கலை யோகா மீண்டும் பயிற்சிகள் ஆரம்பமாகின்றன.**

காலம் : 02.07.2016 - 08.07.2016 வரை
தினமும் பி.ப 5.15 மணி - 7.15 வரை
இடம் : வண்ணார்பண்ணை - மனவளக் கலை மன்ற அறக்கட்டளை.
பயிற்சி வழங்குபவர் :- **மூத்த பேராசிரியர் அருள்நிதி இந்திரா** அவர்கள் (தமிழ்நாடு)

- ★ தோள்பட்டை வலி நீங்க
- ★ சர்க்கரை நோய் கட்டுப்பட
- ★ ஆஸ்துமாவிலிருந்து விடுதலைபெற
- ★ தொந்தி குறைய
- ★ மாதவிடாய் கருப்பை பிரச்சினைகள் தீர
- ★ படுத்தவுடன் தூங்க
- ★ இளமையுடனும்-முகப் பொலிவுடனும் இருக்க
- ★ முழங்கால் வலி நீங்க
- ★ கண்கோளாறு சரிவர
- ★ இடுப்புவலி, மூட்டுவலி பூரணகுணமாக
- ★ மூலநோய், குடற்புண்போக
- ★ கோபம், சினம், பதற்றம், அழுத்தம் குறைய
- ★ மன அமைதிபெற

**பயிற்சிகள்**
**காய கல்ப பயிற்சி - உடற்பயிற்சிகள் - தியானப்பயிற்சிகள் - அகத்தாய்வுப் பயிற்சிகள்**

மேற்படி பயிற்சிகள் 09.07.2016 - 16.07.2016 வரை மானிப்பாய் சந்தைக்கு அருகில் அமைந்துள்ள மானிப்பாய் தவமையத்திலும் நடைபெறவுள்ளது என்பதையும் அறியத்தருகின்றோம்.

*வருக பயின்று பயன்பெறுக*

யாழ்ப்பாண மனவளக்கலைமன்ற அறக்கட்டளை
கோவில் பிள்ளையார் வீதி,
1ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
077 123 5646 / 077 772 6732
077 736 8745

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரியோ ஒலிம்பிக் தொடர்; தொடரும் அச்சுறுத்தல்

ஜெனிரோ நகரின் கடற்கரையில் துண்டு துண்டாக வெட்டப்பட்ட மனித உடல் ஒன்று கண்டெடுக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ள நிலையில், தொடர் நடைபெறும் இடத்துக்கு அருகில் உள்ள கடற்கரையில் மனித உடலொன்று துண்டு துண்டாக வெட்டப்பட்டு வீசப்பட்டுள்ள சம்பவம் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒலிம்பிக் தொடருக்கு தீவிரவாத அமைப்புக்களால் அச்சுறுத்தல் நிலவிவரும் நிலையில் அதற்கான ஓர் அறிகுறியாகவே பலரும் இதைக் கருதுகின்றனர். ஆனால் ஒலிம்பிக் தொடருக்கும் இதற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். (ம)




# போலந்தை திரில்லாக வீழ்த்தி அரையிறுதியில் போர்த்துக்கல்

நடப்பு வருட யூரோ கிண்ணத் தொடரில் அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது போர்த்துக்கல் அணி.

தொடர், பிரான்ஸில் இடம்பெற்று வருகின்றது. நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் போர்த்துக்கல், போலந்து அணிகள் மோதின. ஆட்டத்தின் இரண்டாவது நிமிடத்தில் போலந்தின் தலைவர் ரொபேர்ட், தனது அணியின் கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தார். முதல் கோல் பதிவுசெய்த பிற்பாடு போர்த்துக்கல் அணியின் நட்சத்திர வீரரான ரொனால்டோவின் வியூகங்களை ரொபேர்ட்டும் வேறுசில போலந்து வீரர்களும் இணைந்து தகர்த்துக் கொண்டிருந்தனர். போலந்து, ரொனால்டோ மீது ஒரு கண் வைத்திருந்தது என்று சொன்னால் அது மிகையல்ல. 33 ஆவது நிமிடத்தில் 18 வயதேயான இளம் வீரர் சந்தேஸ் பதிலடி கொடுக்க, கோல் கணக்கு சமனானது. 1:1 என்று முடிந்தது முதற் பாதி. இரண்டாம் பாதியிலும் மேலதிக நிமிடங்களிலும் கோல்கள் பதிவாகாத நிலையில் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட முடிவில் 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது போர்த்துக்கல் அணி. (ம)



## வோஸ்னியாக்கி ‘அவுட்’

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் இருந்து அதிர்ச்சிகரமாக வெளியேற்றப்பட்டார் கரோலின் வோஸ்னியாக்கி.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஓர் ஆட்டத்தில் முன்னிலை வீராங்கனையான வோஸ்னியாக்கியை எதிர்த்து மோதினார் குஸ்னெட்சோவா. ஆட்டத்தின் முதல் செற் இழுபறியாக நீடித்துச் சென்றாலும், 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கினார் குஸ்னெட்சோவா. இரண்டாவது செற்றில் பெரிதான போராட்டம் இன்றி சரணடைந்தார் வோஸ்னியாக்கி. இதனால் அந்த செற் 6:4 என்றபுள்ளிகளின் அடிப்படையில் குஸ்னெட்சோவாவின் வசமாக முடிவில் அவர் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றார். (ம)

## பென்சிச் மோசமான தோல்வி

விம்பிள்டன் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்ட மொன்றில் தன்னை விட 218 நிலைகள் பின்தங்கிய வீராங்கனையிடம் தோல்வியடைந்து வெளியேறினார் பென்சிச்.

பன்னாட்டுத் தரப்படுத் தலில் 7ஆம் இடத்திலுள்ள பென்சிச்சை எதிர்த்து மோதினார் 225ஆம் இடத்திலுள்ள வீராங் கனையான ஜூலியா. ஆட்டத்தில் முதல் செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப் படையில் கைப்பற்றி வியக்க வைத்தார் ஜூலியா. இரண்டாவது செற்றிலும் ஜூலியா ஆதிக்கம் செலுத்திவந்த போது காயம் காரண மாக விலகுவதாக அறி வித்தார் பென்சிச். இதனால் ஜூலியா இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். (ம)



# ரவி சாஸ்திரிக்கு கம்பீர் கடும் எதிர்ப்பு

இந்திய அணியின் பயிற்சியாளர் விவகாரத்தால் மூண்டுள்ள வார்த்தைமோதலில் கங்குலிக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துள்ள கம்பீர், ரவிசாஸ்திரி தொடர்பாகக் கடும் விமர்சனங்களையும் முன்வைத்தார்.

இந்திய அணியின் பயிற்சியாளர் பதவி தனக்கு தரப்படாமை குறித்து ரவிசாஸ்திரி அதிருப்தி தெரிவித்திருந்தார். பயிற்சியாளரைத் தெரிவுசெய்ய நியமிக்கப்பட்ட குழுவின் தலைவரான கங்குலி, தனது பதவிக்கு நியாயம் செய்யவில்லை என்று குற்றம் சுமத்தினார். இதற்கு சாஸ்திரி, முட்டாள்களின் உலகில் வாழ்வதாகக் கங்குலி பதிலடி கொடுத்தார்.




தற்போது கங்குலிக்கு ஆதரவாகக் கம்பீர் களமிறங்கியுள்ளார்.

கடந்த 18 மாதங்களாக ரவி சாஸ்திரி இந்திய அணியின் இயக்குநராகவும் பயிற்சியாளராகவும் இருந்துள்ளார். அதில் அவர் செய்தது என்ன. எந்தவித சிறந்த அடைவுகளையும் இந்திய அணி எட்டவில்லை. இவரது காலத்தில்தான் இந்தியா பங்களாதேஷிடம் தொடரை இழந்தது. சொந்த மண்ணில் தென்னாபிரிக்காவிடம் தோற்றது. இரண்டு உலகக் கிண்ணங்களைத் தவற விட்டது. ஓர் உலகக்கிண்ணம் இந்தியாவில் நடந்தது. இந்திய அணிக்கு சிறந்த ஓர் பயிற்சியாளர் தேவை. தற்போது அது நடந்துள்ளது என கம்பீர் மேலும் தெரிவித்தார். (ம)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 2

**முரசுமோட்டை வி.க. தொடர்**

முரசுமோட்டை விளைபூமி வி. கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் முழங்காவில் விநாயகர் அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென். மேரிஸ் அணியும், மு.ப 10.30மணிக்கு ஸ்கந்தா அணியை எதிர்த்து முல்லைத்தீவு சென். யூட் அணியும், மு.ப 11.30 மணிக்கு வலைப்பாடு சென். ஆன்ஸ் அணியை எதிர்த்து ஜெயந்திநகர் அணியும், மதியம் 12.30 மணிக்கு வலைப்பாடு ஜெக மீட்பர் அணியை எதிர்த்து உருத் திரபுரம் உளவர் ஒன்றிய அணியும், பிற்பகல் 1.30 மணிக்கு உதய சூரியன் அணியை எதிர்த்து வட்டக்கச்சி இளந்தளிர் அணியும் பிற்பகல் 2.30 மணிக்கு உருத்திபுரம் அணியை எதிர்த்து பூநகரி இளந்தளிர் அணியும் மோதவுள்ளன.

**யாழ். தாச்சித் தொடர்**

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள், அரியாலை காந்தி சனசமூக நிலைய மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விக்கினேஸ்வரா அணியை எதிர்த்து மானிப்பாய் அனந்தா அணி மோதவுள்ளது.

**அம்பாள் வி.கழக கூடைப்பந்தாட்டம்**

அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு.

ஆண்கள் பிரிவில் காலை 7 மணிக்கு சென்றலைட்ஸ்சொக்ஸ் அணியை எதிர்த்து கே.ஸி. ஸி.ஸி. அணியும், காலை 7.55 மணிக்கு ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ்புளூஸ் அணியும் காலை 8.45 மணிக்கு யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் ஏ அணியும் மோதவுள்ளன. தொடர்ந்து பிற்பகல் 2.15 மணிக்கு கே.ஸி. ஸி.ஸி. அணியை எதிர்த்து கே.கே.எஸ். அணியும், பிற்பகல் 3.15 மணிக்கு சென்றலைட்ஸ் சொக்ஸ் ஏ அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் பி அணியும் மாலை 4.15 மணிக்கு ஜொலிஸ்ரார் ஏ அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் ஏ அணியும் மாலை 5.10 மணிக்கு சென்றலைட்ஸ் புளூஸ் ஏ அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணியும் மோதவுள்ளன.

பெண்கள் பிரிவில் காலை 7 மணிக்கு கே.ஸி.ஸி.ஸி. அணியை எதிர்த்து சிவன் அணியும், 7.55 மணிக்கு பட்டபிளை அணியை எதிர்த்து ஜமகா அணியும், பிற்பகல் 3.15 மணிக்கு ஜமகா அணியை எதிர்த்து பமிலியன்ஸ் அணியும், மாலை 4.30 மணிக்கு சிவன் அணியை எதிர்த்து இன்டிப்பென்டன் அணியும் மோதவுள்ளன. ஆண்கள் பிரிவு ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலிலும் பெண்கள் பிரிவு ஆட்டங்கள் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் நடைபெறவுள்ளன. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலந்துரையாடல்

கரணவாய், ஜூலை 2
யாழ். மாவட்ட மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று நடைபெறவுள்ளது.
கொக்குவில் இந்துக் கல்லூரியில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள குறித்த கலந்துரையாடலில், எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள மாகாணமட்டப் போட்டிகள் பற்றிய விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படும்.
(ம-108)

## காலிறுதியில் ஆலடி சிந்து

யாழ்ப்பாணம், ஜூலை 2
யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் தொடரில் ஆலடி சிந்து அணி காலிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
அரியாலை காந்தி சன சமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தக் காலிறுதியாட்டத்தில் புதுமடம் வைகறை அணியை எதிர்த்து உடுவில் ஆலடிசிந்து அணி மோதியது. இதில் ஆலடி சிந்து அணி 7:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம-23)



# தேசியமட்ட சாதனையாளர்களை கௌரவித்தது புதுக்குடியிருப்பு மத்தி.

முல்லைத்தீவு, ஜூலை 2
புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்து தேசியத்தில் சாதித்த வீரர், வீராங்கனைகளை குறித்த கல்லூரியின் நிர்வாகமும், பழையமாணவர் சங்கமும் இணைந்து விழாவெடுத்து கௌரவித்துள்ளன.
புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் அதிபர் செ.இரவீந்திரராசா தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நேற்றுமுன்தினம் குறித்த கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது. நடப்பு வருட குத்துச்சண்டைப் போட்டியில் தங்கம் வென்ற எம். சர்மிலன், கடந்த வருட குத்துச்சண்டைப் போட்டியில் தங்கம் வென்ற வை. நிதர்சனா, கே. கனிசியா, வெள்ளிப் பதக்கம் வென்ற எஸ். டிலக்சனா, ஜி. ஜெகதீஸ்வரன், வெண்கலம் வென்ற பி. ரூபன், கே. கலையரசி, எஸ். சுதாகர், 400 மீற்றர் தடை தாண்டலில் வர்ணச் சான்றிதழ் வென்ற எஸ். விதுர்சன் ஆகிய வீரர், வீராங்கனைகளே அவ்வாறு கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முகாமைத்துவ வணிகபீட விரிவுரையாளர் கலாநிதி சி. ராஜ்உமேஸ் கலந்து கொண்டார். (ம-ரி7)

# சிவன் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 2
நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.
கழுகுகளின் மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் சிவன் அணியை எதிர்த்து மட்டக்களப்பு டிஸ்கோ அணி மோதியது. 8 வீரர்கள் பங்குபற்றும் 6 பந்துப்பரிமாற்றங்கள் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்திருந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டிஸ்கோ அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி துடுப்பெடுத்தாடிய சிவன் அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக தர்சன் 17 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் மட்டக்களப்பு டிஸ்கோ அணியின் சார்பில் அபி, சஞ்சீவன் இருவரும் தலா இரு இலக்குகளை வீழ்த்தினர்.
45 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய டிஸ்கோ அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 43 ஓட்டங்களைப் பெற, ஓர் ஓட்டத்தால் திரில் வெற்றிபெற்று சம்பியனானது சிவன் அணி. அதிகபட்சமாக ஆனந் 12 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சாவகச்சேரி சிவன் அணியின் சார்பில் தீபன் 3 இலக்குகளையும் தர்சன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக சாவகச்சேரி சிவன் அணியின் தர்சன் தெரிவானார். (ம-23)

## உழவர் ஒன்றியத்தின் கால்பந்தாட்டத் தொடர்

கிளிநொச்சி, ஜூன் 2
உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகம் கால்பந்தாட்டத் தொடர் ஒன்றை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளது.
உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக மைதானத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தத் தொடரில் கலந்துகொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் தமது பதிவினை எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-23)

# யங்கம்பன்ஸை வீழ்த்தியது சென். அன்ரனிஸ்

கரணவாய், ஜூலை 2
நெற்கொழு கழுகுகள் வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற மூன்றாம் சுற்று ஆட்டமொன்றில் மணற் காடு சென். அன்ரனிஸ் அணி வெற்றிபெற்றது.
கழுகுகளின் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சென். அன்ரனிஸை எதிர்த்து மோதியது யங்கம்பன்ஸ் அணி. 3 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்து அன்ரனிஸின் சார்பாக கோல் கணக்கை ஆரம்பித்துவைத்தார் அலெக்ஸ். 12 ஆவது, 30 ஆவது நிமிடங்களில் சுஜீபன் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவு செய்ய 3:0 என்று ஆதிக்கம் செலுத்தியது அன்ரனிஸ். 44ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவு செய்தது யங்கம்பன்ஸ். வேறெந்த கோல்களும் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. 48 ஆவது நிமிடத்தில் சுஜீபன் தனது ஹற்றிக் கோலைப் பதிவுசெய்தார். முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் யங்கம்பன்ஸை வீழ்த்தியது அன்ரனிஸ். (ம-108)



# முகுருசா அவுட்

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறினார் முகுருசா.
கடந்த மாதம் நடைபெற்ற கிராண்ட்ஸ்லாம் தொடரான பிரான்ஸ் தொடரில் முகுருசா சம்பியனாகியிருந்தார். கடந்த வருடம் நடைபெற்ற விம்பிள்டன் தொடரில் இறுதியாட்டம்வரை முன்னேறியிருந்தார். இதனால் நடப்பு வருட விம்பிள்டனிலும் முகுருசா எதையாவது சாதிப்பார் என்ற எதிர்பார்ப்புக்கள் மிகையாக இருந்தன. ஆனால் அவர் தரப்படுத்தலில் 124ஆம் இடத்திலுள்ள வீராங்கனையான செபேலோவாவிடம் 2:0 என்ற நேர் செற் கணக்கில் தோல்வியடைந்தார். இந்த ஆட்டம் வெறும் 54 நிமிடங்கள் மட்டுமே நீடித்தது. (ம)



# ஆஸியின் வலையில் சிக்கினார் சமரவீர



ஆஸ்திரேலிய அணியின் குறுகிய கால துடுப்பாட்ட ஆலோசகராக இலங்கை அணியின் முன்னாள் வீரர் சமரவீர நேற்று நியமிக்கப்பட்டார்.
ஆஸ்திரேலிய அணி இலங்கைக்கு சுற்றுப் பயணம் செய்து மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரிலும், ஐந்து ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடரிலும், இரண்டு ரி-20 ஆட்டங்கள் கொண்ட தொடரிலும் விளையாடவுள்ளது. முதல் டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்த நிலையில் குறுகிய காலத்துக்கு அந்த அணியின் துடுப்பாட்ட ஆலோசகராக சமரவீர நியமிக்கப்பட்டார்.
ஆடுகளப் புரிதல்கள், இலங்கையின் பலம், பலவீனம் என்பனவற்றைப் பற்றி அறிவதற்காகவே சமரவீரவின் நியமனம் இடம்பெற்றுள்ளது என்றும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.
அண்மையில் நடைபெற்ற ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் இங்கிலாந்தும், இலங்கையும் ஒரே பிரிவில் இடம்பெற்றிருந்தன. இந்தத் தொடரில் இலங்கையை வீழ்த்துவதற்காகவும் ஆடுகளப் புரிதல்களுக்காகவும் மகேலவை துடுப்பாட்ட ஆலோசகராக நியமித்திருந்தது இங்கிலாந்து. மகேலவின் இந்த நியமனத்துக்கு இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவரான திலங்க சுமதிபால தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார். தற்போது சமரவீர ஆஸியின் துடுப்பாட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட்டை விட்டே விலகுகிறார் சாஸ்திரி?

சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் உறுப்பினராகவுள்ள ரவிசாஸ்திரி, குறித்த பதவியிலிருந்து நேற்று விலகினார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் இயக்குநரான ரவிசாஸ்திரி தனக்கு அந்த அணியின் பயிற்சியாளர் பதவி கிடைக்கும் என்று எதிர்பார்த்தார். ஆனால் பயிற்சியாளராக கும்ளே நியமிக்கப்பட்டார். இதனால் விரக்தி அடைந்த ரவிசாஸ்திரி பயிற்சியாளரை தெரிவுசெய்ய நியமிக்கப்பட்ட குழுவின்மீது அதிருப்தி தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட்டில் அவர் ஓரங்கட்டப்பட்ட நிலையில் தற்போது அவர் சர்வதேச கிரிக்கெட் சபையின் உறுப்பினர் பதவியிலிருந்தும் விலகியுள்ளார். (ம)

CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு



10th Batch start on :- 09.07.2016
100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி
வேலைவாய்ப்பு உத்தரவாதம் * (*Conditions apply)
iCS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி
யாழ்ப்பாணம்
076-7013060 , 021-7306000

வெளிவந்துவிட்டது
TECHNOLOGY BOOKS
தொழில்நுட்பவியலுக்கான புத்தகங்கள்
1. TECHNOLOGY MODAL PAPER (தமிழ்)
2. SCIENCE FOR TECHNOLOGY (தமிழ்)
3. இயந்திரவியல் தொழில்நுட்பம்
பொறியியல்முறை தொழில்நுட்பம்
4. உயிர் முறைமை தொழில்நுட்பவியல்
Part - I - II - III
மொத்தம் 06 வகைப் புத்தகங்கள்
அனைத்தும் புத்தம் புதிய வெளியீடுகள்
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம் -021 222 9881



# இறுதியாட்டம் இன்று

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இங்கிலாந்து கிண்ணத்தை வெல்வது உறுதியாகிவிட்டதால் இந்த ஆட்டம் ஓர் சம்பிரதாயமான ஆட்டமாகவே பார்க்கப்படுகிறது.

முடிவடைந்த நான்கு ஆட்டங்களில் இங்கிலாந்து இரண்டில் வெற்றிபெற்றது. ஓர் ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது. ஓர் ஆட்டம் சமநிலையானது. இதன்படி இங்கிலாந்து 2:0 என்று முன்னிலையில் உள்ளது. இன்று இங்கிலாந்து வெற்றிபெற்றால் அந்த அணி 3:0 என்று கிண்ணம் வெல்லும். இலங்கை வெற்றிபெற்றாலும் இங்கிலாந்து 2:1 என்ற அடிப்படையில் கிண்ணம் வெல்லும். எனவே இந்த ஆட்டத்தில் இலங்கை பெரிதாக எதையும் சாதிக்கப்போவதில்லை. ஆனால் படுதோல்வியல்லாமல் கௌரவத் தோல்வி என்று குறிப்பிடவாவது வெல்ல வேண்டிய கட்டாயம் இலங்கைக்கு இருக்கத்தான் செய்கிறது. (ம)

# சசெக்ஸில் குலசேகர

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளரான குலசேகரவை இங்கிலாந்தின் கழக அணியான சசெக்ஸ் ஒப்பந்தம் செய்தது. இங்கிலாந்து கழக அணிகளுக்கு இடையில் ரி-20 தொடர் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்கும் சசெக்ஸ் அணி பங்களாதேஸின் இளம் வேகப்பந்து வீச்சாளரான ரகுமானை ஒப்பந்தம் செய்தது. ஆனால், ஐ.பி.எல். தொடரின் போது தொடைப்பகுதியில் ஏற்பட்ட காயத்தால் அவதிப்பட்டு வந்த ரகுமான் இங்கிலாந்து செல்ல தாமதமானது. இதனால் இலங்கை அணியின் குலசேக ராவை சசெக்ஸ் அணி நேற்று முன்தினம் ஒப்பந்தம் செய்தது. இருப்பினும் ரகுமானின் ஒப்பந்தத்தையும் அந்த அணி கைவிடவில்லை. (ம)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
No.15 1/2, Siriampiyady Lane,
(Above Sathosa SM)
Jaffna. Tel :021-2224550
Hotlines
0770365728
0777585913, 0777222422, 071429935
Batch 1 : 04.07.2016
Batch 2 : 06.07.2016
Batch 3 : 09.07.2016
Batch 4 : 11.07.2016
கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

பாராட்டி வாழ்த்துகின்றோம்
எமது திணைக்களத்தில் 08 வருடங்கள்
பாதுகாப்பு உத்தியோகத்தராக
கடமையாற்றிய
திரு. A.R.மார்ஷல்
அவர்கள் 01.07.2016 ஆம் திகதி முதல் பாதுகாப்பு பரிசோதகராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்றுச் சிறப்புடன் வாழ மனதாரப் பாராட்டுகின்றோம்.
வாழ்த்துவோர்
பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்,
யாழ்.பல்கலைக்கழகம்.



தமிழ் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்
தமிழ் இணையக்கல்விக் கழகத்தினூடாக
தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில்
B.A. தமிழ் சிறப்புப் பட்டதாரியாகும் வாய்ப்பு
2016 - 2017 கல்வியாண்டுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகியுள்ளன.
பதிவு செய்யும் இறுதித் திகதி 10.07.2016 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டது இப் பட்டம் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவாலும் இந்திய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவாலும் (University Grant Commission) அங்கீகரிக்கப்பட்டது.
தமிழ் இணைய கல்விக் கழகம்
பாரதி இன்ஸ்ரிரியூட்
கேணியடி வீதி, மீசாலை மேற்கு, மீசாலை.
077 805 1173

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
2016, Day
இரு பிரிவினருக்கும்
மாபெரும் கருத்தரங்கு
தமிழ்
N. சத்தியவேந்தன்
[B.A. (Hons) mphil. Tamil. Spl]
ஆரம்பம் : 04.07.2016 திங்கள்
நேரம் : 8.00 a.m
தொடர்ந்து ஐந்து நாள்கள் நடைபெறும்.
வெளி மாணவர்களும் பங்கு பற்றலாம்
உங்கள் அனுமதிகளை 03.07.2016 இற்கு முன் பெற்றுக்கொள்ளவும்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
aat [Sri Lanka]
Foundation, Intermediate, Final
[AA1, AA2, AA3]
Qualification :- G.C.E O/L 6 Passes
Medium - Tamil & English
Batch I :- Week end days
Batch II :- Week days
Note:- 2015ஆம் ஆண்டு G.C.E O/L பரீட்சை எடுத்த மாணவர்களும் இணைந்து கொள்ளலாம். பதிவுகளை முன்னர் மேற்கொள்ளவும்.
External Degree
யாழ். பல்கலைக்கழகம்
BA Part I, Final இற்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
Further Details:-
Jaffna College
Undergraduate Dept,
464, Hospital Road, Jaffna.
0212223382 / 0212229149

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.